மாதம் இரு இதழ்

# இது நம்தேசம்

தேசத்தின் உண்மைக் குரல்

பார்வை 01 | பாதை 01 | 01.08.2012 - 13.08.2012 | 15.00

### தமிழ் தேசிய மக்கள் முன்னணி

## மக்கள் மயப்படுத்தப்பட்ட அரசியல் பயணமே எமது நோக்கம்!

● கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

படிப்படியாக மக்கள் மயப்படுத்தப் பட்ட அரசியல் பயணமாகவே எமது பாதை




யினை நாம் விரும்புகின்றோமென தமிழ் தேசிய மக்கள் முன்னணியினது தலைவர் பொன்னம்பலம் கஜேந்திரகுமார் தெரிவித்தார்.

இது நம்தேசம் இதழுக்கு வழங்கிய செவ்வியில் இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் விபரிக்கையில் ஒரே கொள்கையினையும் அதற்கான போராட்டத்தையும் நம்பியிருந்த நிலையில் நாமாகவே சில விடயங்களை அணுகும் நிலையொன்று தற்போது ஏற்பட்டுள்ளதால், அடிமட்டத்திலிருந்தே மெதுவாகவே எல்லாவற்றையும் கட்டியெழுப்ப வேண்டியுள்ளது. ஆனால் அதை நாம் தொடர்ந்தும் செய்கின்றோம், செய்வோம், எம்மை பொறுத்தவரை தேர்தலும் பதவியும் இலக்கல்ல, எமது மக்களை சரியான அரசியல் இலக்கில் கொண்டு செல்ல வேண்டும். கடந்த மூன்று வருடங்களுள் சரியான மாற்றம் ஏற்பட்டுள்ளது. ஆனால் இது போதாது. ஒரு சில ஊடகங்கள் தவிர பல ஊடகங்கள் எமக்கு பங்களிக்கவில்லை.

எம்மை பொறுத்தவரை மிக மோசமாக தேசத்தை

(14ஆம் பக்கம் பார்க்க)


### போராடுவோம்...



தமிழ் அரசியல் கைதி நிமலரூபனது படுகொலை மற்றும் ஏனையவர்கள் மீதான தாக்குதல்களை கண்டித்தும் அவர்களது விடுதலையை வலியுறுத்தியும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினது கண்டன ஆர்ப்பாட்டம் நெல்லியடியில்...

## போர்க் கைதிகள் மற்றும் அரசியல் கைதிகள் விடுதலை நல்லிணக்கத்திற்கு முன்னுதாரணமாகலாம்

நாடு முழுவதிலும் குற்றச்சாட்டுக்கள் ஏதும் சுமத்தப்படாது தடுத்து வைக்கபட்டுள்ள தமிழ் இளைஞர்கள், யுவதிகளை விடுவிக்க கோரும் குரல்கள் வலுப்பெற்றுவருகின்றது. யுத்தம் முடிவுக்கு வந்துவிட்டதாக இலங்கை அரசு அறிவித்த 38 மாதங்கள் கடந்துள்ளன. நாட்டில் ஜனாதிபதியே இவ்வறிவிப்பினை விடுவித்திருந்தவருமாவார். ஆனால் 38 மாதங்கள் கடந்தும் கூட இன்று வரை ஆயிரக்கணக்கான இளைஞர்கள் யுவதிகள் தடுத்து வைக்கபட்டுள்ளனர்.



சிங்கள சிறைகளுள் தடுத்து வைக்கப்பட்டவர்களை வெறுமனே அரசியல் கைதிகளென அடையாளப்படுத்துவது பொருத்தமற்றதென்கின்றனர் ஆய்வாளர்கள். வன்னி யுத்த நடவடிக்கைகளின் போதும் அதே போன்று ஏனைய தமிழர் தாயகப்பகுதிகளிலும் களமுனைகளிலும் சரண் அடைந்தவர்கள் மற்றும் கைது செய்யப்பட்டவர்கள் போர் கைதிகளே. உலகளாவிய ரீதியில் போர் கைதிகளது நலன்கள் தொடர்பில் சர்வதேச நியமங்கள் அமுலிலுள்ளன. ஆனால் இலங்கை அரசோ அவற்றை கிஞ்சிதமேனும் கவனத்தில் கொள்ள மறுத்தே வருவதாக அவதானிகள் மேலும் கூறுகின்றனர்.

யுத்தகள முனைகளிற்கு அப்பால் சந்தேகத்திலோ தகவல்களின் அடிப் படையிலோ கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலிலுள்ள கைதிகளை அரசியல் கைதிகளென வகைப்படுத்துவதே சில வேளைகளில் சரியாக இருக்கலாம். ஆனாலும் இலங்கை அரசோ இரு தரப்பு கைதிகளையும் ஒரே வகைப்படுத்தலின் கீழ் தடுத்து வைத்திருப்பதால் அவர்களிற்கு கிடைக்கவேண்டிய உரிமைகள் பல இல்லாமலே போய்விடுகின்றது. வன்னி இறுதி யுத்த நடவடிக்கையின் போது களமுனைகளில் சரண் அடைந்தவர்கள் மற்றும் கைது செய்யப்பட்டவர்களது உண்மையான புள்ளி விபரங்கள், அரசை தவிர வேறு எவரிடமுமில்லை. பெருமளவிலான முன்னாள் விடுதலைப்புலிகள் போராளிகளை அவர்களது குடும்பத்தவர்கள் தாங்களாகவே முன்வந்து பாதுகாப்பு தரப்பினரிடம் ஒப்படைந்திருந்தனர். ஆனால் அவ்வாறு ஒப்படைக்கப்பட்டவர்கள், படையினரால் அங்கிருந்து வாகனங்களில் ஏற்றிச்செல்லப்பட்டவர்களென பலர் பற்றி தற்போது தகவல்களேதுமில்லை.

அரசிற்கும் - கூட்டமைப்பினருக்குமிடையே "சும்மா" ஒரு வருடமாக இழுபறிப்பட்டு சென்ற பேச்சுக்களின் போது கூட, தடுத்துவைக்கப்பட்டுள்ள எஞ்சியவர்கள் தொடர்பான விபரங்களைப் பெறக்கூட முடியாது விட்டது. கூட்டமைப்பிற்கு கண்ணாமூச்சியாடியே காலத்தை அரசு இன்று வரை ஓட்டிக்கொண்டிருப்பது தொடர்பில், அவர்களுள் ஒரு தரப்பு கவலை கொண்டுள்ளது.

இவ்விவகாரங்களில் கூட கடும் போக்கு நிலைப்பாட்டை வெளிப்படுத்த தலைமை பின்னிற்பதாக அவர்கள் வருத்தங்கொண்டுள்ளனர்.

தடுப்பிலுள்ள போர்க் கைதிகள் மற்றும்

(14ஆம் பக்கம் பார்க்க)

# சம்பந்தனின் சிங்கக் கொடியேற்றம்

# தமிழ்த் தேசியத்தை அழிப்பதற்கான சதிமுயற்சி

ஐக்கியதேசியக் கட்சியும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் இணைந்து நடாத்திய மேதினத்தில் சம்பந்தன் சிங்கக் கொடியேற்றி பேரினவாதிகளையும் இந்திய - அமெரிக்க எஜமான்களையும் திருப்தி செய்திருக்கிறார்.

இந்துக் கடவுள் அம்பாளின் வாகனமாக சிங்கம் இருப்பதாலும் இராஜதந்திரக் காரணங்களுக்காகவும் அதனை விருப்பத் தோடு ஏற்றியதாக அதற்கு வேறு விளக்கம் கொடுத்திருக்கிறார். இக் கொடியேற்றத்தின் பயன் தற்போது மக்களுக்குத் தெரியா விட்டாலும் எதிர்காலத்தில் தெரியவரும் என்றும் கூறியிருக்கிறார்.

சமகால அரசியல்

— சூரியவேந்தன்

ஆனாலும் தமிழ் மக்களின் மத்தியிலும், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற கட்சிகளுக்கு மத்தியிலும் தமிழரசுக்கட்சிக்குள்ளும் இக் கொடியேற்றத் திற்கு பலத்த எதிர்ப்பு ஏற்பட்டுள்ளது.

மக்கள் கூடாத வார்த்தைகளினால் பேசும் அளவிற்கு இவ் எதிர்ப்பு வளர்ந்துள்ளது. கூட்டமைப்புக்குள் சம்பந்தனையும் சுமந் திரனையும் தவிர வேறு எவரும் இக் கொடி யேற்றத்தை ஆதரிக்கவில்லை. இதன் இதற் கான பலத்த எதிர்ப்பு காரணமாக மாவை சோனாதிராஜா உடனடியாகவே மன்னிப்புக் கேட்டிருந்தார். ஆனாலும் சம்பந்தன் இம் மன்னிப்பு தேவையற்றது என கூறியிருக்கிறார் சம்பந்தன் மக்களிடம் வருவதில்லை. அதனால் மக்களைப் பற்றி கவலைப்படாமலே கருத்துகளை கூறுகின்றார். ஆனால் மாவையின் நிலைமை அவ்வாறானதல்ல கொடியேற் றத்தை ஏற்றுக் கொண்டு மக்களிடம் செல்ல முடியாது என்பது அவருக்கு நன்றாகவே தெரி யும். கூட்டமைப்புக்கு வெளியே இலங்கை தேசியத்தை தூக்கிப்பிடிப்பவர்க ளும் ஐக்கிய தேசியக்கட்சி, கூட்டமைப்பு என இரு தோணிகளில் கால் வைத்திருப் போரும் சிங்கக்கொடி ஏற்றத்தை ஆதரித் திருக்கின்றனர்.

தமிழ்ப் பத்திரிகை ஒன்றின் ஓர் முக்கியஸ்தர் மற்றும் கொழும்பு பல்கலைக்கழக பேராசி ரியர் என்போர் இதற்குள் அடக்கம். இதற்கு அவர்கள் இது ஒரு ராஜதந்திரம் என கூறுகின்றனர். அந்த பத்திரிகையின் முக்கியஸ்த்தர் தமிழ் மக்கள் இலங்கை என்கின்ற ஒரு நாட்டிற்குள் அரசியல் தீர்வு காண்பதற்கு தயார் என்பதை வெளிக்காட்ட உதவும் ராஜதந்திரம் என இதனை வர்ணித்திருக்கின்றார். குறித்த பத்திரிகையில் அவர் எழுதிய கட்டுரைக்கூடாக தனது இக் கருத்தினை கூறியிருக்கிறார். ஏற்கனவே கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக்கட்சி இணைந்த மேதினத்தை இவர் வரவேற்று கட்டுரை எழுதியிருந்தார். இவரது இக்கருத்துப்பற்றி ஆச்சரியப்படுவதற்கு எதுவும் இல்லை. அவரிடம் ஐக்கிய தேசியக்கட்சி - கூட்டமைப்பு இணைந்த வலுவான எதிர்க்கட்சி உருவாகும் என்ற கனவு இருந்தது. சரத்பொன்சேகாவின் மீள்வருகை அவற்றையெல்லாம் பொய்யாக்கியுள்ளது.

பேராசிரியர் கீதபொன்கலன் சிங்கள மக்களிடம் இருக்கும் தமிழ் இன எதிர்ப்பை குறைக்க இக் கொடியேற்றம் உதவியிருக்கிறது என்று கூறியிருக்கிறார். எத்தகைய ஆய்வுகளை செய்து அவர் இந்த முடிவுக்கு வந்தரோ தெரியவில்லை. இவர்கள் என்னதான் கருத்துக்களை கூறியிருந்தாலும் தமிழ்த் தேசிய அரசியல் ஆட்டம் காணக்கூடிய அளவிற்கு இந்த சிங்கக் கொடியேற்றம் பாதிப்பு செலுத்தியுள்ளது. இதனால் ஏற்பட்ட பாதிப்புகளாக பலவற்றை கூறலாம். அதில் முதலாவது சிங்கக்கொடி என்பது இலங்கைதீவின் பன்மைத்துவ சமுதாயத்தை பிரதிபலித்த ஒன்றல்ல. மாறாக சிங்கள தேசத்தின் மேலாதிக்கத்தை மட்டும் வெளிப்படுத்திய ஒன்றாகும். தேசியக்கொடி அரசியல் யாப்பு என்பவற்றிற்கு எப்போதும் ஒரு நடுநிலைத்தன்மை அவசியம். ஏனெனில் அவை ஒரு பிரதேசத்தில் வாழும் அனைத்து சமூகங்களையும் சமத்துவமாக பிரதிபலிக்க வேண்டியவை. ஆனால் இலங்கையை பொறுத்தவரை இப் பண்புகள் எதுவும் இல்லை. கொடியில் தமிழ்மக்களை அடையாளப்படுத்த சிறிய கோடு மட்டுமே உள்ளது அதுவும் வாள் ஏந்திய சிங்கம் அச்சமூட்டும் நிலையிலும் கோடு அதற்கு பணிந்து அடங்கும் நிலையிலுமே உள்ளது. இச் சமத்துவமின்மையால் இக்கொடி உருவாக்கத்தின் போது அதற்கான குழுவில் அங்கம் வகித்த செனட்டர் நடேசன் அதனை



கடுமையாக எதிர்த்திருந்தார். இக் குழுவினை விட்டும் வெளியேறியிருந்தார்.

தந்தை செல்வா இக்கொடியினை முழுமையாக நிராகரித்தார். கொடி அமுலுக்கு வந்தபோது அதனை நிராகரித்து யாழ்ப்பாண இராச்சியத்தின் கடைசி மன்னன் சங்கிலியனின் நந்திக் கொடியை தனது காரில் ஏற்றி கொழும்பு வீதிகளில் வலம் வந்தார். அவர் உயிருடன் இருந்த காலத்தில் நடைபெற்ற தமிழரசுக் கட்சிகளின் 12 மாநாடுளில் ஒரு மாநாட்டிலாவது சிங்கக் கொடி ஏற்றப்படவில்லை. இந்த உண்மைகள் சம்பந்தருக்கு தெரியாததல்ல. வேண்டுமென்றே உண்மைகளை திரித்துக் கூறி தமிழரசுக்கட்சி வரலாற்றில் சிங்கக் கொடியை எதிர்க்கவில்லை என கூறியிருக்கிறார் அவர் ஒரு தடவை தமிழரசுக் கட்சியின் வெள்ளி விழா மலரில் வெளிவந்த அமிர்தலிங்கத்தின் நீண்ட கட்டுரையை வாசிப்பது நல்லது.

சம்பந்தருடன் இணைந்து சுமந்திரனும் சிங்கக் கொடியேற்றத்தை நியாயப்படுத்தியிருக் கின்றார். சுமந்திரனின் நிலை புரிந்து கொள்ளக்கூடியதே. அவர் தமிழ்த்தேசிய அரசியலுக்கு அந்நியமானவர். கொழும்பில் பிறந்து வளந்தவர். தமிழ் அரசியலை அதற்கே உரிய பண்புகளோடு உணர்வு ரீதியாக பற்றிப்பிடிக்க அவரால் முடியாது. ஆனால் சம்பந்தன் அதனை நியாயப்படுத்துவது தான் மன்னிக்க முடியாத குற்றம்.

இரண்டாவது இக் கொடியேற்றத்தினால் தமிழ் மக்கள் ஒரு தனியான தேசம் என்ற வரலாற்று உண்மை அழிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளமையாகும். வரலாற்று ரீதியாகவே இலங்கை என்ற அரச அதிகாரக் கட்டமைப்புக்குள் தமிழ் மக்களுக்குரிய இடம் வழங்கப்படவில்லை. இதனால் தான் தியாகமும் வீரமும் நிறைந்த நீண்ட போராட்டத்தை மக்கள் நடாத்தியிருந்தனர். அவற்றினூடாக தமிழ் மக்கள் தனியான தேசம் என்பதை நிலைநாட்டியிருந்தனர். மக்களை கொத்துக் கொத்தாக கொலை செய்து பாரிய இன அழிப்பை மேற்கொண்டபோதும் தாம் ஒரு தனியான தேசம் என்பதை தமிழ்மக்கள் விட்டுக்கொடுக்கவில்லை. மே 18 இன் பின்னரான அனைத்து தேர்தல்களிலும் தமிழ்மக்கள் இந்த உண்மையை வெளிப்படுத்தியிருந்தனர். கூட்டமைப்புக்கு அளிக்கப்பட்ட வாக்குகள் வெறுமனவே தனிப்பட்டவர்களுக்காக அளிக்கப்பட்டவாக்குகள் அல்ல. மாறாக நாம் ஒரு தனியான தேசமாக இருக்கின்றோம் என்பதை நிலைநாட்ட வழங்கப்பட்ட வாக்குகளே.

மே 18 அவல தினத்தை சிங்கள தேசம் மகிழ்ச்சிகரமான நாளாகவும் தமிழ்த்தேசம் துக்ககரமான நாளாகவும் அனுஷ்டித்தமை இரு தேசங்களாக உள்ளமையின் வெளிப்பாடுகளே. இன்று அனைத்து இனங்களையும் உள்ளடக்கிய இலங்கை தேசியம் என்பது நடைமுறையில் இல்லை. மாறாக சிங்கள, தேசியம், தமிழ்தேசியம், முஸ்லிம் தேசியம், மலையகத்தேசியம் என்பனவே நடைமுறையில் இருக்கின் றன. இலங்கை என்கின்ற அதிகார கட்டமைப்புக்குள் எல்லா இனங்களும் ஒன்றாக வாழவேண்டுமாயின் நான்கு தேசியங்களும் சமத்துவமாக இணைந்து கூட்டு தேசியத்தை உருவாக்கவேண்டும் என்பதே நிபந்தனையாக உள்ளது. அதுவே உண்மையில் இலங்கை தேசியமாக இருக்கும்.

இலங்கைத்தேசியம் சிங்களத்தேசியம், தமிழ்த்தேசியம், முஸ்லிம் தேசியம், மலையகத் தேசியம் என்பதாக இருக்க வேண்டும் இலங்கைத் தேசியம் சிங்களத் தேசியமாக இருக்க முடியாது.

தமிழ் மக்களுக்கு அவர்களின் அடையாளங்க ளுடன் கூடிய இடம் ஸ்ரீலங்காவின் அரச அதிகாரக் கட்டமைப்புக்குள் வழங்கப்படாமை யால் நீண்ட காலமாக இக்கட்டமைப்புக்கு வெளியேதான் தமிழ் மக்கள் இருக்கின்றனர். தமிழ் மக்களை சமத்துவமாக இணைத்தால் நாங்கள் இலங்கை என்ற அதிகார கட்டமைப்புக்குள் இருக்கத் தயார் என கூறிவருகின்றனர். நீண்ட போராட்டமும் இதற்காகவே நடைபெற்றது. இந்த வரலாற்று உண்மைகளை எல்லாம் மறந்து சிங்கள தேசத்தின் மேலாதிக்கத்தை வெளிப்படுத்தும் சிங்கக்கொடியினை தமிழ்த் தலைவர் ஒருவர் ஏற்றுவது சிங்கள தேசத்தின் ஆதிக்கத்துக்குள் தமிழ்த் தேசம் கரைந்து போவதற்கே வழி வகுக்கும். சிங்கள அரசியல் சக்திகளின் விருப்பமும் அது தான். சம்பந்தன் அந்த விருப்பங்களுக்கு துணைபோயிருக்கின்றார்.

மூன்றாவது தென்னிலங்கை அரசியல் சக்திகளின் போரின்பின்னரான எதிர்பார்ப்பை பூர்த்தி செய்வதாகும். அவர்களின் எதிர்பார்ப்பு தமிழ் மக்கள் ஒரு தேசமாக இருப்பதை இல்லாமல் செய்வதே தமிழ்மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்பட்ட நீண்ட காலப்போர் இதற்காகவே மேற்கொள்ளப் பட்டது. அந்தப் போர் இரண்டு கட்டமாக நடைபெறுவதற்கு உத்தேசிக்கப்பட்டது.


முதலாவது கட்டத்தில் தமிழ் மக்களின் வலிமையை அழிப்பது. இரண்டாவது கட்டத்தில் அவர்களது கூட்டு அடையாளங்களை அழிப்பது. தமிழ் மக்களுடைய வலிமைகள் அரசியல் வலிமை, இராணுவ வலிமை என இரண்டு வகைகளாக இருந்தன. போரின் மூலம் இராணுவ வலிமை அழிக்கப்பட்டது. ஆனால் அரசியல் வலிமையை அழிக்க முடியவில்லை. தற்போது போரின் இரண்டாம் கட்டம் இடம் பெறுகின்றது அரசியல் வலிமையை அழிப்பதே இரண்டாம் கட்டத்தின் பிரதான இலக்கு. அரசியல் வலிமையை அழிக்க வேண்டுமாயின் கூட்டு அடையாளத்தை அழிக்க வேண்டும். அதனை எதிரியால் அழிக்க முடியாது எதிரி ஒடுக்கு முறையினை கூட்ட கூட்ட கூட்டு அடையாள உணர்வு வளருமே ஒழிய அழியாது. இதனால் எம்மவர்களை கொண்டே அதனை அழிப்பதற்கு சிங்கள அரசியல் சக்திகள் தீர்மானித்தனர்.

சம்பந்தன் அதற்கு கருவியாக பயன்படுத்தப்பட்டுள்ளார். தங்களால் முடியா ததை சம்பந்தனைக் கொண்டு அவர்கள் நிறைவேற்றி வைத்துள்ளனர் அண்மைக்காலமாக கூட்டு அடையாளங் களை அழிக்கும் வேலைத்திட்டங்களாகவே சிங்கள குடியேற்றங்கள். பொருளாதார ஆக்கிரமிப்பு. விகாரைகள் கட்டுதல். சிங்கள அதிகாரிகளை அரசாங்க அதிபர்களாக நியமித்தல் என்பன மேற்கொள்ளப்படுகின் றன. இந்த ஆக்கிரமிப்புக்களுக்கு ஏற்ற வகையில் மக்களை ஒழுங்கு படுத்துவதற்காக சிங்கள கொடித்திணிப்பும் இடம் பெறுகின்றது.

நான்காவது சிங்ககொடி என்பது வெறும் கொடியாக இருக்கவில்லை மாறாக சிங்கள ஆக்கிரமிப்பின் சின்னமாக உள்ளது. இதனால் தான் தமிழ்மக்களை வெற்றி கொண்ட எல்லா சந்தர்ப்பங்களிலும் சிங்ககொடி ஏற்றியே சிங்கள மக்கள் அதனை கொண்டாடுகின்றனர். 2009 மே 18ம் திகதி போர் முடிவுக்கு வந்த தினத்தில் இருந்து சிலநாட்கள் சிங்ககொடியினை அசைத்து அந்த வெற்றி விழாவினை கொண்டாடினர். இத்தினாங்களில் தென் இலங்கையில் வாழ்ந்த தமிழ் மக்கள் தமது வீடுகளுக்கு வெளியே வரக்கூட அச்சப்பட்டிருந்தனர். தமிழ் மக்களின் விருப்பத்திற்கு மாறாக அவர்களின் வீடுகளின் முன் கொடியேற்ற நிர்ப்பந்திக்கப்பட்டனர். கொடியேற்ற

(12ஆம் பக்கம் பார்க்க)

# தெரிவுக்குழுவும்



# குத்துக்கரணங்களும்...

சமகால அரசியல்

த.தாரிகா

இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வு திட்டமொன்றிற்கு முயற்சிப்பதாக காட்டிக்கொள்ளும் இலங்கை அரசு புதிதாக எடுத்துக்கொண்ட அஸ்தி ரமே தெரிவுக்குழுவாகும். மாறி மாறி ஆட்சி பீடமேறும் அரசுகள் இனப்பிரச்சனைக்கான தீர்வெதனையும் வழங்காது இழுத்தடிக்க அரங்கேற்றும் நாடகங்களே சர்வகட்சி குழு, நிபுணர்கள் குழு, மற்றும் தெரிவுக்குழு அமைக்கப்படுகின்றது. ஒவ்வொரு கட்சியும் தெரிவுக்குழுவிற்கு தத்தமது பிரதிநிதிகளை தரவேண்டியிருக்கும்.

கோட்பாடு ரீதியாக தெரிவுக்குழுவென்பது சிங்கள தரப்புகளும், தமிழ் தரப்புகளும் ஒன்று கூடி பேசி முடிவொன்றை எட்டுவதேயாகும். ஆனாலும் நடைமுறை ரீதியாக பெரும்பான்மையை சிங்கள தரப்புகளே ஆக்கிரமித்துக் கொள்கின்ற நிலையில். சிறுபான்மையான தமிழ் தரப்புக்கள் கதிரைக்குப்பாரமாக இருப்பதை தவிர வேறெதுவும் நடக்கப்போவதில்லை.

வெறுமனே மீண்டுமொரு முறை இழுத்தடிக்கும் நாடகமே அரங்கேறப் போகின்றது. தெரிவுக்குழுவிற்கு தமிழ்த்தேசியக் கூட்டமைபினரை போகச்செய்வதற்கான அழுத்தம் இந்தியாவினாலும். மேற்குலகினாலும் தொடர்ந்தும் வழங்கப்பட்டே வருகின்றது. இனப் பிரச்சினைக்கான தீர்வொன்றை உள்ளுக்குள்ளேயே தீர்த்துவைத்துவிடும் சர்வதேசத்தின் சிந்தனைக்கு. தெரிவுக்குழுவிற்கு கூட்டமைப்பு போவதுமிகவும் தேவையாக இருக்கின்றது. தெரிவுக்குழு போன்றவற் றினுடாக உள்ளுக்குள்ளேயே முடிவொன்றை எய்திவிடுவதே தமக்கு சாதகமானதென சர்வதேச தரப்புக்கள் சிந்திக்கின்றன.

இலங்கை அரசின்தெரிவுக்குழுவிற்கு தமிழ் தரப்புகள் செல்லாது விட்டால், சர்வதேசநாடுகள் பல்வேறு நெருக் குவாரங்களை எதிர் கொள்ள வேண்டி யிருக்குமென்பதே உண்மையாகும். குறிப்பாக அவ்வாறான சூழலினில் தமிழ் தரப்புக்களை அங்கீகரிக்கவேண்டிய கடப்பாடும்சர்வதேசத்திற்கு ஏற்பட்டுவிடும். இவை அனைத்தையும் கூட்டிக்கழித்து பார்த்தே இந்தியாவிலும் சரி மேற்குலகு நாடுகளாயினும் சரி கூட்டமைப்பை. தெரிவுக்குழுவிற்குப்போகச்சொல்லி நிரப்பந்தித்து வருகின்றன.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பை பொறுத் தவரை தெளிவற்ற அதன் அரசியல் பாதையே மிகப்பெரிய சாபக்கேடாக இருக்கின்றது. தெளிவானதோர் அரசியல் இலக்கோ. கொள்கையோ இன்றி காலத்தைஓட்டச்செய்வதே அதனுடைய மிகப்பெரிய சாதனை யாகும். இனப்பிரச்சினைக்கான தீர்வு திட்டமாக தமிழீழத்தை கேட்கவில்லையென சுமந்திரன் போன்றவர்கள் கூறித்திரிகின்றபோதும் உண்மையினில் எதனைகேட்பதென்பது பற்றி அவர்களிடம் ஏதும் சிந்தனைகள் இல்லாதேயுள்ளது. குறிப்பாக தமிழ்மக்களது அன்றாடப் பிரச்சினைகள் தொடர்பிலும், இனப்பிரச்சினை தொடர்பிலும் குறுகிய கால மற்றும் நீண்டகாலத்திட்டங்களை கூட்டமைப்பு கொண்டிருக்கவேண்டும். இவ்வாறான திட்டங்களுடன் கூடிய தான கட்டமைப் பொன்றைப்பேண ஊழியர்கள் வளத்துடன் அர்ப்பணிப்பும்,

சோரம்போகாததும் விட்டுக்கொடுக்காத துமான தலைமையொன்று தேவையா கும். ஆனால் கூட்டமைப்போ தனக்கு கிடைத்த சந்தர்ப்பங்களையெல்லாம் தவறவிட்டுள்ளதுடன் தக்கவைத்துக் கொள்வதை மட்டுமே நிரந்தரநோக்கமாக கொண்டுள்ளது, தெரிவுக் குழுவிற்குள் கூட்டமைப்புசெல்வதன் மூலம் மீண்டுமொரு முறை தமிழ் மக்களை மீளமுடியாத குழியினுள் வீழ்த்திடப்போகின்றதென்பதே உண்மையாகும். தெரிவுக்குழுவினில் பெரும்பான்மையை சிங்கள தரப்புக்களே கொண்டிருக்கின்ற நிலையில் தமிழ் தரப்புக்கள் கேட்கப்போகும் எவையும் கிட்டிவிடப்போவதில்லை. வெறுமனே தெரிவுக்குழுவிலும் கூட்டமைப்பினர் கதிரைகளுக்கு பாரமாக இருந்துவிட்டே திரும்பப்போகின்றனர்.

> **அரசிற்கு நெருக்கடிகள் வருவதை அதன் திரை மறைவு பங்காளிகளான கூட்டமைப்பு தலைமை விட்டு விடப்போவதில்லை. ஏதேனும் காரணங்களை காட்டி தெரிவுக்குழுவிற்கு கூட்டமைப்பு செல்லப் போகின்றது என்பதே உண்மையாகும். தமிழ் மக்களிடமிருந்து வரக்கூடிய எதிர்ப்புக்களை சமாளித்துக்கொள்ளவே தற்போதைய பிருபண்ணுதல்களாகும்.**

எல்லாவற் றிற்கும் மேலாக அரை குறை அதனையும் பெற்றுக் கொண்டுதமிழ்மக்களிடம் திரும்ப கூட்டமைப்பினரால் முடியாது. ஜெனீவா விவகாரம், மேதின சிங்கக்கொடியென பதில் சொல்லமுடியாது. திண்டாடிவரும் கூட்டமைப்பினருக்கு தெரிவுக்குழு விவ காரமும் மோசமான மூக்குடைப்பையே தருமென்பதை அவர்கள் புரிந்து கொண்டேயுள்ளனர். ஆனாலும் தெரிவுக்குழுவிற்கு செல்லுமாறு இந்தியா மற்றும் மேற்குலகு தரும் அழுத்தத்தை எதிர்கொள்ள முடியாதே அவர்கள் இருந்தும் வருகின்றனர்.

போராடப்போவதாக கூட்டமைப்பினர் கூறிவருகின்றனர். ஆனால் பேச்சள வினிலேயே அது இருந்துவருகின்றது என்பதை தவிர கூட்டமைப்பு செய்து கிழித்ததாக எதுவுமில்லை. வவுனியாவினில் தமிழ் அரசியல் கைதிகளது விடுதலையை வலியு றுத்தி நடத்தப்பட்டபோராட்டம்கூட போட்டி உட்கட்சி முரண்பாடுகளது வெளிப்பாடன்றி வேறெதுவுமில்லை. அதிலும் யாழ்ப்பாணத்திலும் கூட தனித்து மேதினக் கூட்டமொன்றை நடத்தவக்கற்ற கூட்டமைப்பினர் அதற்கு கூட ஐக்கியதேசியக்கட்சி போன்ற பெரும் பான்மையின கட்சிகளிடம் சரணாகதி அடையவேண்டியிருந்தது. அங்கு சிங்கக்கொடி ஏந்தி அசிங்கப்பட்டுப்போன கதை அனைவரும் அறிந்த கதையே.

தெரிவுக் குழுவிற்கு கூட்டமைப்பு போகாவிட்டால் அரசுக்கான சர்வதேச நெருக்கடிகள் அதிகரித்துக்கொண்டே செல்லும். ஆனாலும் அவ்வாறு அரசிற்கு நெருக்கடிகள் வருவதை அதன் திரை மறைவு பங்காளிகளான கூட்டமைப்பு தலைமை விட்டு விடப்போவதில்லை ஏதேனும் காரணங்களை காட்டி தெரிவுக்குழுவிற்கு கூட்டமைப்பு செல்லப்போகின்றது என்பதே உண்மை யாகும். தமிழ் மக்களிடமிருந்து வரக்கூடிய எதிர்ப்புக்களை சமாளித்துக் கொள்ளவே தற்போதைய பிகுபண் ணுதல்களாகும்.

அமெரிக்கா போன்ற நாடுகள் சில நிபந்தனைகள் அடிப்படையில் தெரிவுக்குழுவிற்கு கூட்டமைப்பு போகலாமென கூறும் ஆலோச னைகளும் அவ்வகையிலே பார்க்கப்படவேண்டியவையாகும்.



**அரசியல் தீர்வு முயற்சிகள் இரு தேசங்கள் ஒரு நாடு என்ற வகையில் அமைதல் வேண்டும். இணைந்த வடக்கு, கிழக்கு தமிழ் மக்களது தாயகம் என்பதும், தமிழ்த் தேசம் தனித்துவமான இறைமை யுடைய தேசம் என்பதும் வரலாற்று ரீதியான உண்மை.**





# பிரகடனம் 2012 மே

பாரிய இனப்படுகொலை முள்ளிவாய்க் காலில் நடைபெற்று 3வது வருட முடிவில் இம் மேதினத்தை கொண்டாடுகின்றோம். யுத்தம் முடிந்துவிட்டதாக இலங்கை அரசு கூறினாலும் தமிழ்த் தேசத்திற்கு எதிரான இன அழிப்பை இலங்கை அரசு முன்னரிலும் பார்க்க தீவிரப்படுத்தியே வருகின்றது.என தமிழ் தேசிய மக்கள் முன்னணி குற்றஞ்சாட்டியுள்ளது. வடமராட்சி, கரவெட்டியினில் நடைபெற்ற தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் தொழிலாளர் தின (மேதின) பொதுக் கூட்டத்தில், கலந்துகொண்டிருந்த நூற் றுக்கணக்கான மக்களது கரகோசத்தின் மத்தியில் இப் பிரகடனம் வாசிக்கப் பட்டது. அதில் மேலும் தெரிவிக்கப்படுகை யினில் தமிழ் தேசத்தின் இருப்பை பாதுகாப்பதிலும், தமிழ் தேசிய உணர்வை உயிர்ப்புடன் வைத்திருப் பதிலும் எமது தேசம் பலத்த சவால்களை சந்தித்து நிற்கின்றது. அந்த சவால்கள் சிங்கள தேசத்திலிருந்தும் எமக்குள் ளிருந்தும் வந்து கொண்டிருக்கின்றன. சிங்கள தேசத்தின் சவால்களை அடையாளம் காணுகின்ற நாம் எமக்குள்ளிருந்து வரும் சவால்களை அடையாளம் காண திணறுகின்றோம்.

சிங்கள பௌத்த பேரினவாதம் முன்னரைவிடவும் அதன் உச்சியில் நிற்கும் இந்நிலையில் தமிழ் தேசிய உணர்வை இல்லாதொழிக்கும் நோக்கில், தமிழ் தேசிய அரசியலை பேரினவாத அரசியலுக்குள் கரையச் செய்யும் நடவடிக்கையை எமது இனத்திற்குள் இருக்கும் சிலரே இந்த மேதினத்தில் அரங்கேற்றியுள்ளனர். சிங்கள தேசத்தின் இன அழிப்புக்கு முகம் கொடுக்கவே நாம் திணறும் போது எம்மவர்களின் இந்த துரோகத்தனங்கள் எமக்கு இரட்டிப்பு வலியைக் கொடுத்துள் ளது.

மாபெரும் இன அழிப்பு நடைபெற் றாலும் தமிழ் மக்களின் விவகாரம் சர்வதேச மட்டத்தில் பேசு பொருளாகியுள் ளது. இலங்கைத் தீவினை மையமாக வைத்து சர்வதேச சக்திகளிடையேயான நலன்சார் ஆதிக்க மோதல்கள் வலுப் பெறத் தொடங்கியுள்ளன. அம்மோத லுக்கு தமிழர்களையே கருவியாக பயன்படுத்துகின்றனர்.

இங்கு தான் எமக்கான வாய்ப்புக்கள் திறந்துவிடப்பட்டுள்ளது. தமிழ் மக்களிட மிருந்த ஆயுதபலம் இழக்கப்பட்டுள்ள நிலையில், இந்த வாய்ப்புக்களை நாம் சரியாகப் பயன்படுத்தினால் அது பன்மடங்கு பலத்தை அரசியல் ரீதியாக எமக்கு வழங்கும். பிறசக்திகளால் தமிழர்கள் வெறுமனே கருவியாகப் பயன்படுத்தப்படுவதனைத் தவிர்த்து எமது தேச நலன்களும் அடையப்படும் நிலையை உருவாக்க முடியும். இதற்கு தமிழ் மக்கள் அரசியல் ரீதியாக பலமாக இருக்க வேண்டும். தாயக மக்களும் புலம் பெயர் மக்களும், தமிழக மக்களும் ஒருங்கிணைந்த வேலைத்திட்டத்தின் கீழ் வந்து செயற்படும்போது எம்மால் பலமான நிலையை அடைய முடியும். இதற்காக இம்மேதினத்தில் பின்வரும் தீர்மானங்களை நிறைவேற்ற உறுதி பூணுவோம்.

**தீர்மானம் - 01**

***அரசியல் தீர்வு முயற்சிகள் இரு தேசங்கள் ஒரு நாடு என்ற வகையில் அமைதல் வேண்டும்.***

இணைந்த வடக்கு, கிழக்கு தமிழ் மக்களது தாயகம் என்பதும், தமிழ்த் தேசம் தனித்துவமான இறைமையுடைய தேசம் என்பதும் வரலாற்று ரீதியான உண்மை. அதிகாரப் பகிர்வு என்பது சிங்கள தேசத்திடம் இருக்கும் அதிகாரத்தினை நாம் கேட்டுப் பெறுவதாக இருக்கும். அதிகாரப்பகிர் வுடான தீர்வுப் பாதை என்பது சம அந்தஸ்த்துள்ள தமிழ்த் தேசத்தின் இருப்பை நாமாகவே விரும்பி கைவிடு வதாக அமையும். தமிழ்த் தேசமும் சிங்களத் தேசமும் சேர்ந்து இலங்கை என்ற அரசினை உருவாக்குவதன் மூலம் மட்டுமே தமிழ்த் தேசத்தின் இருப்பை பாதுகாக்க முடியும். இதனா லேயே இரு தேசங்கள் ஒரு நாடு என்ற வகையில் அரசியல் தீர்வு அமைய வேண்டுமெனக் கோருகின்றோம்.

**தீர்மானம் - 02**

***தமிழர் தாயகத்தில் இடம்பெறும் திட்டமிட்ட ஆக்கிரமிப்புகளை எதிர்த்து போராடுவோம்.***

சிங்கள பௌத்த பேரினவாதமானது இலங்கைத் தீவின் ஏகபோக உரிமை யாளர் தாமே என மார்தட்டுகின்றது. ஏனையவர்கள் வேண்டுமென்றால் வாழ்ந்து விட்டுப் போகலாம் உரிமைகள் எதுவும் கேட்கக் கூடாது எனக் கர்ச்சிக் கின்றது. இந்தக் கருத்தியலுக்கு தமிழ்த் தேசத்தின் இருப்பு அச்சுறுத்தலென அது அஞ்சுகின்றது. இந்த அச்சம் காரண மாக தமிழ்த் தேசத்தின் இருப்பை இல்லாதொழிக்கும் முயற்சியை ஐரோப்பியர்கள் வெளியேறிய காலத்திலிருந்து தீவிரப்படுத்தியே வருகின்றது.

தமிழ் மக்களது தியாகம் நிறைந்த போராட்டம் இந்த சிதைப்பு நடவடிக் கைகளை மட்டுப்படுத்திவந்தது. அவ் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் 2009 மே மாதத்தின் பின்னர் மீண்டும் தீவிர மடையத் தொடங்கியுள்ளது. நில அபகரிப்பு, பொருளாதார ஆக்கிரமிப்பு, கலாச்சார சீரழிப்பு, உளவியல் உரண் சிதைப்பு என இது பல வடிவங்களை எடுத்து வருகின்றது. இவற்றை உடனடியாக தடுத்து நிறுத்தி எமது தேசத்தின் இருப்பைப் பாதுகாக்க உலகம் முழுதும் பரவிவாழும் எமது உறவுகளை ஒருங்கிணைத்து இவ் ஆக்கிரமிப்புகளுக்கு எதிராகத் தொடர் ச்சியாக சாத்வீக வழியில் போராடுவோம்.

**தீர்மானம் - 03**

***போரினால் பாதிப்படைந்த எமது உறவுக ளுக்கு கை கொடுப்போம்.***

இன அழிப்பு நடவடிக்கையினால் எமது உறவுகள் மோசமாக பாதிப்படைந் துள்ளனர். சிறை வாழ்க்கை, காணாமல் போதல், அங்கவீனம், வாழ்வாதார உதவிகளின்மை என அவர்கள் அனுபவிக்கும் துன்பங்கள் வார்த்தைக ளில் அடங்காதவையாகும். விடுதலைப் போரினால் ஏற்பட்ட பாதிப்புக்களை சம்பந்தப்பட்டவர்களும் அக் குடும்பங் களும் மட்டும் சுமக்க விடுவது சமூக அறமல்ல. நாம் அனைவரும் சேர்ந்து அவற்றைப் பொறுப்பேற்போம். அவர்க ளின் வாழ்வினை கட்டி எழுப்புவோம்.

**தீர்மானம் - 04**

***தமிழ் அரசியல் கைதிகள், தடுப்பிலுள்ள முன்னாள் போராளிகளது விடுதலைக் காய் போராடுவோம்.***

சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள சகல தமிழ் அரசியல் கைதிகளும் பொது மன்னிப்பின் கீழ் விடுவிக்கப்படல் வேண்டும். மேலும் இறுதி யுத்தத்தில் சரணடைந்த முன்னாள் போராளிகள் எவ்வித சட்ட நடவடிக்கைகளுக்கும் உட்படுத்தப்படாது அனைவரும் விடுவிக்கப்படல் வேண்டும். காணாமல் போனவர்கள் கண்டுபிடிக்கப் பட்டு குடும் பத்துடன் இணைக்கப்படல் வேண்டும். அதற்காக சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்க வேண்டுமெனக் கோருவோம்.

**தீர்மானம் - 05**

***இனப்படுகொலைக்கு சர்வதேச விசா ரணை தேவை என்பதை உலகிற்கு கொண்டு செல்வோம்.***

வன்னியில் இறுதி யுத்தத்தில் இடம்பெற்றது வெறுமனவே போர்க்குற்றமல்ல அது இனப்படு கொலையின் ஓரங்கமாகும். ஐ.நா. நிபுணர் குழு அறிக்கையும்

(15ஆம் பக்கம் பார்க்க)



வன்னிக்களம்

# பறிபோகும் தமிழ் மண்...

- வினோஜித்

தமிழரின் உரிமைப்போராட்ட வரலாற்றிலும் வாழ்விலும் வன்னிமண்ணே கருவாகவும் தவிர்க்க முடியாதவொரு பாகமாகவும் இருப்பதை கண்டுணர்கிறோம். இனத்தின் சுயத்திற்காக போராடிய மாவீரன் பண்டாரவன்னியன் தொடக்கம் பல மாவீரர்களின் கல்லறையாகவும் இந்தமண்ணே இருப்பதால் வணங்க வேண்டிய மண்ணும் அதுவாகத்தான் இருக்கமுடியும்.

1995ம் ஆண்டு யாழ்ப்பாண இடப்பெயர்வுடன் முல்லைத்தீவு மாவட்டம் பிரபல்யமடையத் தொடங்கியது. பின்னர் விடுதலைப்புலிகளின் எழுச்சியுடன் சர்வதேச மட்டத்தில் அவதானிக்கப்படும் பிரதேசமாக இந்த பிரதேசம் மாற்றம்கண்டது. ஈற்றில் 2009ம் ஆண்டு யுத்த நிறைவுடன் இன்று சர்வதேச மட்டத்தில் பேசப்படும் பிரதேசமாகவும் இதுவேயுள்ளது.

ஆனால் விடுதலைப்புலிகளின் மௌனிப்பிற்குப் பின்னால் அதாவது 2009ம் ஆண்டு யுத்த நிறைவிற்குப் பின்னால் இந்த மண்மீதிருந்த பற்றுதலும் வெளிப்பார்வையும் சர்வதேசத்திற்கும் சரி தமிழ் அரசியல் தலைமைகளுக்கும் சரி இன்று அற்றுப்போயிருப்பதாகவே கருதவேண்டியிருக்கின்றது. வெறுமனே முல்லைத்தீவு மாவட்டம் என பேசிக்கொண்டாலும் உள்ளார்ந்தமான பார்வை இல்லை என்பது உண்மை. இதனையே யுத்தநிறைவின் பின்னர் இடம்பெற்றுவரும் இராணுவ நெருக்குவாரங்களும் சிங்கள ஆக்கிரமிப்புக்களும் புலப்படுத்தியிருக்கின்றது. வெறுமனே 2006ம் ஆண்டு தொடக்கம் 2009ம் ஆண்டுவரை 3வருட யுத்தத்தை இந்த மக்கள் சந்திக்கவில்லை. அதற்கு முன்னரும் பலதடவைகள் இந்தப் பகுதி மக்கள் கடுமையானதும் கொடுமையான துமான யுத்தத்தை சந்தித்திருக்கின்றனர். மரணங்கள் இங்கு மலிவாகவேயிருந்தது அது 2009ம் ஆண்டில் மிக மிக மலிவாகிப் போன வரலாற்றில் இரத்தக்கறை படிந்த பக்கங்கள் உலகத்திற்கே தெரியும். அதுவரை முல்லைத்தீவு மாவட்டத்தின் மீது அகலப்பார்வை வைத்திருந்த சர்வதேசமும் தமிழ் அரசியல் தலைமைகளும் கண்களை மூடிக் கொண்டுள்ளன. இதனையே சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டுதான் இராணுவ நெருக்குவாரங்களும் சிங்கள ஆக்கிரமிப்புக்களும் இடம்பெற்று வருகின்றன.

நாம் ஒரு தோற்றுப்போன சமுகமல்ல என விதப்புரை செய்பவர்களும் நாம் தோல்வி மனப்பான்மையுடன் வாழக்கூடாது என சுட்டிச் சொல்பவர்களும் அந்த மக்களுக்கு ஆறுதல் தரும் தலைமைகளாக இன்றுவரை மாறவில்லை என்பதும் சரிபிழைக்கப்பால் விடுதலைப்புலிகளின் வெற்றிடம் இந்த மாவட்டத்தில் வெளிப்படையாகவே இருப்பதையும் யாரும் மறுக்க முடியாது. இன்று மாவட்டத்தில் நடந்து கொண்டிருக்கும் கதை பெரும்பாலும் ஒரு சில ஊடகங்களால் மட்டும் மிகுந்த போராட்டங்களுக்குப் பின்னால் வெளிக்கொணரப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில் அவற்றினாலும் பலவற்றை உடனடியாகவும் முழுமையாகவும் சொல்லமுடியாதிருப்பது மிகவும் வேதனைக்குரியது.

கிளிநொச்சி மாவட்டத்தில் யுத்தத்தின் பின்னர் பொன்னகர், சாந்தபுரம் போன்ற கிராமங்களில் இராணுவத்தினர் அகலக்கால் பதிக்க முற்பட்டபோது குடாநாட்டு ஊடகங்கள் விழித்துக் கொண்டு தொடர்ச்சியாக எதிர்ப்புக்குரல் கொடுத்துவந்த நிலையில் அது தவிர்க்கப்பட்டது காரணம் ஊடகங்களின் பார்வை முழுமையாக அந்த திசையில் திருப்பப்பட்டதும் அதனால் சர்வதேச ரீதியாக யுத்தத்தின் பின்னாலும் தமிழர்கள் நிலத்திற்காக போராடிக் கொண்டிருக்கின்றார்கள் என் நியாயம் சொல்லப்பட்டதுமேயாகும். ஆனால் முல்லைத்தீவு மாவட்டத்தில் இவ்வாறு செறிவான பார்வையினை ஊடகங்களினால் திசைமுகப்படுத்த முடியவில்லை என்பதை ஏற்றுக் கொண்டேயாக வேண்டும். இதன் விளைவுதான் இன்று பெறப்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பது எமது நிலைப்பாடு. முல்லை மாவட்டத்தின் கரையோரங்கள் முழுவதும் தற்போது சிங்கள மீனவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றது. இதில் விநோதம் என்னவென்றால் அவ்வாறு கரையோரங்களை ஆக்கிரமித்துக் கொடுத்தவர்கள் படையினர் என்பதுதான் உலகத்தில் எந்தவொரு நாட்டிலும் இல்லாத நடைமுறை இங்கு இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. 1983களில் பாட்டன் முப்பாட்டன் வைத்திருந்ததாக கூறிக் கொண்டு கடற்றொழில் அமைச்சினதும் அமைச்சர்களினதும் கடிதங்களுடன் வரும் சிங்கள மீனவர்களுக்கு கண்ணை மூடிக்கொண்டு படையினர் இடத்தை ஒதுக்கிக் கொடுக்கின்றனர். இதில் பரிதாபம் என்னவென்றால் அந்த இடத்திலிருந்து ஒதுக்கப்படுவது அந்த இடத்திற்குச் சொந்தக்காரரான தமிழன் என்பதும் இதற்கெதிராக எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாத நிலையில் கையாளாகாதவர்களாக பொறுப்புவாய்ந்த திணைக்களங்களும் பொலிஸாரும் இருக்கின்றனர் என்பதே.

இதேபோன்று மாவட்டத்தின் எல்லைக் கிராமங்களில் இடம்பெற்றுவரும் அத்துமீறல்களும் அமைந்திருக்கின்றன. கொக்கிளாய் ஆற்றின் மறுபுறத்தில் 1983களில் தமிழருக்குச் சொந்தமான சுமார் 1500 ஏக்கர் வரையான விவசாய நிலம் இருந்து. எனினும் இங்கிருந்து தமிழர் துரத்தப்பட்டதன் பின்னர் இந்தப் பகுதிக்கு வந்த சிங்கள மக்கள் முழுவதுமாக ஆக்கிரமித்துவிட்டனர். இன்று அந்தப்பகுதிகளுக்குச் செல்வது குறித்துக் கூட தமிழர்கள் நினைக்க முடியாத நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இதன் தொடாச்சிதான் யுத்தத்தின் பின்னர் கொக்கிளாய் ஆற்றைக் கடந்து ஆற்றின் கரையோரங்களில் தொடங்கியிருக்கின்றது.

ஆற்றின் கரையோரம் முழுவதும் ஆக்கிரமிக்கப்பட்டு அந்தப்பகுதியில் பாடசாலை, ஆலயம், வீடுகள் என அனைத்தையும் அமைத்துக் கொண்டு சிங்கள மக்கள் தங்கிவிட்டனர். மேலதிகமாக ஆளுநரை வரவழைத்து கொக்கிளாய் - முகத்துவாரம் வீதியின் மேற்குப் புறத்திலுள்ள தமிழரின் விவசாய நிலங்களை பெற்றுத்தருமாறு கேட்டிருக்கின்றனர். அதற்காக தமிழருக்கு நஸ்டஈடு கொடுக்கலாம் எனவும் தெரிவித்திருக்கின்றனர்.

இதுபோதாதென்று புளியமுனைப் பகுதியில் ஒதுங்கியிருக்கும் தமிழரின் பகுதிக்குள் நுழைந்து அவர்களின் வலைகளை அறுப்பது அதை எதிர்த்துக் கேள்விகேட்டால் கொலைக்கும் துணிவது என அச்சுறுத்தல் வேறு செய்யப்படுகின்றது. இருந்தும் இவ்வாறான சிலரை மடக்கிப் பிடித்து நீதிமன்றில் ஆஜர் செய்தனர். ஆனால் இன நல்லிணக்கம் என்ற சிந்தனையில் அவர்கள் விடுவிக்கப்பட்டார்கள். விடுவிக்கப்பட்டவர்கள் இன்றும் அதேவேலையே செய்கின்றனர். குறிப்பிட்டளவு படகுகள்தான் கொக்கிளாய் ஆற்றில் தொழில் செய்ய முடியும் என்பது கடற்றொழில் அமைச்சின் சட்டமாகவேயுள்ளது. ஆனால் ஒரே தடவையில் 300ற்கும் மேற்பட்ட படகுகள் தொழில் செய்கின்றன. இதனால் இங்கு பிடிக்கப்படும் இறாலின் ஓட்டுக்குள் எண்ணெய்ப்படலமே இருக்கின்றது. எனவே ஒருபுறம் தொழில் நோக்கத்திற்காகவே வந்து தங்கியிருப்பதாக கூறிக் கொண்டாலும் மறுபுறம் தமிழரின் பெறுமதியான வளங்களை அழித்துவிடுவதிலும் கவனம் ஆழமாகவே செல்வதை காணமுடிகின்றது.

இதைவிடக் கொடுமை 25வருடங்களுக்கும் மேலாக இடம்பெயர்ந்து ஏதிலிகளாக வாழ்ந்து எதிலிகளாகவே சொந்த மண்ணுக்குத் திரும்பியிருக்கும் மக்களுக்கு தொண்டு நிறுவனங்கள் வழங்கும் உதவிகள் தமக்கும் கிடைக்கவேண்டும் என சிங்கள மக்கள் சண்டையிடுகின்றனர். இதனால் சில தொண்டுநிறுவனங்கள் இருவருக்கும் கொடுக்காமலே திரும்பிச் சென்றிருக்கின்றன. இதற்குச் சிறந்த உதாரணம் 325சிங்களக் குடும்பங்கள் இதுவரை முகத்துவாரத்தில் குடியேறியிருக்கின்றனர். இவர்களிடம் 105 தொழிற் கலங்கள் உள்ளன. ஆனால் 107 தமிழ் மீனவக்குடும்பங்களில் 8பேரிடம் மட்டுமே கலங்கள் உள்ளன. அவற்றிலும் சில இயந்திரமற்ற கலங்கள்.

இந்த நிலையில் தொண்டு நிறுவனம் ஒன்றினால் தமிழ் மக்களுக்கு வழங்கவென கொண்டுவரப்பட்ட 8படகுகளில் தமக்கும் வழங்கவேண்டும் என சிங்கள மக்கள் சண்டையிட்டுள்ளனர். இதனால் அந்த உதவிகள் வழங்குவதில் பலநாள் தாமதம் ஏற்பட்டிருக்கின்றது. இதேபோன்று மிச்சமாய் தமிழருக்குச் சொந்தமான பகுதியாக காணப்பட்ட நாயாற்றுப் பகுதியும் தற்போது சிங்கள மக்களுக்கு தாரைவார்த்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இதற்கு முற்றுமுழுதான காரணம் அரசுக்கும் இராணுவத்தினருக்கும் அடிவருடிகளாக இருக்கும் சிலரே பொதுமக்களின் எந்த ஒப்புதலும் இல்லாமல் இராணுவத்தினரால் கடற்றொழிலாளர் சங்கங்களிற்குத் தெரிவு செய்யப்பட்டவர்கள் மக்களிடம் கேட்காமலேயே 30சிங்கள மீனவர்களுக்கு அனுமதி வழங்கினர். ஆனால் இன்று 60ற்கும் மேற்பட்ட மீனவர்கள் வந்து முகாமிட்டுவிட்டனர். அதனோடு தடைசெய்யப்பட்ட தொழில்களையும் கூட இவர்கள் சுதந்திரமாகவே செய்கின்றனர். இந்த நில ஆக்கிரமிப்பு ஒருபுறமிருக்க மற்றொருபுறம் மற்றொரு சாரரால் இன்னொரு நில ஆக்கிரமிப்பு இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. அதாவது இறுதி யுத்தம் நடைபெற்ற முள்ளிவாய்க்கால், வலைஞர்மடம், புதுக்குடியிருப்பின் ஒருபகுதி உள்ளிட்ட சில பகுதிகள் இன்றுவரை விடுவிக்கப் படவில்லை. இந்த நிலையில் இந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் தொடர்ந்து முகாம்களில் வாழ்ந்து வருகின்றனர்.

மீள்குடியேற்ற முடியாமைக்கு கண்ணிவெடிகள் அகற்றப்படாமையே காரணம் என சொல்லப்படுகின்றது. ஆனால் கண்ணிவெடியகற்றப்படுவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதேபோல் முகாம்களில் இருந்து மக்களில் சுமார் 200குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் கோம்பாவில் - திம்பிலி என்ற இடத்தில் காட்டுப்பகுதிக்குள் கால் ஏக்கர் நிலமும் அதில் தற்காலிக இடமும் வழங்கப்பட்டு அதில் வாழ்ந்து வருகின்றனர். மேலும் ஒரு தொகுதி அரைநிரந்தர வீடுகள் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றது. எனவே வவுனியா முகாம்களை மூடுவதற்கான கால எல்லை அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் அங்கிருந்து மக்களை மீள்குடியேற்றத்திற்கென அழைத்துவந்து இங்கு குடியேற்றப்போகின்றனர். மேலும் முல்லைத்தீவு மாவட்ட எல்லைக்குள் அடங்கும் திருமுறிகண்டிப் பகுதியிலும் சுமார் 125குடும்பங்களின் நிலத்தை படையினர் ஆக்கிரமித்துள்ளனர்.

இவர்களில் சுமார் 40குடும்பங்கள் தற்போதும் வவுனியா முகாம்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். ஏனைய குடும்பங்கள் உறவினர் நண்பர்கள் வீடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். ஆனால் மக்களுடைய நிலம் இன்னமும் வழங்கப்படவில்லை. இவை எல்லாவற்றையும் விட யுத்தத்தின் பின்னர் இரண்டுதடவை பயணிகள் போக்குவரத்து பேருந்துகளின் சாரதிகள், நடத்துனர்கள் படையினரால் காட்டுமிராண்டித்தனமாக தாக்கப்பட்டிருக்கின்றனர். ஆனாலும் தாக்கப்பட்டவர்கள் தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. அடாவடிகளும் வரையறை மீறியே செல்கின்றது. அரச திணைக்களங்களில் பொறுப்புநிலையாளர்கள் முழுமையாக விலைக்கு வாங்கப்பட்டிருக்கின்றனர்.

இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு கரைதுறைப்பற்று பிரதேச செயலர் தயானந்தா இதேபோன்று இராணுவத்தினருக்கு எடுபிடிகளாக இருப்பவர்களும் ஆக்கிரமிப்பையும் அடாவடிகளையும் மூடிமறைத்தும் அவற்றை நியாயப்படுத்திக் கொண்டும் இருக்கின்றனர். இவை அனைத்திற்கும் தீர்வு என்றும் மாற்றமில்லாத தமிழ்தேசத்தின் இறைமை அங்கீகரிக்கப்படுவதன் மூலமே பெறமுடியும்.

# கனவுகள் மெய்ப்பட வேண்டும்...

வணக்கம் வணக்கம் எப்படி சுகம் நான் கல்வயல் கனகசிங்கம் இந்தமண்ணை நேசித்து இரத்தமும் சதையுமா மண்ணோடையே வாழு றவன் ஆனால் அடிக்கடி பேப்பர் காரங்கள் எழுதுற புத்திசீவியள் மாதிரி நான் ஒன்றும் வித்துவானில்லை. என்னை பொறுத்தவரை சரியெண்டால் சரி பிழையெண்டால் கடவுளே வந்து சொன்னாலும் பிழைதான். முப்பது வருட ஆயுதபோராட்டத்தின்ர சாட்சியங்களாக இருக்கின்ற ஆயிரக்கணக்கான சனங்களுக்குள்ள நானும் ஒருத்தன். விரல் வெட்டி தளபதி அமிர்தலிங்கத்திற்கு ரத்தப் பொட்டு வெச்சு முட்டாளாகிப்போன அனுபவமும் நிரம்பக்கிடக்குது. என்ரை மனுசி சொல்கிற மாதிரி கிடைக்கிறது கஞ்சியோ கூழோ குடிச்சிட்டு மூலையில கிடக்கிறதுக்கும் என்னால முடியாது. என்னோட பயணத்தில என்ரை சிநேகிதங்கள் சிலரும் சேர்ந்து வரு வினம். இனி அடிக்கடி நாங்கள் சந்திப்பம் சரியோ.இப்ப கொஞ்ச நாளுக்கு முதல் எங்கட கூட்டமைபின்ர பின் கதவு எம். பி சுமந்திரனார் தமிழ்சனம் இப்ப தமிழீழத்தை கேக்கையில்லையெண்டு பெரிய குண்டொண்டை போட்டிருக்கிறார். மனுசனுக்கு பிரக்கிராசி வேலையொண்டும் அண்டைக்கில்லையெண்டால் இப்படி ஏதும் வெடிக்கவைக்கிற வேலையேனும் செய்யும்.

வழமையாக கொழும்பு ஆங்கில பேப்பர்களுக்கு தான் உப்பிடி வெடிக்க வைக்கிறது மனுசன். பிறகு கல்லடி விழத்தொடங்க நான் சொன்னதை பிழையா எழுதிப்போட்டாங்களெண்டு அந்தர் பல்டி அடிச்சுப்போடும். நான் சொல்லேயில்லையெண்டு பேப்பருக்கு மறுப்பு குடுங்கோ எண்டால் அந்த விசயம் பற்றி மனுசன் பிறகு மூச்சும் விடாது.

அவர் தனக்கு தமிழீழம் வேண்டாமெண்ட உடனே எங்கட பேப்பர்காரங்களும் அடுத்த நாள் அதை கொட்டையெழுத்தில செய்தியாக்கிப்போடுவினம். அப்பவே கடைக்கார சின்ராசு சொன்னவன் அண்ணை உந்த இந்திய எம். பி காரங்கள் வந்திட்டுப்போய் இலங்கை தமிழ் மக்கள் தமிழீழம் கேட்கயில்லையெண்டு அங்கினை கதைச்சுக் கொண்டு திரியிராங்கள் சுஸ்மா சுவராஜ் அம்மா முதல் கொண்டு எல்லோருக்கும் நல்லா யாரோ தீத்திப்போட்டாங்களெண்டுறான். உவன் அடிக்கடி உப்படி எடக்குமுடக்கா கதைக்கிறவன் எண்டபடியால் நான் பேசாமல் இருந்திட்டன். இப்பவெல்லோ தெரியுது யாரிந்த தமிழீழ கதையளின்ர சூத்திரதாரியர் எண்டு.

ஆனாலும் கூத்தமைப்புகாரர் கடை சியில் ஒண்டுமே இல்லையெண்டு எல்லாரும் சொல்லி திரியிற மாகாண சபையை தான் வாங்கப்போகினம் எண்டதுயுறுதியாயிட்டது. முள்ளிவாய்க்காலுக்கு முந்தி மாகா ணசபை பக்கம் எட்டிப்பார்க்க கூட மாட்டமெண்டு நிண்ட அவை இப்ப நான் முதலைமைச்சர் நீ மந்திரியெண்டு மாகாணசபை தேர்தலில போட்டியிட முட்டி மோதிக்கொண்டிருக்கினம். அதுக்குள்ள தமிழரசுகாரர் தங்களுக்கு தந்தது போதாதெண்டு மற்ற பக்கம் குத்துப்பாடுகள் நடக்குது. முந்தி அண்ணை அமிரும் சிதம்பரத்தாரும் ஏன் சம்பந்தரும் சேர்ந்து ராஜீவுக்கு எழுதின கடிதத்தில இந்த மாகாண சபையினில் ஒண்டுமில்லையெண்டு குத்தி ஒப்பாரி



நையாண்டி
கல்வயல் கனகசிங்கம்

வைச்சவை. இப்ப அவையின்ர வழி நடக்கிறவை மாகாண சபை தேர்தலில போட்டியிட மல்லுக்கட்டிக்கொண்டிருக்கினம்.

இலங்கை அரசுக்கும் சரி பக்கத்து நாட்டுக்காரருக்கும் சரி தமிழ் சனம் இந்த மாகாணசபையோட முடங்கினால் போதும்.அதால தான் வடக்கு மாகாண சபை தேர்தல் பற்றியும் கதைக்கினம். எங்கட ஆக்கள். மாகாணசபை தேர்தலில போட்டி போடுறதையும் வரவேற்கினம். அதை தெரியாமல் மாகாணசபையளில போட்டி போட்டு பிரிஞ்சு கிடக்கிற வடக்கு - கிழக்கை இணைக்கப்போறதா இவை கதை வேற விடுகினம்.

இந்த அரசு சத்தமில்லாமல் காணி சுவீகரிப்பு, குடியேற்றம், விகாரை அமைப்பு அது இதுவெண்டு ஒண்டையும் விடா மல் எங்கட மண்ணில் என்னவென்ன செய்யவேணுமோ எலலாத்தையும் செய்து கொண்டிருக்குது. அதுகளுக்கு எதிரா ஆகக்குறைஞ்சது சனத்தை திரட்டி போராட்டங்களை செய்யிறதெண்டாலும் அதுக்கும் தமிழ் தேசிய மக்கள் முன்னணிகாரர் தான் தேவையாயிருக்கு.

போறபோக்கில கூத்தமைப்பில இருக்கிற மற்ற ஆக்கள் உடனடியாக ஒரு முடிவை எடுக்கையில்லையெண்டால் சனத்திட்டை இனிமேல் இறங்கிபோய் கதைக்கமுடியாததொண்டதை புரிஞ்சு கொள்ளோணும். பின் கதவு எம்பிக்கும் தலைவருக்கும் நோக்கங்கள் தெளிவாக இருக்கிறது. அவை அதை துல்லியமா புரிஞ்சு வைச்சுக்கொண்டு வெற்றிகரமா முன்னெடுத்து வருகி னம்.ஆனால் நீங்கள் நாளைக்கு எங்களிட்டை வரவேணும். கழுத்தில விழுந்த கயிறு இறுக்கிறதுக்குள்ள சுதாகரிச்சுக்கொள்ளாட்டி அலை அடிச்சுக்கொண்டு போகுமுங்கோ. நாங்கள் தெளிவா இருக்குறம். கன நாளுக்கு எங்களை ஏமாத்திக்கொண்டிருக்கேலாது.

அதுக்குள்ள கரவெட்டியில இருந்து வந்த மெம்பர் தம்பிமுத்து மூன்று மாதத்திற்கு முதல் நடந்த மே தினத்தப் பற்றி ஒரு கதை சொல்லிப் போட்டுப் போகுது. தமிழ் தரப்புக்களின்ர மே தினக் கூட்டங்கள். ஊர்வலங்கள் கிளிநொச்சியில யாழ்ப்பாண ரவுணில மற்றது கரவெட்டியில நடந்ததாம். ஆனால் இதுகளுக்குள்ள உச்சபட்ச பாதுகாப்பு தரப்பாரின்ர கெடுபிடி கரவெட்டியில்தானாம். கரவெட்டியில பயந்து பயந்து வந்த சனம் ஒரு இரு நூறுக்கு கிட்டவரும். ஆனால் வந்த பாதுகாப்பு தரப்பு விருந்தினர்கள் அதுக்குள்ள பதினைஞ்சு பேருக்கு மேல வருமாம் ஒருத்தன் வீடியோ எடுக்கிறானாம் இன்னொருத்தன் ஒலிப்பதிவு செய்ய மற்றொருத்தன் குறிப்பெருக்கிறானாம் வந்த விருந்தினருக்குள்ள இரண்டுபேர் பொம்பிளைப்பிள்ளையாம்.

ஒரு நாடு இருதேசமெண்டதை பகிரங்கமாகவே மேடையில பெரிசா தட்டிவைச்சு எழுதிவைச்சிருந்தவை தமிழ்தேசிய மக்கள் முன்னணி கரங்கள் தானாம். எவ்வளவு கெடுபிடியளுக்குள்ளையும் ஒரு லோயர் பொடியன் தெளிவாக பேசினவனாம். அதைவிட ஒரு வயசில மூத்த மனுசன் பேசினது தான் படு சூடான விசயம். இந்த மண் தான் தமிழ் மக்களுக்கு தலைமை தாங்கின பெருமை மிக்க மண்ஜி.ஜி தொடக்கம் சண்முகதாசன். சிவசிதம்பரம் எண்டு நீண்டு தம்பி பிரபாகரன் வரைக்குமெண்டில்லை. இனியும் தலை மையை தரப்போடு தெண்டு சொல்ல கைதட்டல் சொல்லி மாளேல்லையாம். வந்திருந்த அழையா விருந்தாளியளும் விறைச்சுப்போய் நிண்டினமாம்.

அவன் லோயர் பொடியன் தெளிவா சொன்னாவனாம் சிலர் முந்தி சந்திரிக்கா அம்மாவின் சேலை துணியில் பிடித்து தொங்கியினம். இப்ப சிலர் மகிந்தாவின்ர சால்வையை பிடிச்சு தொங்கியினம். போற போக்கில இவை தாடியற்றயிலயும் பிடிச்சு தொங்குவினம். வரலாற்றில (க) மாதிரியோ. (ட) மாதிரியோ இருக்க கூடாது எண்டு ஆள் பயப்பிடாமல் போட்டு வாங்கி போட்டுதாம். ஏதோ நம்பிக்கை வெளிச்சம் கொஞ்சம் கொஞ்சம் தெரியுது. அவங்கள் அங்கை உயிரைக்குடுத்து தொழிலாளர் தினம் கொண்டாடேக்கை இஞ்சையொண்டு அறளை பேந்து வேறை ஏதோ ஆட்டிக்கொண்டிருக்குது எண்டு தம்பிமுத்து சொல்லிச்சு கடுப்பா நிற்கிற உந்த ஆள் அந்த காலத்தில இருந்து தமிழரசு கொடி பிடிச்சு அந்த ஆளுக்கு வக்காலத்து வாங்கிக்கொண்டிருந்த ஆள் பாருங்கோ.

கொஞ்ச நாளா உவன் பேரப்பொடியன் ஒரே ஓட்டம் பாட்டம் சிநேகிதங்களோட ஒரேகுசுகுசுப்பு. ஆனால் நான் அறிஞ்ச வரைக்கும் பொடியன் தண்ணீ கிண்ணியெண்ட ஒன்றுமில்லை எங்கட காலத்தியெண்டால் ஆரும் சோடியளை சேர்த்து வைக்கிறதுக்கு பெட்டையளை கடத்தினதும் கோவில் திருவிழாவிற்காய் அடிபட்டதுகளும்தான் மிச்சம். இப்பவும் கொஞ்சம் பழைய படி வெளிக்கிடடிருக்குதுகள் ஆனாலும் உவன் பொடியன் படிப்பு கிடிப்பெண்டு கம்பஸோட போனபடியால் தப்பியிட்டான்

முந்தியும் போன நவம்பர் 27 ஆம் திகதி ஓடியாடி விளக்கேத்தின வங்களுக்குள்ள உவனும் இருந்தவனெண்டு பிறகு தான் தெரிஞ்சுது இப்ப இவன் முள்ளிவாய்க்கால் நினைவுக்கு ஏதோ கூட்டுகளோட சேர்ந்து ஏதோ செய்யிறானெண்டு பொடியள் ஏதோ தமிழ் சனத்தின்ர கௌரவத்தை எப்படியோ காப்பாத்திப் போறாங்கள் புலம்பெயர் உறவுகளும் சர்வதேசமும் உங்க என்ன செய்து கொண்டிருக்கிறியள் எண்டு நாக்கை புடுங்குறமாதிரி கேக்கையுக்கை வேட்டி உரிந்து விழுகிற மாதிரி இருக்கும். அவனவன் றோட்டில மண்டை உடைந்து கிடந்தாலும் அதே வீறாப்போட எங்கட பொடியள் நினைவு தினத்தை கொண்டாடிப்போட்டாங்கள். கொஞ்சத்துக்கேனும் மானம் மரியாதை கிடக்கொண்டு பெருமை பட்டுகொள்ளலாம்.

இதுக்குள்ள கூட்டமைப்பை பதியுறது பழைய படி கவுத்துப்போட்டுதாம். விக்கிரமாதித்தான் விடா முயற்சியோட முருங்கை ஏறின கதையா கொஞ்சப்பேர் கோவணம் கட்டிவிடமுட்டுப்பட்டு பழைய படி வீடு திரும்பியிருக்கினம். கூட்டமைப்பு பதிவு செய்யப்படவேணும் அதிலமாற்றுக் கருத்தில்ல. ஆனால் இப்ப ஆருக்காய் பதிய முட்டுப்படுகின மெண்டதை பார்த்தால் தலையிடிக்கத்தான் இருக்கும். முள்ளிவாய்க்கால் பேரவலத்தை நியாயப்படுத்தின சங்கரியும் வவுனியா முகாம்களில் மிங்சிக்கிஞ்சியிருந்நத பொடியள கடத்தி போன ஆக்களும் இப்ப பதிய கூடி நிற்கினம் என்ன உன்னத நோக்கிற்கு கூட்டமைப்பு உருவாக்கப்பட் டதோ அந்த நோக்கமில்லை. இருக்க வேண்டியவங்களை வெளியில விட்டவங்கள் இப்ப உள்ளுக்கை நிக்கிறாங்கள்.

இப்படியே போற போக்கில எங்கட சனாதிபதி தன்ரை சுதந்திரக் கட்சியும் சேர்ப்போமேவெண்டால் ஒற்றுமை யெண்டு புது சாயம் பூசிக் கொண்டு ஓமெண்டுவெங்கள் நல்ல காலம் அவர்கள் இன்னும் கேக்கையில அந்த வகையில் இப்போதைக்கு பராவாயில்லை எது எப்படி இருந்தாலும் கூத்தமைப்பை பதிய விடக்கூடாதெண்டதில தமிழரசு வின்ர கடைசி கால தலைநரைச்ச தலைகள் கொஞ்சம் தெளிவா இருக்குதுகள்.



# மலையகம்

# தோட்டத் தொழிலாளர்களும் கூட்டொப்பந்தச் சம்பளமும்

தோட்டத்தொழிலாளர்களின் சம்பள விடயம் தொடர்பிலான கூட்டொப்பந்தம் மீளாய்வு செய்யப்பட்டு புதிய கூட்டொப்பந்தம் கடந்த 2011 ஜீன் மாதம் 6 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டமையும் இந்தக்கூட்டொப்பந்தம் 2013 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதி வரை அமுலில் இருக்குமென்பதும் அனைவரும் அறிந்த விடயமாகும். 21 பெருந்தோட்டக்கம்பனிகள், இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனம் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை என்பனவற்றின் நிருவாகத்துக்கு உட்பட்ட தோட்டங்களில் பணிபுரிகின்ற தொழிலாளர்களுக்கு புதிய கூட்டொப்பந்தத்திற்கேற்ப வேதனம் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. புதிய கூட்டொப்பந்தத்தில் அடிப்படைச்சம்பளமாக 380 ரூபாவும் நிலையான விலை பங்கு கொடுப்பனவாக 30 ரூபாவும் மாதமொன்றுக்கு வழங்கப்படுகின்ற வேலை நாட்களில் 75 வீதம் அல்லது அதற்கு மேலாக வருகைதருகின்ற தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கான வருகைக்கொடுப்பனவாக 105 ரூபாவும் வழங்கப்படுமென குறிப்பிடப்பட்டுள்ளது. அடிப்படைச்சம்பளம் மற்றும் நிபந்தனைக்கொடுப்பனவுகள் உட்பட தோட்டத்தொழிலாளி ஒருவர் 515 ரூபா சம்பளத்தினை பெற்றுக்கொள்ள முடியுமென புதிய கூட்டொப்பந்ததில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் தேயிலைத்தொழிலாளர்கள் மேலதிகமாக பறிக்கின்ற ஒவ்வொரு கிலோ தேயிலைக்கொழுந்துக்கும் 17 ரூபாவும் இறப்பர் தொழிலாளர்கள் மேலதி-கமாக சேகரிக்கின்ற ஒவ்வொரு கிலோ இறப்பர் பாலுக்கும் 25 ரூபாவும் வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகின்றது. இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ள இந்தக்கூட்டொப்பந்தத்தில் தொழிலாளர்களுக்குப் பாதகமான சில விடயங்கள் தொடர்பில் சுட்டிக்காட்டப்படவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

1. புதிய கூடடொப்பந்ததில் தொழிலாளி ஒருவர் ஒரு நாள் அடிப்படைச்சம்பளத்துக்குரிய வேலையின் அளவு குறித்து குறிப்பிடாத காரணத்தினால் தொழிலாளர்களின் உழைப்பு சுரண்டப்படவேண்டி நிலைமை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக ஒரு நாளுக்குரிய அடிப்படைச்சம்பளத்துக்காக எத்தனை கிலோ தேயிலைக்கொழுந்து பறிக்க வேண்டும் என்பது தொடர்பில் கூட்டொப்பந்தத்தில் குறிப்பிடாத காரணத்தினால் இந்த அளவினை தோட்ட நிருவாகத்தினரும் தோட்டத்தலைவர்களும் பேசித்தீர்த்துக்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.இதனால் ஒரு தோட்டத்தில் 15 கிலோ தேயிலைக்கொழுந்து பறித்தால் ஒரு நாட்சம்பளமும் இன்னொரு தோட்டத்தில் 18 கிலோ அல்லது 20 கிலோ தேயிலைக்கொழுந்து பறித்தால் ஒரு நாட்சம்பளமும் பெற வேண்டிய வேறுபாடான நிலைமைத் தோட்டத்தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் மேலதிகமாக பறிக்கப்படுகின்ற தேயிலைக் கொழுந்துகளுக்கான கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்வதில் தோட்டத் தொழிலா ளர்களுக்கு நஷ்டம் ஏற்படக்கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது. தற்போது இந்தப்பிரச்சினை தோட்டங்களில் விஸ்வரூபம் எடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



2. 75 வீதமான வருகைக்கொடுப்பனவு வழங்குவதிலும் தோட்டத் தொழிலாளர்களுக்குப் பாதகமான நிலைமை ஏற்பட்டுள்ளது. மாதமொன்றுக்கு வழங்கப்படுகின்ற வேலை நாட்களில் 75 வீதம் அல்லது அதற்கு மேலாக வருகைதருகின்ற தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கான வருகைக்கொடுப்பனவாக 105 ரூபாவும் வழங்கப்படுமென குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த விடயத்தில் கூட்டொப்பந்தத்தில் காட்டப்பட்டுள்ள உதாரணத்திற்கேற்ப மாதமொன்றக்கு 25 நாட்கள் வேலை வழங்கப்பட்டால் 18.75 நாட்கள் 25 வீத வருகையாகும் . இந்தக்கணிப்பு 18 நாட்களாக கணிக்கப்படுமென குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு கணிப்பிடுகின்ற போது தசம் 75 நாளுக்குரிய ஊக்குவிப்பு கொடுப்பனவை ( சுமார் 75 ரூபா ) பெற்றுக்கொள்ள முடியாத நிலைமை தோட்டத்தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

3. இந்தக்கூட்டொப்பந்தத்தில் அடிப்படைச்சம்பளமான 380 ரூபாவுக்கு மாத்திரமே ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி என்பன அறவிடப்படவுள்ளன. இவ்வாறானதொரு நிலையில் அடிப்படைச்சம்பளத்தில் மேலும் அதிகரிப்பு ஏற்பட்டிருந்தால் தொழிலாளர்கள் நன்மை பெற்றிருப்பார்கள்.

– சோமஸ்ரீதரன்

# கேள்வி பதில்

**க. பாமலோகினி**

**கேள்வி :** மட்டக்களப்பினில் நடந்து முடிந்த தமிழரசுகட்சியின் தேசிய மாநாடு?

**பதில் :** புதிய மொந்தையில் அதே பழைய கள்

**வே. குகநேசன் – அரியாலை**

**கேள்வி :** தேசியப்பட்டியல் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தமிழீழத்தை மக்கள் கேட்கவில்லையென்கிறாரே?

**பதில் :** சுமந்திரன் நாடாளுமன்ற உறுப்பினரானதே அவருக்கு எதிர்பாராத அதிஸர்ஷ்டம். அவரது கட்சி தலைவரும் வட்டுக்கோட்டையில் தமிழீழத்தை முன்மொழியும் மாநாடு நடக்கும்போது அங்க போகாமல் ஒழித்திருந்தவர்தானே. ஆனால் அடுத்த வருசம் நடந்த தேர்தலில பதவிய பிடிக்கிறதுக்காக தமிழீழம் பெற்றுத்தருவன் என்று பேசி பதவி பெற்றவர். இந்த நிலையில உண்மையை அறிவதற்கு முதலில் கோர்ட்டுக்கோ அரச விழாக்களுக்கோ போகாதிருக்கும் நாளொன்றில் அவர் கடந்த கால அரசியலை யாரிடமேனும் கேட்டறிந்து கொண்டாலாவது நல்லது.

**வ. சின்னத்துரை – எழுதுமட்டுவாழ்**

**கேள்வி :** சிறையிலிருந்து வெளிவந்துள்ள முன்னாள் இராணுவத்தளபதி சரத்பொன்சேகா வடக்கினில் படைக்குறைப்பு நிகழவேண்டுமென, பேட்டிகளில் கூறிக்கொண்டிருக்கின்றாரே?

**பதில் :** முன்னைய ரணில் அரசிற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே சமாதான பேச்சுக்கள் நடந்து கொண்டிருந்த காலமது. முகமாலை சூனியப்பிரதேசத்தில் படை தலைமை மட்டத்திலான சந்திப்புகள் நடந்து கொண்டிருந்தது. விடுதலைப்புலிகள் தரப்பினில் அப்போதைய களமுனை தளபதி தீபனும் (சில வேளை இப்போதைய பிரதி அமைச்சர் கருணாவும்) இராணுவ யாழ்மாவட்ட தளபதியும் பேசிக்கொண்டேயிருந்தார்கள். இடையில் போர் நிறுத்த கண்காணிப்பு குழுவினர். தமிழ் மக்களிடையே பேச்சுக்கள் தொடர்பான நம்பிக்கையை தோற்றுவிக்க. உயர்பாதுகாப்பு வலயத்தின் எல்லைப்புறங்களிலாவது ஓரிரு குடும்பங்களை அடையாளமாகவேனும் மீளக்குடியமர்த்த அனுமதிக்குமாறு விடுதலைப்புலிகள் தரப்பினில் கோரப்பட்டது. ஆனால் இராணுவ தரப்பினில் அந்த சிறு விட்டுக் கொடுப்பையேனும் செய்து கொள்ளவோ. சமரசத்திற்கோ. தயாராக இல்லாத மனோ நிலையே காணப்பட்டது. அதுவே பேச்சுக்கள் குழம்பிபோக காரணமாயும் இருந்தது அப்போது எதற்கும் விட்டுக்கொடுக்க தயாரா இல்லாது அகங்காரம் மிக்க அந்த இராணுவதளபதி சரத்பொன்சேகாவே இப்போது அவர் கூறுவதெல்லாம் தனக்கு தானே வெள்ளையடித்துக்கொள்ள முற்பட்டுள்ளார்.

**சி. திவ்வியன் – கைதடி.**

**கேள்வி :** பல்கலைக்கழக மாணவர்கள் மீதான தாக்குதல்களை கண்டிக்க கூட நிர்வாகம் பின்னடிக்கின்றதே?

**பதில் :** தியேட்டர்காரரிட கெடுபிடியால பல்கலைக்கழக நிர்வாகம் சுதந்திரமாகச் செயல்பட முடியவில்லை. மூதவை அங்கத்தவர்கள் கூட கட்சி அலுவலகங்களிலிருந்தே வருகின்றார்கள். பெரும்பாலான மூதவைக் கூட்டங்களின்ர முன்னோடிக் கூட்டங்களை தியேட்டர்களிலேயே நடத்த வற்புறுத்தியினமாம். தியேட்டர்காரர் நினைப்பவர்களை மாணவர்கள் தலைவர்களாககொண்டுவர முற்படுவதும் அதற்கான சாத்தியங்கள் அற்றுப்போகும் நிலையில் தெரிவுசெய்யப்பட்டவர்கள தாக்குவதும்தான் இப்ப நடக்குது. இந்த கெடுபிடியில பல்கலைக்கழக நிர்வாகம் என்னதான் செய்ய முடியும்.

**க. சுபமங்களா – தோப்புக்காடு, காரைநகர்**

**கேள்வி :** கூட்டமைப்பு பிரதேச தலைவரொருவர், முகாம் அமைக்க கடற்படைக்கு காணி ஒதுக்கி வழங்கியுள்ளாரே?

**பதில் :** உண்மையில் பெரும்பாலான உள்ளூராட்சி சபைகள் இப்போது மேய்ப்பன் இல்லாத ஆடுகள் போன்றிருக்கின்றன. மக்களுக்கு எதையுமே செய்யமுடியாது அவை திண்டாடுகின்றன. உள்வீடு குத்துப்பாடுகள் பலவும் வெளியே எழுதப்படாதவை. குறிப்பாக கட்சி பிரிந்து மோதுவதும். அவருடைய ஆள். இவருடைய ஆள் என அடையாளப்படுத்தி விடுவதும் கூட சாதாரணமாகவேயுள்ளது. இவற்றை தீர்த்துவைக்க வேண்டியவர்கள் அடிக்கடி நாடு சுற்றிக்கொண்டிருக்கிறார்கள். அவ்வகையிலேயே கடற்படைக்கு காணிகொடுத்த கதையும்.இன்னும்பல அரங்கேறும். ஆவலுடன் பார்த்திருங்கள்.

**சி. நிருஷா – சாவகச்சேரி**

**கேள்வி :** வடகிழக்கினில் நம்பிக்கையை தரும் வருகையினில் உருவான சிவில் சமூக அமைப்பு, அமைதியாகி விட்டதே?

**பதில் :** இல்லை சத்தமின்றி மிகவும் துல்லியமாக அவர்கள் நகர்ந்து கொண்டிருக்கிறார்கள் இராஜதந்திரிகளை சந்தித்து கள யதார்த்தங்களை சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். நாடு கடந்தும் பல்வேறுதரப்புக்களுடன் தொடர்புகளை பேணியே வருகின்றது. மக்கள் முதலில் செய்யவேண்டியது முழுமையாக தமது தார்மீக ஆதரவை வழங்கிப் பலப்படுத்துவது.போலிகளாக நடமாடும் ஒரு சில தரப்புகளை விரட்டியடிப்பது.

## இலக்கியம்

# ஹேமா அக்கா

– இளங்கோ

'ஐயோ, ஹேமா அக்கா கிணத்துக்குள்ளை குதிச்சிட்டா' என்று கத்திக்கொண்டு நாங்கள் கிணற்றை நோக்கி ஓடிக்கொண்டிருந்தோம்.

பின்னேரம் நான்கு மணியிருக்கும். வெயிலில் குளித்தபடி விளையாடிக்கொண்டிருந்தபோதுதான் ஹேமா அக்கா கிணற்றுக்குள்ளை குதிப்பதைப் பார்த்தோம். மலைகளும் நதிகளுமில்லாத யாழ்ப்பாணத்தில் கிணறுகள் தான் நீர் சார்ந்த தேவைகளுக்கு அமுதசுரபி. இந்தியன் ஆமி வந்தகாலத்தில் கூட, இப்படி அள்ள அள்ளக்குறையாத நல்ல தண்ணியும், தாராளமாய் லக்ஸ் சோப்பும் கிடைக்கும்போது என்ன சனியனுக்கு நீங்கள் சண்டை பிடிக்கிறியள் என்றொரு ஆமிக்காரன் சனத்தை செக்பொயின்றில் வைத்து பரிசோதித்துப் பார்க்கும்போது கேட்டதாயும் ஒரு கதையிருந்தது. அவன் அப்படிகேட்டதிலையும் பிழையில்லைத்தான். நல்ல தோட்டக்காணிகள், நிறைய பனைமரங்கள், ஆடு மாடுகள் என்று எங்கள் ஊரிலை சனங்கள் இருந்தபோது அவனுக்கு அப்படித் தோன்றியதில் பிழையுமில்லை.

நாங்கள் கத்து கத்தென்று கத்த அண்டை அயலிலிருந்த சனமெல்லாம் கிணற்றடியில் கூடிவிட்டது. விழுந்த கிணறு ஒரு பங்குக்கிணறு. ஆனால் பங்கிருக்கிறவையள், இல்லாதவையள் என்று ஊரிலையிருக்கிற எல்லாச் சனமும் அதைத்தான் பாவிக்கிறவையள். எங்கள் ஊரின் மண், சனம் சாதி பார்க்கிற மாதிரி வஞ்சம் எதுவும் செய்ததில்லை. யார் தோண்டினாலும் நல்ல தண்ணியைத் தந்துகொண்டிருந்தது.

இலங்கை ஆமியின் ஒபரேஷன் லிபரேசனோடு தொடங்கிய பொம்மரடியிலிருந்தும், பலாலியிலிருந்தும் காங்கேசந்துறையிலிருந்தும் அடிக்கின்ற ஷெல்லடியிலிருந்தும் தப்புவதற்கென, நானும் அம்மாவும் கொஞ்சம் கொஞ்சமாய் எங்கள் வீட்டு செவ்விளநீர் மரத்தடிப் பக்கமாய் வெட்டத் தொடங்கிய பங்கருக்குள்ளேயே ஆறடி வரமுன்னரே தண்ணீர் ஊற்றெடுத்துப் பாய்ந்திருக்கின்றது. 'டொங்கு டொங்கு' என்று அலவாங்கு போட உறுதியாயிருக்கும் சுண்ணாம்புக் கல்லுக்குள்ளிலிருந்து எப்படித்தான் இப்படி நல்ல சுவையான தண்ணீர் வருகின்றதென்பது எனக்கும் அந்த வயதில் சரியான வியப்பாய்த்தானிருக்கும்.

ஹேமாக்கா விழுந்த கிணறு தண்ணியள்ளுகின்ற கிணறு என்றபடியால் அந்தளவு ஆழ்ப்பமில்லை. ஆனபடியால் தப்பிவிட்டா. இப்போ யோசிக்கும்போது ஹேமாக்கா தான் உயிரோடும் இருக்கோனும், ஆனால் அதேசமயம் தனது எதிர்ப்பையும் காட்டவேண்டுமென சமயோசிதமாய் யோசித்துத்தான் இந்தக்கிணற்றுக்குள்ளை குதித்திருப்பா போல... இல்லை, தன் உயிரை மாய்த்துக்கொள்ள வேண்டும் என்று நினைத்திருந்தால் அவா தன் வீட்டுக்கு இரண்டு வீடுகள் தாண்டிக்கிடந்த ஆழ்ப்பமான கிணத்துக்குள்ளையெல்லோ குதித்திருக்கவேண்டும். அந்தக்கிணத்துக்குள்ளை குதித்தால் சனம் உயிரோடு தப்பமுடியாதளவுக்கு அந்த மாதிரி ஆழ்ப்பமாயும், அடியில் நிறையப் பாசியுமாயும் அது இருந்தது.

'ஹேமாக்கா வெளியே வாங்கோ, வெளியே வாங்கோ' என்று நாங்கள் கிணத்துக்கட்டைச் சுற்றி குஞ்சைப் பருந்திட்டைப் பறிகொடுத்த கோழி மாதிரி கத்திக்கொண்டிருந்தோம். ஹேமாக்கா என்ன கட் வுமனா இல்லை சுப்பர் வுமனா... சும்மா அப்படியே 'விர்ர்' என்று கிணத்துக்குள்ளையிலிருந்து பறந்துவர. யாரோ ஒராள் நல்ல மொத்தமான கயிறையெடுத்து கிணத்துக்குள்ளை விட அவா அதைப் பிடித்து ஏறி வரமாட்டேனென அடம்பிடித்துக்கொண்டிருந்தா. அவாவை எப்படி வெளியே எடுக்கிறது என்று எல்லோருக்கும் பெரிய பிரச்சினையாய்ப் போயிட்டுது. அதைவிட பரபரப்பாய் வந்த சனமெல்லாம் ஏன் இந்தப் பெட்டை கிணத்துக்குள்ளை குதித்தாள், அதற்கான காரணம் என்னவென்று ஆராயத்தொடங்கிவிட்டது.

பொழுதும் கொஞ்சம் கொஞ்சமாய் இருளத்தொடங்கிவிட்டது. ஹேமாக்காவும் கீழே விட்ட கயிற்றைப் பிடித்துக்கொண்டு மேலேயேறி வரமாட்டென அடம்பிடித்துக்கொண்டு உள்ளுக்குள்ளேயே அழுதுகொண்டிருக்கிறா. யாராவது பெடியனை கிணத்துக்குள்ளை இறக்கி அவனைப் பிடித்துக்கொண்டு ஹேமாவாக்காவை தூக்கலாமெண்டாலும், ஹேமாக்கா ஒரு குமர்ப்பெட்டையாயிருப்பது 'கற்பு' சார்ந்த பிரச்சினையாகவும் சனத்துக்கு இருக்கிறது. வயதுபோன கிழடுகளை இறக்கலாந்தான். ஆனால் ஹேமாக்காவின் பாரத்தை தங்கடை தோளிலை தாங்கிக்கொண்டு கயிற்றைப் பிடித்துக்கொண்டு மேலே ஏறுவதற்குள் கிழடுகளுக்கு சீவன் இருக்குமா என்பதும் கேள்விக்குரியதுதான்.

ஒரு தற்கொலை முயற்சி தப்பித்துவிட்டது என்ற நிம்மதிப்பெருமூச்சை தெரிந்தே செய்கின்ற ஒரு கொலையில் பரீட்சித்துப் பார்க்க எவருக்கும் அவ்வளவாய் உடன்பாடில்லை. எனவே கிழவர்களையும் இறக்கமுடியாது. ஆக இவ்வாறாக ஹேமாக்காவை வெளியே எடுப்பது பெரும் சிக்கலாகிவிட்டது. வெளியே நிற்கிற சனம் என்ன செய்வது என்று கையைப் பிசைந்துகொண்டிருப்பதைப் பார்த்துப் பார்த்து சலித்தே ஹேமாக்கா தான் இந்தக்கிணத்துக்குள்ளை குதிக்க முன்னர் தன் முடிவை ஆழ மறுபரிசீலனை செய்திருக்கலாம் என்று கூட நினைத்திருக்கலாம்.

கடைசியாய், இரண்டுபக்கமும் கையிருக்கிற கதிரையிலை நான்கு கயிறைக் கட்டி ஒரு பெட்டியை இறக்கிறமாதிரித்தான் கதிரையை இறக்கிச்சினம். ஹேமாக்கா கதிரையிலிருந்து நாலு கயிற்றில் இரண்டு கயிற்றைக் கையிரண்டாலும் பிடிக்க, வெளியிலிருந்து சனம் தூக்கத்தொடங்கிச்சினம். சூரன்போரிலை சூரனையும் முருகனையும் அங்கால் பக்கம் இங்கால் பக்கம் ஆட்டுகின்ற மாதிரி கிணத்தின்றை உட்சுவரிலை அடிபட்டு அடிபட்டு ஹேமாக்கா வெளியே வந்திருந்தா. அவாவைப் பார்க்கச் சரியாய்ப் பாவமாயிருந்தது. மழைக்காலத்திலை நனைகின்ற கோழிக்குஞ்சுகள் மாதிரி பாவாடை சட்டை எல்லாம் நனைந்து கூனிப்போயிருந்தா. அத்தோடு சனமெல்லாம் ஒரு மாதிரியாய்ப் பார்த்த பார்வை அவாவையின்னும் கூனிக்குறுகச் செய்திருக்கும்.


ஹேமாக்கா கிணற்றில் விழுந்தற்கான காரணத்தை சனம் அலசிப் பிழிவதற்கு முன்னரே எனக்கு அதற்கான காரணம் தெரிந்திருந்தது. உண்மையிலேயே சனம் ஹேமாக்காவைக் குற்றவாளிக்கூண்டில் ஏற்றினால் நானுமோர் சாட்சியாக ஏறத்தான் வேண்டியிருக்கும். ஆனால் அவ்வாறான பொழுதில் மவுனமாய் இருந்திருப்பேனே தவிர ஹேமாக்காவிற்கு எதிராய் எதுவும் சொல்லியிருக்கமாட்டேன் என்று உறுதியாய்ச் சொல்வேன். எனெனில் ஹேமாக்கா அவ்வளவு நல்லவர் எனக்கும் அவாவை எங்கடை அம்மாவிற்கு அப்படிப் பிடிக்கும்.

எங்கள் வீட்டையும், ஊரிலையிலிருந்த பள்ளிக்கூடத்தையும் பிரிப்பது ஒரு ரோட்டுத்தான். கல்லு நிரப்பி தார் ஊற்றி சமதளமாய் அமைப்பதுதான் தெருவென்றால், இதைத் தெருவென்றே கூறமுடியாது. ஒரு வெள்ளவாய்க்காலாய் இருந்து காலப்போக்கில் பரிணாமடைந்து ஒரு ஒழுங்கையாகிவிட்டது என்றுதான் சொல்லவேண்டும். மழை பெய்து வெள்ளம் ஓடுகின்ற வேளையில் வாழைக்குற்றியில் வள்ளம் விடுவதற்கு மிக உகந்த இடமெனச் சொல்லலே இன்னும் சாலச் சிறந்தது. அவ்வாறு எங்கள் வீடுகளையும், பள்ளிக்கூடத்தையும் பிரிக்கின்ற ஒழுங்கையினூடு நீங்கள் செல்வீர்களாயின் 'ட'வடிவில் நீங்கள் வலது கைப்பக்கமாய் திரும்பினால் ஒரு ஹொஸ்டலைக் காண்பீர்கள்.

அங்கேதான் தூர இடங்களிலிருந்து வந்து பெடியன்கள் படித்துக்கொண்டிருப்பார்கள். ஹொஸ்டலிலிருந்து பின்பக்கமாய் ஒழுங்கைக்குள் நுழைவதற்கு இருக்கும் கேற் எப்பவும் பூட்டியபடியேதான் இருக்கும். எனவே ஹொஸ்டலுக்குப் போவதற்கோ அல்லது அங்கிருந்து வெளியே வருவதற்கோ நீங்கள் உயரம் பாய்தலில் தேர்ச்சி பெற்றவராக இருக்கவேண்டும். ஏனெனில் மதிலேறிக் குதிக்கவேண்டும். என்னைப் போன்றவர்கள் ஹொஸ்டலில் படம் போடும்போது, படம் தொடங்கியபின் இருட்டோடு இருட்டாய் உள்ளே மதிலேறிக்குதித்துப் போய்விடுவோம்.

படம் தொடங்கப்போகின்றதென்றால் ஹொஸ்டலில் இருக்கும் அண்ணாமார்கள் விசிலடிப்பார்கள். நாங்கள் முன்னேறிப்பாய்வதற்குத் தயாராய் ஹொஸ்டல் மதிலடிக்கடியில் நின்றுகொண்டு இருப்போம். ஆனால் நாங்கள் சிறுவர்களாயிருந்ததால் மதிலில் ஏற்றிவிடுவதற்கு யாரினதோ உதவி தேவையாகவிருக்கும். இவ்வாறாக நிறையப் படங்களைப் பார்த்திருக்கின்றோம், சில அண்ணாக்களின் பிறந்தநாள் கொண்டாட்டங்களில் கலந்துகொண்டிருக்கின்றோம்.

ஹொஸ்டலிருக்கும் பெடியங்களுக்கு சிலவேளைகளில் கரண்டில்லாவிட்டால் குளிக்கத் தண்ணியில்லாது போய்விடும். அப்போது மடடும் பின்பக்க கேற் திறக்கப்பட்டு எங்கள் வீட்டுக்கிணறுகளில் குளிக்க ஹொஸ்டல் நிர்வாகத்தால் அனுமதிக்கப்படுவார்கள். ஹொஸ்டல் பெடியங்கள் குளிக்க வாறாங்கள் என்டால், எங்கடை ஊரும் அல்லோலகல்லோலப்பட்டுவிடும். இன்னும் குறிப்பாகச் சொல்லப் போனால், ஊரிலையிருக்கிற குமர்ப்பெட்டையளுக்குத்தான் உள்ளூற மகிழ்ச்சி ததும்பியோடியபடியிருக்கும். அதுவரை வீட்டிலை அம்மாமார் 'பிள்ளை தண்ணியள்ளிக்கொண்டு வாங்கோ' என்றால் ஓடிப்போய் ஒளித்துக்கொள்பவர்கள் கூட ஹொஸ்டல் பெடியங்கள் குளிக்க வாறாங்கள் என்றால் வாளியோடு கிணத்தடிக்கு அடிக்கடி போவதும் வருவதுமாய் இருப்பார்கள். கிணத்தடியில் விழிகளும், புருவங்களும் நிகழ்த்துகின்ற உரையாடல்களுக்கு காப்பியங்களின் சுவை கூட நிகரானவையா என்பது சந்தேகந்தான். தாங்கள் இரகசியாய்ப் பெண்களால் இரசிக்கப்படுகின்றோம் என்று, ஹொஸ்டல் பெடியங்களுக்கும் நன்கு தெரியும். எனவே ஹொஸ்டலை விட்டு வரும்போது ஏதோ பெரிய ஊர்வலம் வாற மாதிரி கத்திக் குழறி தங்கள் வரவை பறைசாற்றிக்கொண்டே வருவார்கள். இன்னுஞ்சிலர் உற்சாகத்தின் மிகுதியில் சேர்ட் எல்லாம் கழற்றி கையில் வைத்தபடி, தமது 'ஆண்மையை' காட்டமுயற்சிப்பார்கள். அந்த நேரத்தில் எத்தனையோ வீடுகளின் வாசல்களில் இருந்து வெளிவந்த பெருமூச்சுக்களின் வெப்பத்தில் அடுப்புகளில் தீ கூட பற்றியெரிந்திருக்கலாம்.




இப்படி குளிக்க வந்த பொழுதிலோ அல்லது வேறு சந்தர்ப்பத்திலோதான் ஹேமாக்காவிற்கும் சசி அண்ணாவுக்கும் நேசம் முகிழ்ந்திருக்க வேண்டும். அவர்களுக்கிடையிலான ஊடாட்டங்களுக்கு நானொரு தூதுவனாக மாறவேண்டியிருந்தது. கடிதப்பரிமாற்றங்கள், உடனடிச் செய்திகள், திட்ட மாற்றங்கள் என்று பல்வேறு பரிணாமங்களில் ஊழியம் செய்து அவர்களின் காதலுக்கு நானொரு தவிர்க்கமுடியாத தீவிர தொண்டனானேன். இவ்வாறான ஊழியங்களுக்கு ஹேமாக்கா தங்கடை வீட்டில் நின்ற மரங்களிலிருந்து விளாம்பழங்கள், தோடம்பழங்களையும், ஆலமரத்தடிச் சந்தியிலிருந்த முருகன் விலாஸில் எட்னா, கண்டோஸ் வகையான சொக்கிலேட்டுக்களையும், வாய்ப்பன்களையும் போண்டாக்களையும் சன்மானமாக அளித்து தனது அன்பையும் மதிப்பையும் வெளிப்படுத்தியிருந்திருக்கிறார்.


ஒருநாள் இப்படித்தான் ஹேமாக்காவும், சசியண்ணாவும் ஹொஸ்டல் மதிலடியில் சந்திப்பதாய் ஏற்பாடு. வழக்கம்போல நிகழ்வதுபோல ஹேமாக்கா என்னை மதிலால் தூக்கிப்பிடிக்க நான் விசிலடித்து சசியண்ணாவுக்கு சிக்னல் அனுப்பினேன். இவ்வாறான சந்திப்புக்கள் நல்லாய்ப் பொழுது பட்டு, இரவு மூடுகின்ற ஏழுமணியளவில்தான் நடக்கும். அப்போதுதான் ஒழுங்கைக்குள் சன நடமாட்டம் குறைவாயிருக்கும். அத்தோடு சனம் தற்செயலாய்க் கண்டாலும் யாரென்று முகம் பார்ப்பதற்குள் தப்பியோடக்கூடியதாகவும் இருக்கும். நான் மதிலுக்குள்ளால் எட்டிப்பார்த்து சசியண்ணா வாறாரா என்று பார்த்துக்கொண்டிருந்தேன். குரலை வைத்துத்தான் அடையாளம் காணக்கூடியளவுக்கு அன்று நல்ல இருட்டு. என்னுடை விசில் சத்தம் கேட்டு வந்த


(13ஆம் பக்கம் பார்க்க)

# துவண்டுபோகாதே உன் உறவுகள் இங்குண்டு...




வீடுதேடி வந்துள்ளோம் உறவுகளே....



கைகொடுப்போம் உறவுகளுக்கு...


மீண்டும்... மீண்டும்... முளைப்போம் புதிதாய்...


மீண்டும்...மீண்டும்.... முளைப்போம் புதிதாய்....



யாருமற்றுப் போகவில்லை...


தமிழ் மக்களது விடுதலைப்பயணத்தில் பிரிவுகள் மற்றும் துரோகங்கள் என்பவை மன்னிக்கப்படாதவையாக எஞ்சியுள்ளது. காலத்திற்குக்காலம் அத்தகைய துரோகத் தனங்களால் எங்கள் விடுதலைப் பயணம் தடைப்படுத்தப்பட்டமை, அல்லது அந்தப் பயணத்தின் முனைப்புக்கள் மழுங்கடிக்கப்பட்டமை ஒன்றும் இரக சியமானதல்ல. இதற்கு வரலாற்றில் அதிக சாட்சியங்கள் எஞ்சியே இருக்கின்றன.
இந்த வகையில்த்தான், ஆயுதப்போராட்டத்தின் மௌனிப்பின் பின்னர். அதாவது 2010 ஆம் ஆண்டு கூட்டமைப்பில் அங்கத்துவம் பெற்றிருந்த பராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் ஒட்டு மொத்த துரோகங்கள் மத்தியில் அதிலிருந்து விலகி தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினை உருவாக்கியிருந்தனர். அப்போது அவ்வாறு வெளியேறிய அவர்கள் தமிழின விடுதலைக்கு துரோகமிழைத்து விட்டதாகவும், துரோகிகளாகவும், தீண்டத்தகாதவர்களாக்கப்பட்டார்கள். சில வேளைகளில் அடையாளப்படுத்தப்பட்டார்கள் அல்லது விதந்துரைக்கப்பட்டார்கள்.
அதிலுள்ள சரி பிழைகளை பேசாது மக்களில் பெரும்பாலானவர்கள் அதை மௌனமாகப்பார்த்துக்கொண்டிருந்தார்கள். முள்ளிவாய்க்காலில் எங்கள் இனம் அடியோடு சிதைக்கப்பட்டு, அடிமைகளாக முகாம்களிலும், சிறைகளிலும், சித்திரவதை கூடங்களிலும், தள்ளப்பட்டு, ஒருவேளை உணவுக்கு கூட அல்லற்பட்டுக் கொண்டிருக்கும்போது, ஒற்றுமையாக இருக்காமல் பிரிந்து துரோகமிழைத்து விட்டார்கள், அரசாங்கத்திடம் பணம்பெற்றுவிட்டார்கள். என்றெல்லாம் ஆயிரம் கதைகள் பேசப்பட்டன. அன்றைய சூழலில் பிரிவு அல்லது பிளவு பொருத்தமற்றதாக இருந்திருக்கலாம். ஆனால் மறுபுறம் அது தவிர்க்க முடியாததொன்றாகவும் இருந்தது என்பதே கள யதார்த்தம். எந்த இனம் எந்த நோக்கத்திற்காக அளப்பரிய தியாகங்களோடு போராடி காயப்பட்டு கிடந்ததோ. அந்த இனம் நோக்கத்தை அடையாமலேயே அடிமைப்படுத்தப்பட்டு, அழிந்து விடக்கூடாது என்பதற்காகவே தமிழ்தேசிய மக்கள் முன்னணி உருவாக்கப்பட்டது.
வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்கள் கடந்த 60வருடங்கள் எந்தக் கொள்கைகளை முன்கொண்டு போராடினார்களோ அந்த கொள்கைகளில் தளர்வை, அல்லது அந்த கொள்கைகளை கைவிட்ட நிலையில் கூட்டமைப்பு பயணிக்கின்றது என்று அப்போது சொன்னவற்றை பலரும் சந்தேகத்துடனேயே பார்த்தனர். ஆனால் இன்று நடந்து கொண்டிருப்பதை மக்கள் நேரில்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். கூட்டமைப்பு மீது நம்பிக்கையிழந்தனர். எனவே தான் ஆயுதப் போராட்டத்தின் பின்னர் இனவிடுதலைப் போராட்டத்தின் நீட்சியாக தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி பயணிக்க வேண்டும் என மக்கள் வலியுறுத்த தொடங்கினர். அவ்வகையிலேயே தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி பயணிக்க தொடங்கியது. தன்னின மக்களுக்காக குரல் கொடுத்து வரும் அதே வேளை போரினால் வீழ்த்தப்பட்ட மக்களை மீட்டெடுப்பதில் தொடர்ந்தும் முன்னணி பாடுபட்டே வருகின்றது. தொடரும் பயணத்தில் கடந்த மூன்று வருடங்களில் முன்னணியின் மீது பூசப்பட்டிருந்த சாயம் வெழுக்க ஆரம்பித்திருக்கின்றது. மக்களிடம் நாம் தமிழ்த்தேசியத்தின் மீது பிரிக்கப்படாத பற்றுறுதி கொண்டவர்களென அடையாளப்படுத்தப்பட்டிருக்கின்றோம். வெறுமனே தேர்தல் காலங்களில் மட்டும் தேசியம் கதைத்து வருபவர்கள் இவர்களல்லர் என்பதும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்த்தேசத்தின் இறைமையை வலியுறுத்தி, எங்கள் பயணம் தொடரும்., தமிழ் மக்களிற்கு துரோகங்களை இழைப்பவர்கள் யார்? என்பதை காலம் பதில் சொல்லும்,


இழந்ததை எண்ணி இனியும் இழக்காமலிருப்போம்.....


தேடிவரும் உறவுகள்...


ஊரில்லை ஆனால் உறவுண்டு உயிரோடு....


எல்லோரும் உன் பிள்ளைகளே அம்மா!


பாதை தருகிறேன் நடக்கதாயாரகு...


எவன் சொன்னது நீங்கள் தனித்துவிடப்பட்டதாய்...

# கவிதை

## அது ஒரு புதுவிடயம் இல்லை

பக்கத்துவீட்டு பவளம் மாமி
ஊர் எல்லாம் நடந்து உலைந்து
பெட்டி பாய் வாங்கி வந்து
திண்ணைவேலிச் சந்தை போவார்!
அவந்றை எல்லாம் விந்று
நாலு காசை நாற்பது காசாக்குவார்!

பவளம் மாமி வரப் போறா...
பவளம் மாமி வரப் போறா...

என்று
ஊரிலும் வெளியூரிலும்
போட்டியாகப் பெட்டி பாய்கள்
இளைப்பார்கள்
அந்தக்காலப் பெண்கள்!

உடன் காசு தருவார் என்ற புளுகத்தில்
வலு வேகமாகப் பெட்டி பாய் இளைப்பு தொடரும்!
சிறுதுளி பெரு வெள்ளம் என்று சொல்லுவார்கள்
இப்ப பவளம் மாமியைப் பிடிக்கேலாது

'ஏசி மாமி' எண்டால்தான் எல்லாருக்கும் தெரியும்!
பின்னெ என்னெங்கோ..!
அவவின் நாலு ராசாக்களும்
கனடா லண்டன் பிரான்ஸ் என்று போய்

உழைத்துக் கமறுறாங்கள் பாருங்கோ!
பெரி ய கல்வீடு
மாபிள் பதித்த வீடு
உல்லாசமாக படுத்துறங்குகிறார்
பவளம் மாமி!

வீட்டு வேலை செய்யவென்று சுந்தரியக்கா
அங்கு வருவார்!
தோட்ட வாழைகளுக்குத் தண்ணி மாறவென்று
வேலப்புவும் அங்கு வருவார்!
பவளம் மாமி ஒரு நாட்டாமைக்காரிதான்
வேலைக்காரர்கள் எல்லாரும்
பறந்து பயந்து ஓடிவந்து வேலை செய்வார்கள்

பொழுது போக்க கலர் ரீவியில் படம் பார்ப்பார்
மாமிக்கு நயன்தாரா என்றால் ரொம்ப விருப்பமாம்
அதனால் அவவை
நயன்தாரா மாமி என்றுதான்
பெடியள் கூப்பிடுவாங்கள்
மாமிக்கும் சரியான புளுகம்!

தாகம் வந்தால் கூல் சோடாதான் குடிப்பார்
'டீப் பிறிச்' ஒன்றும்
படுக்கையறைக்குத் தனியாக ஏசி என்றும்
ஒரே உல்லாசம் மாமிக்கு!
இருந்த போதும்
ஒரு மாத மின்கட்டணம்

இருநூறு ரூபாவுக்கு மேல்
பில் வந்ததில்லை இப்பவும்!
'மின்சாரத்தைத் சிக்கனமாகப் பாவியுங்கோ
அப்பிடிப் பாவித்தால்
ஒருமாத மின்கட்டணம் சலுகை'
என்ற
அரச விளம்பரத்தை பார்த்தவர்
கள்ளக்கறண்டு எடுத்து
மின்சாரக்கட்டணத்தில் சிக்கனம் காட்டிச்
சாதனை செய்தார் பவளம் மாமி!

அடுத்தமாதம் இவவுக்கும்
ஒரு மாத மின்கட்டணம் விலக்கானாலும்
அது ஒரு விடயம் இல்லைப் பாருங்கோ!

*சமரபாகு சீனா.உதயகுமார்*

## அம்மா

நல்ல கவிதைகள் நான் படைக்க
என்னைப் படைத்த
அழகிய கவிதை என் அம்மா!
அம்மாவின் அருகிலிருந்த காலங்கள்
இனிமையாகவும் இங்கிதமாகவும்
சுகம் வளர்ந்த காலங்கள் என்பேன்..!

எங்கள் அம்மா அதிக தூரம் நடப்பாள்...
துலாப்பிடித்து இழுத்து தண்ணீர் அள்ளி வருவாள்!
தலைமேல் சும்மாடு அணையாக...

மண்குடத்தில் தண்ணீர் நிறைந்திருக்கும்
தலையிலும் இடுப்பிலும்
தண்ணீர்க்குடங்கள் கனத்துகொள்ளும்
வெயிலிலும் மழையிலும் காததூரம் நடந்து
தண்ணீர் அள்ளிவந்து
எங்கள் தாகம் தீர்த்தவள் அம்மா!

மாலை நேரங்களில் கிணற்றடி கூட்டிச் செல்வாள்
நாங்கள் இளவல்கள் ஐவரும்
வரிசையாக இருந்து
அம்மாவின் அழைப்பிற்காகக் காத்திருப்போம்!

ஒவ்வொருத்தராக அம்மா அழைப்பாள்..!
அழகாகவும்... அவதானமாகவும்...
குளிப்பாட்டுவாள்..!
ஆழமான கிணற்றின் துலாக்கொடி பிடித்து
துள்ளித் துள்ளி... இழுத்து வலித்து...
தண்ணீர் அள்ளிக் களைத்துப் போவாள் அம்மா!
அம்மாவின் சுமைகளும்! அம்மாவின் வலிகளும்!
அறியாத பிள்ளைகளாக அன்று நாங்கள்!

நானும் தம்பியும்
அம்மாவிற்கு ஓட்டம் காட்டுவோம்
சிறு கம்பு முறித்து வந்து
எங்களைக் கலைத்துப் பிடித்து வந்து
குளிப்பாட்டுவாள்!

ஒவ்வொரு சனியும் நல்லபடி நீராட்டுவாள்
விடியற் பொழுதில் தலையிலும் உடலிலும்
நல்லெண்ணெய் தேய்த்து சூடுகலைத்து
ஒவ்வொருத்தருக்கும்
இருபத்தொரு வாளி தண்ணீர் என்று
அள்ளி முழுகவார்ப்பாள் அம்மா..!
முழுக்கு முடித்து தலை ஈரம் துவட்டி
உச்சி வகிடெடுத்து பவுடர் போட்டு
சுட்ட உள்ளியைப் பக்குவமாகப் பிரித்து எடுத்து
ஊட்டி விடுவாள்! அம்மா
உன் இத்தனை செயல்களிலும்

உன் இத்தனை அர்ப்பணிப்புக்களிலும்
உன் பக்குவம் உணர்ந்தோம்
அம்மா..!

எங்களுக்காக நீ பெற்ற சுமைகளும்
எங்களுக்காக நீ கொண்ட வலிகளும்
எங்கள் இதயங்களில் வரி வரியாக
வந்து விழுந்து வலிமை பெறுகின்றன..!

எத்தனை உறவுகள்
எங்களுக்கென்று இருந்த போதும்
உனக்கு மட்டும் எப்பிடி..?
இப்படி..!
எங்களுக்காகவே வாழ முடிந்திருக்கிறது!

அம்மாவின் பெருமைகளும்
அம்மாவின் கருணைகளும்
அம்மாவின் தியாகங்களும்
நன்கு உணர்ந்தோமே இன்று!

அம்மா..!
இனியாவது ஓய்வாக இருங்கள்
எங்களுக்கெல்லாம்
பிள்ளையாக இருங்கள்..!

தன்நலம் கருதாமல்
தன்னடக்கமாக வாழ்ந்த விதமும்
தன்பசி மறந்து எங்கள் பசிகாத்த முறையும்
தன்பிணிக் காலங்களிலும்
எங்களுக்கான தன்பணி மறக்காத திறனும்
தானாக நினைத்து
ஊனாகத் தன்னை உருக்கிய கொடையும்
உன்னை விஞ்ச இங்கே எவர் உண்டு என்று
சொல்லுங்க அம்மா..! சொல்லுங்க..!

அம்மா..! அம்மா..! அம்மா..!
எங்களுக்காகவே வாழும் அம்மா
அம்மா..! அம்மாதான்..!



*சமரபாகு சீனா.உதயகுமார்*

# சம்பந்தனின் 'இராசதந்திரத்தை' விளக்கிக்கொள்ளல்

**தமிழரசுக் கட்சியின் தலைவர் திரு.இரா.சம்பந்தன் கட்சியின் மட்டக்களப்பு மகாநாட்டில் ஆற்றிய உரை பற்றிய ஓர் விமர்சனக்குறிப்பு**

27 மே 2012 அன்று இலங்கை தமிழரசுக் கட்சியின் 14 ஆவது மகாநாட்டில் அதனது தலைவர் இரா சம்பந்தன் ஆற்றிய தலைமையுரை பன்மைப்பட்ட நோக்கங்களைக் கொண்டதாக அமைந்திருந்தது. இவ் நோக்கங்களிடையே முரண்படும் தன்மைகள் இருந்தமை காரணமாக இவ்வுரையினுடைய 'இராசதந்திரம்' நிறைவேறியுள்ளதா என்பது கேள்விக் குறியே. தமிழ் மக்கள் மத்தியிலிருந்து தமிழ்தேசியக் கூட்டமைப்பினருக்கெதிராக வலுத்து வரும் விமர்சனங்களைத் தணிக்கவேண்டிய வரலாற்று நிர்ப்பந்தம் சம்பந்தனுக்கு இவ்வுரையில் இருந்தது. அதே வேளை தமது 'மதவாத' இராசதந்திரத் தன்மை, நல்ல பிள்ளைதன்மை, தொடர்பில் சர்வதேச சமூகத்திற்கும் சிறிலங்கா அரசாங்கத்திற்கும் சிங்கள மக்களுக்கும் உறுதிமொழியொன்றை வழங்க வேண்டியதேவையும் சம்பந்தனுக்கு

> **முதன் முதலாக தமிழ் மக்களுக்கெதிராக நடாத்தப்பட்ட கொடூரத்தை 'இனப்படுகொலை' என சம்பந்தன் வர்ணித்துள்ளார். பொதுவாக இனப்படுகொலை என்பது 'funoudo' ஐக் குறித்து நிற்பதாகக் கருதப்படும். சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் ரோம் சட்டத்தில் இதனைக் குற்றம் யாவற்றினதும் குற்றம் என உணரப்பட்டு தனியாகக் குறிப்பிடப்படுகிறது.**

இவ்வுரையினூடாக இருந்தது. இதற்கு மத்தியில் இவ்வுரையினூடாக தமிழர சியலை 1970களுக்கு முன்னரான தமிழரசுக்கட்சி பாணி அரசியலுக்கு கொண்டு செல்வதற்கான சில வெளிப்படுத்தல்களையும் சம்பந்தன் செய்ய முற்பட்டுள்ளார். இப்படியான பல்பரிமாண நோக்கங்களைக் கொண்டுள்ளார் இவ்வுரையின் உண்மையான தாற்பரியத்தை பற்றி இப்பந்தி ஆராய முனைகின்றது

சம்பந்தன் தொடர்பிலும் கட்சியின் பிரதான கொள்கை வகுப்பாளர் ம.ஏ. சுமந்திரன் தொடர்பிலும் தமிழ் மக்கள் மத்தியிலிருந்து வெளிக்கிளம்பிய விமர்சனங்கள் தொடர்பில் சம்பந்தன் இவ்வுரையினூடாக சில சமாளிப்புக்களைச் செய்ய முயற்சித்திருக்கின்றார். இந்த விமர்சனங்களைப் பின்வருமாறு சுருக்கமாக தொகுக்கலாம் .

01) மே 2009 இதற்குப்பின்னர் த.தே.கூ தமிழரசியலின் அடிப்படைகளைக் கைவிட்டு விட்டது.

02) சம்பந்தன், சுமந்திரன் ஆகியோரிடத்து எமது ஆயுதபோராட்டம் தொடர்பிலான சரியான புரிதல் இல்லை. ஆயுதப் போராட்டத்தைக் கொள்கைப்படுத்தும் வகையிலான குறிப்பாகப் பின்னவரும் அண்மைக் காலக் கருத்துக்கள்.


03) த.தே.கூ ஜெனிபாவிற்குச் செல்வதில்லை என்ற தீர்மானம்.

04) த.தே.கூ, ஐ.தே.கட்சியுடன் கூப்பிட்டு மேதின ஊர்வலம் நடாத்தியமையும் அக் கூட்டத்தில் திரு.இரா.சம்பந்தனின் சிங்கக்கொடியை ஏந்தியமையும்.

மேற்சொன்னதோடு இன்னும் பலவற்றைச் சேர்க்கலாம் ஆனாலும் என்னைப் பொறுத்தவரையில் மேற்கொண்டுள்ளவற்றில் முதலாவதே அடிப்படைப் பிரச்சனை முதலாவது பிரச்சினையின் குறியீட்டு வெளிப்பாடுகளே மற்றைய பிரச்சனைகள்.

05) சம்பந்தன் இவற்றை எவ்வாறு தனதுரையில் சமாளிக்க முற்படுகிறார்?

முதன் முதலாக தமிழ் மக்களுக்கெதிராக நடாத்தப்பட்ட கொடூரத்தை 'இனப்படுகொலை' என சம்பந்தன் வர்ணித்துள்ளார். பொதுவாக இனப்படுகொலை என்பது 'funoudo' ஐக் குறித்து நிற்பதாகக் கருதப்படும். சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் ரோம் சட்டத்தில் இதனைக் குற்றம் யாவற்றினதும் குற்றம் என உணரப்பட்டு தனியாகக் குறிப்பிடப்படுகிறது. ஆகவே இனப்படுகொலை என்று சொல்லும் போது. இறுதியுத்தத்தில் தமிழரென்ற இனத்தை முழுமையாக அல்லது பகுதியாக அமுக்கும் நோக்கத்தில் அரசாங்கம் செயற்பட்டதாகக் கூறுவதாகப் பொருள் கொள்ளவேண்டும். தமிழருக்கெதிராக போர்குற்றங்கள் நடாத்தப்பட்ட அந் நிலையை என்பதற்கு அப்பாற்பட்டு இனப்படுகொலை என முன்வைப்பதின் முக்கியத்துவம் தொடர்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஞாயிறு தினக்குரலில் 25.12.2001 - 01.01.2012 ஆகிய தினங்களில் வெளிவந்த பந்தியில் விரிவாக ஆராய்ந்திருந்தார். அதில் முன்வைக்கப்பட்டிருந்த முக்கிய விடயப் பொருள் பின்வருமாறு தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் போர்க் குற்றம் தொடர்பான சுயாதீனமான சர்வதேச விசாரணை அவசியம். ஆனால் போர் நடைபெற்ற இறுதி மூன்று வருடங்களுடனோ அல்லது போர்க்குற்றங்களுடன் மட்டுமோ விசாரனைகளை மட்டுப்படுத்த இடமளிக்கக் கூடாது. ஏனெனில் கடந்த மூன்று வருடங்களில் இடம்பெற்ற போர்க்குற்றமானது நெடுங்காலமாக தமிழர்களுக்கு எதிராக தொடர்கின்ற இனப்படுகொலையின் (Genocide) ஒரு அங்கமாக மட்டுமே உள்ளது. இதில் மகிந்தராஜபக்ஷவின் ஆட்சி காலத்திலேயே இனப்படுகொலை மற்றும் போர்க்குற்ற நடவடிக்கைகள் உச்ச கட்டத்தினை அடைந்திருந்தன என்பது குறிப்பிடத்தக்கது இதற்கு முன்னைய சிங்கள ஆட்சியாளர்களாலும் தமிழ்தேசத்திற்கு எதிரான போர்க்குற்றங்கள் மற்றும் இனப்படுகொலைகள் இழைக்கப்பட்டே



வந்துள்ளன, அது மட்டுமன்றி போர் முடிவடைந்து விட்டதாக உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்ட நிலையிலும் தமிழருக்கு எதிரான இனஅழிப்பு நடவடிக்கைகள் பல்வேறு வடிவங்களில் இன்றும் தொடர்ந்த வண்ணமே உள்ளன என்பதை தமிழ் மக்கள் நன்கு அறிவர்.

இந்த வகையிலே தான் இலங்கைத் தீவில் வாழும் தமிழ் மக்களும் புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்களும் தமிழ்தேசத்திற்கு எதிராக சிங்கள தேசத்தினால் புரியப்பட்டது இனப்பாடு கொலை என்பதனை விளங்கிக் கொண்டு தமிழ்தேசத்திற்கு எதிராக புரியப்பட்ட மற்றும் புரியப்பட்டுவருகின்ற இனப்படு கொலைக்கு ஓர் முழுமையான விசாரனையை மேற்கொள்ளுமாறு சர்வதேசத்தினை வலியுறுத்த வேண்டும் இதுவே எமது தமிழ்தேசத்தின் அரசியல் கோரிக்கைகளுக்கு வலுச்சேர்ப்பதாகவும் அமையும் என்பதை இங்கு வலியுறுத்த விரும்புகின்றேன். இனப்படுகொலை என்பதனை ஏற்றுக்கொள்வதன் உச்சகட்டம், தமிழ்தேசத்தை சிங்களதேசத்திடம் இருந்து காக்கும் முகமாக தனி நாட்டினை உருவாக்குவதே. ஆகும் இந்த பாரதூரமான அரசியல் விளைவுகளை தவிர்த்துக் கொள்வதற்காகவும் போர்க்குற்றங்களை வலியுறுத்துகின்ற தரப்புக்கள் இனப்படுகொலையே நடைபெற்றது என்ற உண்மையை எந்தளவு தூரம் தவிர்க்கமுடியுமோ அந்தளவிற்குத் தவிர்த்தே வருகின்றனர். இப்பொழுது சம்பந்தன் அவர்கள் இனப்படுகொலை என்று சொல்ல முன்வந்துள்ளனர்.

ஆனால் இது தமிழ் மக்களை ஏமாற்றும் முயற்சி. த.தே.கூட்டமைப்பால் உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்ட உரையின் ஆங்கில மொழிபெயர்ப்பில் (genoudo) என்ற வார்த்தை பிரயோகம் இல்லை (crim exterminahon) என்பது தான் உள்ளது இது ஓர் மனித நேயத்திற்கெதிராக குற்றபிழைத்தமை தொடர்பிலானகுற்றச்சாட்டு. தமிழில் தமிழர்களது 'இனப்படுகொலை' என்று சொல்லும் சம்பந்தன் ஆங்கிலத்தில் மனித நேயத்திற் கெதிரான குற்றம், எனக் குறைத்துக் கூறுவதற் கெள்ள காரணம்? விமர்சனங்களை சமாளிப்பதற்காகவே இனப்படுகொலை என்ற வார்த்தைப்பிரயோகத்தைப் பாவிக்கின்றார் என்பது புலனாகின்றது சிந்தனையின் அடிப்படைகளில் மாற்றமெதுவும் இல்லை

சம்பந்தனது உரையில் தமிழரது ஆயுதப்போராட்டத்திற்கான நியாயம் விதந்து பெச்சிக் கூறப்படுகின்றது அதே வேளை அது பற்றி அவரது உண்மையான சிந்தனையும் அவ்வப் போது வெளிப்படவே செய்கின்றது

*உதாரணமாக:-*

"அடையக் கடினமான தமிழீழத் தனியரசு என்ற அத்தியவசியமான ஒரு கொள்கைக்காகத் தொடர்ந்தும் உயிர்களைப் பலியிடுவதைத் தவிர்த்துவிட்டு, ஒருபுறம்பலமாக உருகொடுத்திருந்த இந்தியாவின் அனுசரணையுடன் ஒன்றுபட்ட இலங்கைக்குள், எமது அடிப்படை உரிமைகளை விட்டுக்கொடுக்காத ஒரு தீர்வினைக் கண்டறியும் முயற்சிகளை எமது கட்சி ஆதரித்தது. எனத் தமது அரசியலின் மேனிமையையும் 'அசாத்தியமான' ஆயுதப்போராட்டத்தின் இயக்கத்திறகு நேரெதிரே வைத்து உயர்த்திக்காட்டுகிறார்.

பிரதமர் ராஜிவ் காந்தியுடனான இந்தப் பேச்சுவார்த்தைகளைத் தாம் கச்சிதமாகப் பயன்படுத்தியதாகக் கூறுபவர் அது தந்த பாடமென்ன என்பதனைக் கூறாதுதவிர்த்துள்ளார். டக்ளஸ் தேவானந்தாவும் அவரது சகபாடிகளும் கூறுவதைப் போன்று நல்லதொரு சந்தர்ப்பத்தை 1987 இல் நாம் நழுவ விட்டுவிட்டோம் என்பது தான் சம்பந்தனது கருத்தா?

இன்னொரு இடத்தில் ஆயுதப்போராட்டத்தைப் பற்றிப் பேசும் சம்பந்தன் பின்வருமாறு கூறுகிறார்.

இராணுவ பலத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு, உலக ஓட்டத்திற்கு ஒத்திசைவு இல்லாத அரசியல் கோட்பாட்டின் ஊடாகக் கட்டி எழுப்பப்படும் எந்த பேராட்டமும் நின்று நிலைக்காது என்ற தனது பட்டறிவைப் பற்றிப் பேசுகிறார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

# சம்பந்தனின் 'இராச தந்திரத்தை' விளக்கிக்கொள்ளல்

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த உலக ஓட்டத்திற்கு ஒத்திசைவு இல்லாத அரசியல் கோட்பாடு என்று சம்பந்தன் மற்றுமோர் இடத்தில், எவ்விதமான ஆயுதம் பின்னணிகளும் அற்ற வன்முறைப்போராட்ட வடிவங்களை என்றைக்கும் நிராகரித்த நீண்ட சனநாயகப் பண்புகளைத் தன்னகத்தே கொண்ட நடைமுறைச் சாத்தியமான தீர்வுத் திட்டங்களையே எப்போதும் முன்வைத்த இலங்கை தமிழரசுக் கட்சியான எமக்குத் தான் அதிகூடிய இராஜ அங்கீகாரமும் அனைத்துலக சமூகத்தால் வழாங்கப்படுகின்றது என்றும், இந்த

> **எமது நிலைப்பாட்டில் உறுதியாக நின்று சர்வதேச சமூகம் நிராகரிக்க முடியாத வகையில் தாராளவாத ஜன நாயக கோட்பாட்டினை அடிப்படையாக வைத்து எமது கொள்கையினை முன்வைக்கவேண்டும் அந்த அடிப்படையில் தான் சுய நிர்ணய உரிமையை அடிப்படையாகக் கொண்ட இரு தேசங்களுடைய கூட்டாக தீர்வு அமைய வேண்டும் என்ற நிலைப்பாட்டை வலியுறுத்தி வருகிறோம்.**

அங்கீகாரமே தமிழ்தேசியக் கூட்டமைப்பிற்கு ஏற்புடையதாகவும் உரித்துடையதாகவும் பரிணாமித்துள்ளது என்றும் கூறுகிறார் இக் கூற்றானது தமிழ்தேசியக் கூட்டமைப்பு பதிவு செய்யப்படவேண்டும் என்று கூறிவருகின்ற கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான ஈ.பி.ஆர்.எல்.எப், ரேலோ, புளோட் ஆகியவற்றை நோக்கிச் சம்பந்தன் சொல்வதாகக் கருதவேண்டும் தமிழரசுக் கட்சியின் மேலாண்மையை ஏற்காது, சம அந்தஸ்து எதனைக் குறிப்பிடுகிறார்? தனியரசை அமைப்பதனை அரசியற் கோட்பாடாகச் சொல்ல முடியாது அப்படியாகச் சொல்ல முடியுமாயினும் சம்பந்தன் அங்கம் வகித்த கட்சியே அவர்தேச பிதா எனக் குறிப்பிடும் சா.ஜே.வே.செல்வநாயகம் அவர்களே தமிழீழத் தனியரசுக் கொள்கையை முன்வைத்து மக்களிடம் ஆனையை வாங்கியவர் சம்பந்தன் 'தேசியம்' 'சுயநிர்ணயம்' போன்ற அரசியல் கோட்பாடுகளைக் குறிப்பிடுகின்றார் என்றால் தமிழ் சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் டிசம்பர் 2011 இல் விடுத்திருந்த அறிக்கையில் குறிப்பிட்டிருந்ததைப் போல சம்பந்தனுக்கு 60 வருடங்களாகத் தமிழரசியலின் அடிப்படைகளாக இருந்தவை சார்பில் இன்று பிடிப்பற்றுப் போய்விட்டது என்றே கருதவேண்டும் என்ற அடிப்படையில் கூட்டமைப்பில் பங்காற்ற முடியாது என்று சம்பந்தன் கூறுகிறார்.

அவரைப் பொறுத்தவரையில் கூட்டமைப்பு என்பது ஓர் தேர்தல் கூட்டு எங்களால் தான் உங்களுக்குப் பயன் என்றவாறாக மற்றைய கட்சிகளுக்குச் சவால் விடுக்கிறார் சந்பந்தன் இதில் சோகமென்னவென்றால் சம்பந்தனுக்கோ சுரேஸ் பிரேமச்சந்திரன் உள்ளீட்ட அவரது சகாக்களுக்கோ கட்சி கொள்கை கோட்பாடு என்பதனைப் பற்றி அக்கறை இல்லை சம்பந்தருக்கு த.தே.கூ வெறும் ஓர் தேர்தல் கூட்டு அதனை ஓர் அரசியல் இயக்கமாகக் கருதுவதற்கு அவர் தயாரில்லை சுரேஸ் பிரேமச்சந்திரனுக்கும் சம்பந்தரோடு எந்தவிதமான கொள்கை வேறுபாடும் இல்லை தனது கட்சியை மட்டம்தட்டுகிறார்களே என்ற கவலையும் தனது தனிப்பட்ட அரசியல் எதிர்காலம் பற்றி மட்டுமே அவர் சிந்திக்கிறார் இதில் வேடிக்கை என்னவென்றால் கடந்த 2010 பொதுத் தேர்தலில் ஒற்றுமை என்ற கோஷத்தை முன்வைத்து கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்தேசிய மக்கள் முன்னணியினரைத் தேர்தலில் இவர்கள் தோற்கடித்தனர் இன்று இவர்களது ஒற்றுமையின் இலட்சனை சந்தி சிரிக்குமளவிற்கு தேய்ந்து போய்க் கிடக்கின்றது.

சம்பந்தன் அரசியல் தீர்வு பற்றி சொல்பவற்றை சற்று நோக்குவோம் உரையில் எந்தப் பகுதியிலும் சமஸ்டி என்ற வார்த்தைப் பிரயோகம் இல்லை 2010 பொதுத் தேர்தலில் த.தே.கூ சமர்ப்பித்த விஞ்ஞாபனத்தில் சமஸ்டி என்பது தமிழ் மக்களுடைய அதிகபட்சக் கோரிக்கையாக முன்வைக்கப்பட்டிருந் தது. சமஸ்டிதான் அதிகபட்சக் கோரிக்கை என்றால் அதனிலும் தாழ்ந்து ஓர் தீர்வை பரிசீலிப்பதற்கு த.தே.கூ தயாராகி விட்டது என்பதே அர்த்தம் என்று எம்மில் சிலர் அன்றே எச்சரித்திருந்தோம் தமிழர்களுடைய நியாயங்களை நிறுவன ஏற்பாடுகளின் வழியன்றி கொள்கை, கோட்பாட்டு வடிவத்தில் முன்வைப்பதற்கான நியாயத்தையும் அன்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் உணர்ந்திருந்தனர் இன்று சமஸ்டி என்ற வார்த்தைப் பிரயோகத்தையும் த.தே.கூ கைவிட்டு விட்டது ஒற்றையாட்சி இலங்கை என்ற வரையறைக்கப்பட்ட தீர்வே தாம் அடையவிரும்புவதாகவும் அதற்காக 13 ஆவது திருத்தத்திற்கு மேலான புள்ளியிலிருந்து ஆரம்பிக்கலாம் என்று சம்பந்தன் தனதுரையின் குறிப்பிடுகிறார் 13+ ஐத் தமிழரது தீர்விற்கான ஆரம்ப புள்ளி என த.தே.கூ அதிகார பூர்வமாக நிலைப் பாடெடுத்துள்ளது அரசாங்கத்திற்கும் த.தே.கூட்டமைப்பிற்குமிடையிலான பேச்சுவார்த்தை ஒற்றையாட்சிக்குட்பட்ட 13 ஆவது திருத்தத்தின் அடிப்படையிலேயே நடந்து வந்திருக்கின்றது என்ற சந்தேகத்தை சம்பந்தனின் இந்த அறிவிப்பு உறுதிப்படுத்துவதாக உள்ளது 13+ என்றால் என்ன என்ற விளக்கத்தை சம்பந்தன் விழங்கவில்லை 13+ ஒற்றையாட்சி அரசியலமைப்பிற்குட்பட்டு சாத்தியமில்லை என்பதனை அவர் மறைந்திருக்கிறார் 13+ இல் ஆரம்பத்து ஒற்றையாட்சிக்கு அப்பாற்பட்ட இலங்கை என்ற இலக்கை நோக்கி படிப்படியாக (incrementall) எப்படி நகரப் போகிறோம் என்பதனைப் பற்றி திட்டம் ஏதும் த.தே.கூட்டமைப்பிடம் இல்லை இராஜபக்ஸா தரமாட்டார் அதன் பிறகு சர்வதேசத்திடம் நாம் விரும்பிய எல்லாவற்றையும் நாம் கேட்டும் பெறலாம் என்ற மாயைக்குள் தமிழரைத் தள்ளப்பார்க்கிறது த.தே.கூட்டமைப்பு இறுதியாக சர்வதேசத்தை எவ்வாறு கையாள வேண்டும் என்பதனைப் பற்றி சம்பந்தன் கூறுவதனை சற்று அலசுவோம்.

சம்பந்தன் கூறுகிறார் அனைத்துலக சமூகத்தை எம்மிலிருந்து அந்நியப்படுத்தி விடக்கூடாது என்பது தான் எமது அக்கறை அனைத்துலக சமூகத்தைக் சங்கடப்படுத்தாத வகையில் அனுசரித்துப்போக நாம் செய்யம் சில மென்போக்கான விட்டுக்கொடுப்புக்கள் என்பவை எமது இராஜதந்திரத்தின் நுட்ப நகர்வுகளே அல்லாமல் எமது அடிப்படைக்கொள்கைகளைக் கைவிடுவதற்கான சமிக்கைகள் அல்ல. மற்றுமோர் இடத்தில் பேரம் பேசுவதற்கு அடிப்படையான அகப்பட்ட எல்லாம் அழிந்தொழிந்து போன பின்னர் நிர்க்கதியாகி இருள் சூழ்ந்த அரசியல் எதிர்காலத்தை எதிர்நோக்கி நிற்கும் எமது மக்களுக்கு இன்று இருக்கும் ஓரே நம்பிக்கை ஒளி அனைத்துலக சமூகம். எமது தேசிய போராட்டத்தின் மீது நியாயத்தின் அடிப்படையில் கொண்டிருக்கின்ற ஈடுபாடுதான் அதுதான் எம்மோடு இப்போது சேர்ந்திருக்கின்ற பிறப்பிடம் என்கிறார்.

சர்வதேச ஆதரவுடனேயே நாம் எமது அரசியல் இலக்கீடுகளை அடைந்து கொள்ளலாம் என்பதற்கு மாற்றக் கருத்துக்கள் இருக்கமுடியாது கேள்வியென்னவெனில் நாம் எவ்வாறு சர்வதேசத்தைக் கையாளுகிறோம் என்பது தான் சர்வதேசம் சொல்வதனைக் கேட்டுச் செயற்படவேண்டும் என த.தே. கூட்டமைப்பு சொல்கிறது அவர்களது தயவில் நாம் பூரணமாக உள்ளோம் என்ற நிலைப்பாட்டையே சம்பந்தனும் வலியுறுத்துகிறார் ஆனால் சர்வதேச சக்திகள் தமது பூகோள அரசியல் நோக்கங்களை கருதியே சிறிலங்கா விவகாரத்திலும் தமிழர் விவகாரத்திலும் செயற்படுகின்றன என்பதனை உணராமல் தற்போதைய உலகவொருங்கில் எமக்குள்ள வகி நிலை சம்பந்தப்பட்ட உந்து சக்கியை அறியாதவர்களாக த.தே.கூட்டமைப்பு சரணாகதி அரசியல் நடாத்துகின்றது தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் தமிழ்தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் வெளிவிகாரக் கொள்கைக் குழுத் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் 27 நவம்பர் 2011 அன்று ஞாயிறு தினக்குரலுக்கு "பிற சக்திகள் நலன்களா? தமிழ்தேசிய நலன்களா" என்ற தலைப்பிலான பக்கத்தில் பின்வருமாறு தெரிவித்திருந்தமை சர்வதேசத்தை இன்றைய சூழலில் அறிவு பூர்வமாக கையாள்வதற்கான சிறந்த வழியாக இக் கட்டுரையாளருக்குத் தோன்றுகின்றது. சர்வதேச சமூகம் தமது நலன்களைக் பேணத்தக்க வகையில் இலங்கைத்தீவின் உள் நாட்டு விவகாரங்கள் எவ்வாறு அமைய வேண்டும் என்பதில் தங்களுக்கென ஒரு நிலைப்பாட்டினைக் கொண்டுள்ளது அந்த நிலைப்படு என்பது அவர்களது நலனை கவனத்தில் கொள்வதாகவே இருக்கும் அதன் அடிப்படையில் அழுத்தத்தினை பிரயோகிப்பதற்கான முக்கியமான ஒரு கருவியாக தமிழ் அரசியல் உருவா கியுள்ளது ஆதலால் சர்வதேசத்தினை மட்டும் திருப்திப்படுத்தும் முகமாக கருத்துக்கள் தெரிவிப்பதை விடுத்து தமிழ் மக்களின் நலன்களைவிட்டுக்கொடுக்காது பேணத்தக்க வகையிலும்,அதேவேளை சர்வதேச சமூகம் நிராகரிக்க முடியாத வகையிலும் தமிழ் அரசியல் தலைமைகள் தமது நிலைப்பாட்டினை உறுதியாகவும் வெளிப்படையாகவும் தெரிவிக்க வேண்டும் ஏனெனில் தமது நலனை பேணத்தக்க வகையிலேயே சர்வதேசம் இலங்கை மீதான அழுத்தத்தை அதிகரிக்கும் அல்லது குறைக்கும் குறைந்த அழுத்தத்துடன் தமது நாட்டின் நலன் பேணப்படுமாயின் தமிழ் மக்களுக்கு குறைந்தபட்சத்தீர்வி னையேதிணித்துவிட முயற்சிப்பார்கள். சர்வதேச சமூகத்தின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப நாம் செயற்ப டுவதா அல்லது எமது நிலைப்பாட்டில் உறுதியாக நின்று சர்வதேச சமூகம் நிராகரிக்க முடியாத வகையில் எமது கொள்கையினை முன்வைப்பதா என்ற கேள்வி எழுகிறது? தமது நலன்களை முன்னிறுத்திய சர்வதேச சமூகத்தின் நிகழ்ச்சி நிரலானது, இறைமையையும் சுயநிர்ணய உரிமையும் உடைய தமிழர் தேசத்தின் நலன்களை பேணாது. ஆகவே எமது நிலைப்பாட்டில் உறுதியாக நின்று சர்வதேச சமூகம் நிராகரிக்க முடியாத வகையில் தாராளவாத ஜனநாயக கோட்பாட்டினை அடிப்படையாக வைத்து எமது கொள்கையினை முன்வைக்கவேண்டும் அந்த அடிப்படையில் தான் சுயநிர்ணய உரிமையை அடிப்படையாகக் கொண்ட இரு தேசங்களுடைய கூட்டாக தீர்வு அமைய வேண்டும் என்ற நிலைப்பாட்டை வலியுறுத்தி வருகிறோம். முடிவாக சம்பந்தன் அவர்களது தமிழரசுக் கட்சி மாநாட்டுத் தலைமையுரை

*01 எமது அரசியல் தீர்வு தொடர்பிலான விடயத்திலும்*

*02 சர்வதேச சமூகத்தை கையாள்வது தொடர்பிலும் எடுத்துனின் தவறான அறிவு பூர்வமற்ற அணுகுமுறைகளை தமிழ் மக்களுக்கு விற்பதற்கு அடிமையாக பிரயத்தனப்பட்டிருப்பினும் த.தே.கூட்ட மைப்பினுடைய தலைமை எமது அரசியலைக் கொண்டு செல்லும் பாதையை வர்ணிப்பது அவதானித்து வருவபவர்கள் மத்தியில் அந்தப் பிரயத்தனம் எடுபடாது தமிழ் மக்களும் தமது அரசியலைப் பற்றி ஆழமாகச் சிந்திக்க தலைப்படும் போது எமது அரசியல் தலைமையில் மாற்றமொன்று அவசியமானது என உணர்வார்கள்.*

## சம்பந்தனின்...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

மறுத்தவர்களை தாக்கினர். புனர்வாழ்வு முகாம்களிலும் போராளிகள் பலவந்தபடுத்தி சிங்கக்கொடிக்கு மரியாதையை செய்யும்படி வலியுறுத்தப்பட்டனர். இந்த ஆக்கிரமிப்பு சின்னத்தைதான் சம்பந்தன் தூக்கி பிடித்திருக்கின்றார். சிங்கக் கொடிக்கான உயிர்துறப்பும் சம்பந்தனின் சொந்த மாவட்டமான திருகோணமலையில் தான் இடம்பெற்றுள்ளது. இக் கொடியினை ஆக்கிரமிப்பின் சின்னமாக கருதி 1956ம் ஆண்டு திருமலை நடராஜன் திருகோணமலை நகரச்சந்தையில் சிங்கக் கொடியினை இறக்கி தமிழரசுக் கட்சியின் மூவர்ணக் கொடியினை ஏற்ற முனைந்த போது பொலிசாரினால் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார்.அதே சிங்ககொடியினை சம்பந்தன் ஏற்றியதன் மூலம் தனது சொந்த மாவட்டத்தின் தியாகியையே அவமானப் படுத்தியிருக்கின்றார்.

ஐந்தாவது

போரினால் உயிரிழந்த போராளிகளையும் மக்களையும் அவமானப்படுத்துவதாகும். தமிழ் மக்கள் ஒரு தனியான தேசம் என்பதை நிலை நாட்டுவதற்காகவே ஆயிரக்கணக்கில் மக்களும் போராளிகளும் தமது உயிர்களைத் தியாகம் செய்திருந்தனர். தங்கள் உயிர் இழந்தாலும் பின்னே வருபவர்கள் தங்களது இலட்சியத்தினை முன்கொண்டு செல்வார்கள் என்ற எதிர்பார்ப்பே அவர்களிடம் இருந்தது. இவற்றை எல்லாம் சம்பந்தன் சிங்கக்கொடி ஏற்றத்தின் முலம் சீர்குலைத்திருக்கின்றார். மேற்கூறிய பாதிப்புக்களை எல்லாம் உதாசீனம் செய்து இதற்கு பசப்பு நியாயங் களை அவர் கூறுகின்றார். இது ஒரு ராஜ தந்திர நடவடிக்கை என அதற்கு வெள்ளைப் பூச்சடிக்கின்றார். தமிழ் மக்கள் ஒரு நாட்டிற்குள் தீர்வு காண்பதற்கு தயார் என்பதனை வெளிக்காட்ட தமிழ் மக்களின் கூட்டு அடையாளங்களை எல்லாம் துறக்க வேண்டுமா? ஏற்கனவே நாம் தயார் என்பதை தனி நாடுப் போராட்டத்தை கைவிட்டதன் மூலமும். ஆயுத போராட்டத்தை கைவிட்டதன் மூலமும் வெளிப்படுத்தியது போதாதா? கூட்டு அடையாளங்கள் எல்லாவற்றையும் துறந்தபின் தமிழ்த் தேசியத் தணலை எவ்வாறு தான் தக்க வைக்க முடியும்? இந்தத் தணல் இருந்தால்தான் எதிர்காலத்திலாவது தமிழ் மக்களுக்கான தீர்வை பெற்றுக்கொள்ள முடியும். தமிழ் மக்கள் தங்களது பேரம்பேசும் ஆற்றலை வளர்த்துக்கொள்ள முடியும். சிங்கள ஆட்சியாளர்களிடமிருந்து தமிழ் மக்களை காப்பற்றுவதுக்கு முன்னர் சம்பந்தனிடம் இருந்து காப்பாற்றுவது எப்பிடி? என தமிழ் தேசியசக்திகள் சிந்திப்பதே சிறந்தது.

# ஹேமா அக்கா

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

சசியண்ணா என்னுடைய கையைப் பிடித்தார். ஆனால் இப்படி ஒருநாளும் இறுக்கமாய்ப் பிடிப்பதில்லையே என்று 'ஆ... கை நோகின்றதென்று' நான் சொல்ல, 'யாரடா நீ உனக்கென்ன இந்த நேரத்திலை இங்கே வேலை?' என்று ஒரு குரல் கேட்டது. இது நிச்சயமாய் சசியண்ணாவின் குரலில்லை. 'ஐயோ இது ஹொஸ்டல் வோடனின்ரை குரலெல்லோ' என்று எனக்கு உடம்பு நடுங்கத் தொடங்கிவிட்டது. தப்பியோடலாம் என்றால் மனுசன் கையை விடுகிறதாகவும் இல்லை. அங்காலை ஹேமாக்கா என்ரை காலைத் தூக்கிபிடித்துக்கொண்டு நிற்கிறா. 'எதற்கடா இப்ப விசிலடித்தாய்?' என்று அந்த மனுசன் உறுமுகிறது. பகல் வேளைகளில் நாங்கள் பக்கத்திலையிருக்கிற பற்றைக் காணிக்குள்ளை கிரிக்கெட் விளையாடும் போது ரெனிஸ் போல் சிலவேளைகளில் ஹொஸ்டலுக்குள் விழுவதுண்டு. அவ்வாறான தருணங்களில் நாங்கள் மதிலுக்கு இங்காலை நின்று 'பந்தை எடுத்துத்தாங்கோ' என்று கத்துவோம். அப்படியொருத்தரும் எடுத்துத் தர இல்லையெண்டால் நாங்களாகவே மதிலேறிக் குதித்து பந்தை எடுப்போம். அப்படி இறங்கியெடுக்கும் போது வோடனின் கண்ணில்பட்டால் பந்து எடுக்கவந்தோம் என்று சொல்லித் தப்பிவிடுவதுண்டு. இப்ப வோடன் என்ரை கையைப் பிடித்துக்கொண்டு 'யாரடா நீ யாற்றை மோனடா நீ? என்று வெருட்ட, எனக்கு எல்லா அறிவும் கெட்டு, 'ரெனிஸ் போல் விழுந்துவிட்டது எடுக்கவந்தன்' என்டு வாய்தவறி உளறிவிட்டேன். இந்த இருட்டுக்குள்ளை யார்தான் ரெனிஸ் போல் தேட வருவாங்கள், வேறேதோ விவகாரம் ஓடிக்கொண்டிருக்கிறது என்று வோடனுக்கு இப்ப நல்லா விளங்கிட்டுது. சனியன் பிடித்த மனுசன் என்னை விடுவதாயில்லை. இனியும் இப்படிக்காரணஞ் கேட்டுக்கொண்டிருந்தால் எல்லாவற்றையும் போட்டுக் கொடுக்கவேண்டிவரும் என்றநிலையில் சட்டென்று வோடனின் பிடியிலிருந்து ஒரு கையை உதறியெடுத்து நல்லாய் 'நொங்கென்று' அவற்றை தலையில் குட்டினேன். மனுசனுக்கு நொந்திருக்க வேண்டும் மற்றக் கையின் பிடியைத் தவறவிட்டார். நானும் ஹேமாக்காவும் பேய் ஒன்று எங்களைப் பின் தொடர்ந்து வருகின்றமாதிரி பின்னங்கால் தலையில்பட எங்கடை வீடுகளுக்கு ஓடிப்போய்ச் சேர்ந்திருந்தோம்.

எப்படிப் பத்திரமாய் பொத்தி பொத்தி வைத்தாலும் எந்த விஷயம் என்றாலும் ஒருநாள் வெளியே வரத்தானே செய்யும். அப்படித்தான் ஒருநாள் ஹேமாக்கா - சசியண்ணா காதலும் ஹேமாக்கா வீட்டுக்குத் தெரியவர. இரண்டு நாளாய் வீட்டில் அறைக்குள் வைத்து ஹேமாக்காவிற்கு செம அடி. அவா பிடிவாதமாய் சசியண்ணாவைத் தான் காதலிப்பன், கலியாணங்கட்டுவன் என்று நின்றிருக்கிறா. இரண்டு நாளாய் அறைக்குள்ளையே பூட்டிவைத்திருக்கினம். இனி பிடிவாதத்தை விட்டுவிட்டுவாள் என்று நினைத்து மூன்றாம் நாள் வெளியே விடத்தான் ஹேமாக்கா இப்படி கிணத்துக் குள்ளை குதித்திருக்கிறா. இப்ப ஹேமாக்காவின் காதல் ஊருலகத்திற்கு எல்லாம் தெரியவந்துவிட்டது. இப்படியாக ஹேமாக்கா - சசியண்ணா விடயத்தில் ஒரு முடிவும் காணமுடியாது இழுபறியாக போனபோது தான் இந்தியன் ஆமிப் பிரச்சினை வந்தது. பள்ளிக்கூடமெல்லாம் பூட்ட ஹொஸ்டலிலிருந்த பெடியங்களும் தங்கள் தங்கள் ஊருகளுக்குப் போகத் தொடங்கிட்டினம். ஹேமாக்காவின் பெற்றோருக்கும் 'அப்பாடா இந்தப்பிரச்சினை இப்படிச் சுமுகமாய் முடிந்துவிட்டதே' என்று பெரிய நிம்மதி.

ஊர்ச்சனத்தின் வாய்களும் இப்போது ஹேமாக்காவின் கதையைவிட இந்திய ஆமிப்பிரச்சினையைப் பற்றித்தான் அதிகம் மென்று துப்பத் தொடங்கிவிட்டது. சண்டை தொடங்கியதால், எனக்கும் பள்ளிக்கூடம் இல்லையென்றபடியால் நானும் ஹேமாக்கா வீட்டிலைதான் அதிகம் பொழுதைக் கழிக்கத்தொடங்கினேன். இந்தியன் ஆமிக்கும் புலிகளுக்கும் சண்டை தொடங்கி எங்கடை ஊர்ச் சனமெல்லாம் உணவில்லாது சரியாய்க் கஷ்டப்பட்ட காலத்தில். மக்களைத் தங்களுக்குள் உள்ளிழுக்க வேண்டுமென்றால் அவ்வப்போது நிவாரணம் வழங்கவேண்டுமென்று - உலகத்திலுள்ள எல்லா அதிகார அரசுகளும் நினைப்பதுபோல - இந்தியன் ஆமியும் தங்கடை முகாங்களுக்குச் சனத்தைக்கூப்பிட்டு சாமான்கள் கொடுப்பானகள். ஒரு வீட்டிலையிலிருந்தும் வயசுக்கு வந்த பெடியள் பெட்டைகளை இந்த விடயங்களுக்கு அனுப்புவதில்லை 'எதுவுமே' நடக்கலாமென்ற பயந்தான். ஆகவே பத்துவயசுக்குள்ளையிருந்த என்னைப் போன்றவர்கள்தான் ஆமிக்காரன் தருகின்ற நிவாரணத்துக்கு கியூவிலை நிற்பம். ஒருமுறை ஆமிக்காரன் தன்ரை ஹெல்மெட்டாலை அள்ளியள்ளி கோதுமை மாவை நிவாரணமாகத் தந்தபொழுதில்தான், காவலில் நின்ற இன்னொரு ஆமிக்காரன் என்னைக் கூப்பிட்டு ஒரு கூலிங் கிளாஸைத் தந்தான். எனக்கென்டால் அந்தமாதிரிச் சந்தோசம். அவ்வளவு பேர் கியூவிலை நிற்கேக்கை எனக்கு மட்டும் ஆமிக்காரன் கூலிங்கிளாஸ் தாறானென்டால் நான் ஏதோ வித்தியாசமானவனாய்த்தானே இருக்கவேண்டும். நான் ஊருக்குள்ளை ஓடிப்போய் ஒவ்வொர் வீட்டிலையும் ஏறியிறங்கி ஆமிக்காரன் எனக்கு 'கூல்டிங்' கிளாஸ் தந்துவிட்டான் என்று பெருமையடித்துக்கொண்டிருந்தேன். 'அது 'கூல்டிங்' கிளாஸ் இல்லையடா கூலிங் கிளாஸ்' என்று ஹேமாக்கா தான் திருத்தினா. 'உங்களுக்கு ஒரு கூல்டிங் கிளாஸ் கிடைக்கவில்லை என்று பொறாமை அதுதான் நான் சொல்வதை நீங்கள் பிழையெண்டிறியள்' என்று நான் சொல்ல ஹேமா சிரித்துக்கொண்டிருந்தா. ஹேமாக்கா சிரிக்கிறது எவ்வளவு அழகு. அவாவின்ரை பற்களின் விம்பம் கூலிங் கிளாஸில் தெறிப்பதைப் பார்த்து இரசித்துக் கொண்டிருந்தேன்.

ஒருநாள் நானும் ஹேமாக்காவும் அவங்கடை வீட்டிலை தனியே இருக்கேக்கை இந்தியன் ஆமிக்காரன்கள் செக்கிங்குக்கு என்டு வந்தாங்கள். செக்கிங்கில் வந்த ஆமிக்காரங்களில் எனக்கு கூலிங்கிளாஸ் தந்த ஆமிக்காரனுமிருந்தான். நான் அப்போதும் அந்த கூலிங்கிளாசை என்னோடுதான் வைத்திருந்தேன். அந்த ஆமிக்காரன், bomb bomb என்றான். எங்கையோ குண்டை ஒளித்து வைத்திருக்கின்றம் என்டு ஐமிச்சத்தில் அவன் தேடுகின்றான் போல என்று முதலில் நினைத்தேன். No Sir No Bomb என்று ஹேமாக்கா தனக்குத் தெரிந்த ஆங்கிலத்தில் சொன்னா... ஆமிக்காரன் bomb bomb என்று திருப்பி திருப்பிச் சொல்லிக்கொண்டேயிருந்தான். you bomb என்றான்....ஹேமாக்கா bomb ஒளித்துவைத்திருக்கிறா என்றமாதிரி அவாவோடை மார்பைப் பிடித்தான்.... அக்காவிற்கு என்ன செய்வதென்டு திகைப்பு... நான் இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருக்கிறன் என்று ஆமிக்காரனுக்கு நினைவுக்கு வந்திருக்கோனும். you bomb you bomb என்று சொல்லிக்கொண்டு முன்னாலிருந்த அறைக்குள்ளை ஹேமாக்காவைக் கொண்டு போனான்... நான் விளையாடுகின்றமாதிரி பாவனை செய்துகொண்டு ஓரக்கண்ணால் இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்தேன். அந்த அறைக்கு உள்ளே கொக்கி போட்டு மூடினால்தான் பூட்டப்படும். ஆமிக்காரனுக்கு 'செக்கிங்குக்காய்' அடுத்த வீடுப போகும் அவசரமோ அல்லது கொக்கி போட்டு அறையை மூடினால் நான் கத்தி சனத்தைக் கூட்டிடுவேனே என்று நினைத்தானோ தெரியாது... மெல்லியதாய் கதவைச் சாத்தினான்... அதனால் அறை முழுதாய் மூடப்படாது கொஞ்சம் நீக்கலுடன் திறந்தபடியிருந்தது. you bomb bomb என்டு ஹேமாக்காவின் சட்டையைக் கழற்றச் சொன்னான். பிறகு அக்காவைச் சுவரோடு அழுத்தியபடி ஆமிக்காரனின் பின்புறம் அங்குமிங்குமாய் அசைவதுமட்டுமே தெரிந்தது. ஆமிக்காரன் 'செக்கிங்' முடித்துப்போனபோது எனக்கு அவன் தந்த கூலிங்கிளாஸ் பிடிக்கவில்லை. வீட்டை அதைக் கொண்டுபோய் அம்மம்மா பாக்கு இடிக்கிற கட்டையாலை அதை அடித்து உடைத்தேன்.

இந்தியன் ஆமி வெளிக்கிட, பிரேமதாசாவின் ஆட்சிக்காலத்தில் சசியண்ணா ஒருநாள் எங்கள் ஊருக்கு வந்திருந்தார். எல்லாச் சனியனும் இந்தியன் ஆமிக்காலத்தோடு ஒழிந்துவிட்டதென நினைத்த ஹேமாக்காவின் பெற்றோருக்கு, சசியண்ணா தனக்கு ஹேமாக்காவைக் கலியாணங்கட்டித்தரக்கேட்பதற்காய் வந்திருந்தது அதிர்ச்சியாயிருந்தது. ஏற்கனவே எடுத்த முடிவையே திரும்பவும் சொன்னார்கள். 'ஏலாது' என்று ஹேமாக்காவின் பெற்றோர் உறுதியாய்ச் சொன்னதோடு, சசியண்ணா திரும்பி அவருடைய ஊருக்குப் போய்விட்டார். எல்லாம் சுமுகமாய்ப் போய்க்கொண்டிருக்கிறது என்று நினைத்த ஒருபொழுதில் ஹேமாக்காவைக் காணவில்லையென்று ஊரெல்லாம் தேடத்தொடங்கியது. பிறகு ஹேமாக்கா சசியண்ணாவோடு சேர்ந்து ஓடிப் போய்விட்டா என்பது எல்லோருக்குந் தெரியவந்தது. 'ஏன் ஹேமாக்கா இங்கேயிருக்காது தூர இடத்திற்கு ஓடிப்போனவா?' என்று அம்மாட்டை நான் கேட்டதற்கு, 'சும்மா வாயை மூடிக்கொண்டிரு' என்றுதான் அம்மா அந்த நேரத்திலை சொன்னா. பின்னாட்களில் அப்படி ஹேமாக்கா ஓடிப்போனதற்கு சசியண்ணாவும் ஹேமாக்காவும் வெவ்வேறு சாதியைச் சேர்ந்தவர்கள் என்ற காரணத்தை அறிந்தேன். ஊரிலையிருந்து சனம் கொழும்புக்குப் போய்விட்டு வருகின்றபோது ஹேமாக்காவும், சசியண்ணாவும் கிளிநொச்சிப் பக்கமாய் இருக்கினம் என்று தகவலை அறிந்து சொல்லிச்சு. நாளடைவில் ஹேமாக்காவை மறக்க வைக்கும்படி போர் எங்கடை ஊர்ப்பக்கமாய் திரும்பவும் உக்கிரமாகத் தொடங்கியது.

95ம் ஆண்டு யாழில் நிகழ்ந்த பெரும் இடம்பெயர்வின்போது எங்களுக்கு முதலில் அடைக்கலந்தந்தது ஹேமாக்கவும் சசியண்ணாவுந்தான். காட்டையும் குளத்தையும் அண்டியிருந்த அவையளின்றை மண்ணால் மெழுகிப் பூசியிருந்த வீடு உண்மையிலேயே அந்த நேரத்திலே சொர்க்கமாய்த்தானிருந்தது. சில மாதங்கள் ஹேமாக்கா வீட்டையிருந்துவிட்டு நாங்கள் தனியே இன்னொரு இடத்திற்குப் போயிருந்தோம். ஆனால் அதிகமாய் ஒவ்வொரு பின்னேரமும் நான் ஹேமாக்கா வீட்டுப்பக்கமாய் வந்துபோய்க்கொண்டிருந்தேன். பதின்மங்களில் நான் இருந்த பருவம். எல்லாவற்றையும் மூர்க்கமாய் நிராகரித்துக் கொண்டு நான் மட்டும் சொல்வது, செய்வதே சரியென்று உடும்புப்பிடி பிடித்துக்கொண்டிருந்த காலமது. நானும் சசியண்ணாவும் அடிக்கடி அரசியல் பேசிச் சூடாகிக் கொண்டிருப்போம். அவருக்கு எங்கடை பிரச்சினையில் நிதானமாய் இந்தியாவை அணுகியிருக்கவேணும் என்ற ஒரு எண்ணம் இருந்தது. அதாவது இந்தியாவோடு அனுசரணையாய் இருந்திருந்தால் எங்களின் பிரச்சினை எப்பவோ தீர்ந்திருக்குமென்பது அவருடைய அசைக்கமுடியாத நம்பிக்கை. எங்களின் இந்த முரண் அரசியல் விவாதங்களை சிலவேளைகளில் செவிமடுக்கிற ஹேமாக்கா, 'உங்கள் இரண்டுபேராலையே ஒரு விசயத்துக்கு பொதுவான முடிவுக்கு வரமுடியாது இருக்கும்போது எப்படித்தான் எங்கடை சனத்துக்கு எல்லாம் பொதுவாய் வாற தீர்வு கிடைக்கப்போகின்றதோ தெரியாது' என்று சிரித்துக்கொண்டு சொல்லுவா.

ஒருநாள் இப்படித்தான் வழமைபோல அரசியல் பேசி நான் மிகவும் கொந்தளித்துக்கொண்டிருநத நேரம். அந்த நேரத்தில் சசியண்ணாவை அடித்தால் கூடப் பரவாயில்லை என்றமாதிரி அவர் மீதான கோபம் நாடி நரம்புகளில் ஏறிக் கொண்டிருந்தபோது என்னையறியாமலே, 'நீங்கள் ஒரு மனுசரே, எங்கடை ஹேமாக்காவை இந்தியன் ஆமி கெடுத்தாப்பிறகும் அவங்களைச் சப்போர்ட் பண்ணிக்கொண்டிருக்கிறியள்' என்றேன். எனக்கே நான் என்ன சொன்னேன் என்று அறியமுடியாத உணர்ச்சியின் கொந்தளிப்பு. யாரோ கன்னத்தில் படாரென்று அறைந்தமாதிரி சட்டென்று எங்கள் எல்லோருக்குள்ளும் தாங்கிக்கொள்ளவே முடியாத மிகப்பெரும் மவுனம் கவிழ்ந்திருந்தது. அதுவரை வாஞ்சையோடு என்னைப் பார்க்கும் ஹேமாக்காவின் விழிகள் அப்படியே உறைந்துபோயிருந்தன. என்ன விதமான உணர்ச்சியென்று இனம்பிரித்தறியா முடியாதளவுக்கு நான் குற்றத்தின் கடலுக்குள் மூழ்கத்தொடங்கியிருந்தேன். எதுவுமே சொல்லாமல் எவரிடமும் முறையாக விடைபெறாது நான் வீட்டை போய்ச் சேர்ந்திருந்தேன்.

அடுத்த நாள் விடிய அம்மா, 'டேய் தம்பி ஹேமாக்கா குளத்துக்குள்ளை குதிச்சிட்டா என்டு சனம் சொல்லுது... ஓடிப்போய் என்ன நடந்ததெண்டு பார்த்திட்டு வா' என்று படபடவென்டு கையால் தட்டி எழுப்புகிறா. நான் வோடன் என்னைப் பிடிக்க முயன்ற பொழுதை விட வேகமாய் என்ன நடந்தது என்று அறிய சைக்கிளையெடுத்துக்கொண்டு ஓடுகின்றேன். ஹேமாக்காவுக்கு ஒன்றும் நடந்திருக்கக்கூடாது என்று எங்கள் ஊர் வைரவரை நேர்ந்துகொண்டு சைக்கிளை வேக வேகமாய் உழக்குகின்றேன். ஹேமாக்காவை குளத்துக்குள்ளாலை இருந்து தூக்கிக்கொண்டு வருகினம். 'ஐயோ ஹேமாக்கா குளத்துக்குள்ளை குதிச்சிட்டா எல்லோரும் ஓடிவாங்கோ' என்று, சிறுவனாய் இருக்கும்போது நான் கத்தியது மாதிரி இப்போது கத்தமுடியாது நான் உறைந்துபோய் நிற்கின்றேன். சசியண்ணா என் கையைப்பிடித்துக்கொண்டு, 'இந்தியன் ஆமி உம்மளை கெடுத்தது பற்றி இதுவரை ஏன் என்னட்டை சொல்லேலை என்டு மட்டுந்தான் கேட்டனான் வேறொன்றுமே கேட்கவில்லை. ஒன்டுமே பேசாமல் இருந்தவா இப்படிச் செய்வா என்டு நான் கனவிலையும் நினைத்துப் பார்க்கவிலலை' என்று நடுங்கும் குரலில் சொல்லிக்கொண்டு இருந்தது எனக்கு யாரோ பங்கருக்குள்ளிலிருந்து முணுமுணுப்பதுபோலக் கேட்கிறது. 'ஹேமாக்கா எழும்புங்கோ நான் வந்திருக்கின்றேன். உங்களுக்குத் தெரியுமா உங்களுக்கு அண்டைக்கு ஆமி அப்படிச் செய்ததைப் பார்த்தபோது நான் அவ்வளவு காலமும் கவனமாய்ப் பொத்திவைத்திருந்த கூலிங்கிளாசையே உடைத்து நொறுக்கினவன்.... நீங்கள் எப்பவும் எங்கடை ஹேமாக்காதான். எழும்புங்கோ...எழும்புங்கோ' என்டு மனம் விடடுக்குழறி அழவேண்டும் போல இருக்கிறது. கொலைகளைச் செய்தவர்களால் மனதை லேசாக்க அழமுடியவதில்லை உள்ளுக்குள்ளேயே மறுகி உருகி தங்களின் பாவங்கள் எப்பவாவது கரையாமாட்டாதா என்று காலம் முழுதும் ஏங்கிக் கொண்டிருக்கவேண்டியதுதான். ■

# தமிழ் தேசிய...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

காட்டிக்கொடுக்கும் தரப்புக்களுக்கு ஊடகங்கள் வழங்கும் முக்கியத்துவத்தில் ஒரு சிறு பங்கை தானும் எமக்கு கொடுக்கவில்லை. இந்நிலை எமக்கு ஒருபுறம் கவலையை தருக்கின்றது. ஆனாலும் உண்மை வெல்லும். அது ஒருபோதும் தோற்காது என அவர் மேலும் தெரிவித்தார்.

அவரது முழுமையான செவ்வி வருமாறு

*கிழக்கு மாகாணசபை தேர்தல் தொடர்பாக உங்கள் நிலைப்பாடு?*

இந்த கேள்விக்கு எமது பதில், கிழக்கு - வடக்கு தொடர்பாக பார்ப்பது விடயமல்ல, மாகாணசபை முறையினை ஏற்றுக்கொள்கின்றோமா? இல்லையா? என்பதே. அந்த கேள்விக்குத்தான் முதலில் பதில் தேடவேண்டும். இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ற பார்வையில்தான் 13வது அரசியலமைப்பு ஊடாக இந்த மாகாணசபைகள் உருவாக்கப்பட்டன. அதிலும் வடகிழக்கு தமிழர்களின் தாயகம் என்பது மட்டும் தான், இந்த ஒப்பந்தத்தில் முன்னேற்றகரமான விடயம். ஜனாதிபதியின் அதிகாரங்களை பயன்படுத்தி வட - கிழக்கை இணைப்பதன் மூலம்தான் இந்த முறைமை ஆரம்பத்தில் கொண்டுவரப்பட்டது. அப்போதும் கூட மாகாணசபை முறை என்பது எங்கள் அரசியல் அபிலாசைகளை முற்றாக நிராகரிப்பதாலும் அது மட்டு மல்லாமல் இனப்பிரச்சினைக்கு அடிப்படைக்காரணமான ஒற்றையாட்சி முறைமைக்கு உட்பட்ட ஒரு தேர்தல் முறையாக அது இருப்பதால் அன்றிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் தமிழ்தேசிய அரசியலில் ஈடுபட்டிருந்த குறிப்பாக விடுதலைப் புலிகள் உட்பட முக்கியமான தரப்புக்கள் அனைத்தும் இந்த முறைமையை முற்றாக நிராகரித்தன. தமிழர் விடுதலைக் கூட்டணி அன்று புலிகளுடன் இணைந்திராத போதும், இது மக்களுக்கு செய்கின்ற துரோகம் என்றவகையில் அமிர்தலிங்கம், சிவசிதம்பரம், சம்பந்தன் ஆகிய தலைவர்கள் ராஜீவ்காந்திக்கு, கடிதம் எழுதும் வகையில் நிலை இருந்தது. வடகிழக்கு இணைந்திருந்த நிலையிலும் ஏற்றுக்கொள்ள முடியாதவொன்றாகவே அது இருந்தது.

> *பிரச்சினை அரசியல் ரீதியாக அணுகப்படவேண்டும். சட்டரீதியாக அணுகுவதில் அர்த்தமில்லை, நூற்றுக்கணக்கான தரப்புக்கள் பாதிக்கப்பட் டுள்ளபோது சட்டரீதியாக அணுகினால் 30 வருடங்கள் நாங்கள் நீதிமன்றங்களில் தான் கழிக்கவேண்டிவரும்.*

அன்று இந்தியாவின் நேரடி கைப்பொம்மைகளாக இயங்கயிருந்த தரப்புக்கள் தவிர வேறு எந்த தரப்புக்களும் இந்த மாகாணசபை முறைமை குறித்து பேசக்கூடத் தயாராகவிருக்கவில்லை. முதலாவது தடவையாக தேர்தல் கொண்டுவரப்பட்டபோது ஈ.பி.ஆர்.எல்.எவ். சார்பில் வரதராஜப்பெருமாள் முலமைச்சராக வந்து தமிழீழ பிரகடனம் செய்து வெளியேறிய பின்னர் செத்து புதைந்த நிலையில்தான் கடந்த 1989 லிருந்து இன்றுவரை உள்ளது. திடீரென ராஜபக்ச அரசு ஆட்சிபீடமேறிய பின்னர் வடகிழக்கு பிரிக்கப்பட்டதனா சூழலில் மாகாணசபை குறித்து தற்போது பேசப்படுகின்றது. 2007ம் ஆண்டு கிழக்கு மாகாண சபை தேர்தலில் அப்போது நானும் கூட்டமைப்பில் அங்கத்துவம் பெற்றிருந்தேன், அப்போதும் கூட தமிழ்தேசிய கூட்டமைப்பு திட்டவட்டமாக மாகாணசபையை நிராகரித்திருந்தது. அடிப்படையில் இது எமது பிரச்சினைகளுக்கான தீர்வல்ல. அதுமட்டுமல்ல வடகிழக்கை பிரித்த பின்னர் இதை மாற்றியமைக்க முடியாது என்ற வகையில்தான் அன்று நிராகரிக்கப்பட்டது.

பல வருடங்களின் பின்னர் விசேடமாக 2009 மே மாதத்தில் போர் நிறைவடைந்ததன் பின்னர் கூட்டமைப்பின் பயணத்தில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது. அடிப்படை விடயங்களை 2009ம் ஆண்டு வரை பின்பற்றிய தரப்புக்கள் அந்த அடிப்படை கொள்கைகளை கைவிட்டு, புதிய திசையில் பயணிக்க முற்பட்டபோதே நாம் விலகிவந்தோம். இதற்கு முக்கியமான உதாரணம் இந்த மாகாணசபை தேர்தல். இதுவரை நிராகரித்த ஒரு முறைமையை தமிழ்தேசிய அரசியலை நிராகரிப்பதுடன் மட்டுமல்லாமல் ஒற்றையாட்சி முறைக்குள் தள்ளும் ஒரு விடயமாக இருக்கின்ற விடயமாகையால், அதனை தொடக்கூடாது என்று கூறிவந்தவர்கள் இப்போது மாகாணசபையின் கீழ் போட்டியிட முண்டியடிக்கின்றனர். அவர்களுடைய கொள்கை மாற்றத்திற்கு இது ஒரு சிறந்த உதாரணம், கிழக்கு - வடக்கு என பார்ப்பதனை விட இதை தொட்டாலே ஏற்று அங்கீகரிப்பது போன்றாகிவிடும்.

*இனப்பிரச்சினைக்குத் தீர்வு 13 வது திருத்தத்தின் கீழ் சாத்தியமா?*

13வது திருத்தத்தின் கீழான மாகாண சபை தீர்வல்ல, ஒரு சிலர் இதை ஒரு ஆரம்ப புள்ளியாக கருதலாம் என்கின்றனர். ஆனால் அதை ஆரம்ப புள்ளியாக கூடக்கருதமுடியாது. ஒற்றையாட்சி முறைக்குள் உள்ள ஒரு விடயத்தை ஆரம்ப புள்ளியாக பயன்படுத்தினால், அந்த முறையினூடாக மாற்றத்தை ஏற்படுத்த முடியாது போனாலும், அந்த முறைமையை நாம் ஏற்றுக்கொள்வதாகவே அமையும். உதாரணத்திற்கு ஒரு நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தவேண்டும் என்போம். நீங்கள் அந்த நாட்டிற்குள் உள்ள முறைமைகளைப்பயன்படுத்தி மாற்றத்தை ஏற்படுத்த விரும்புகின்றீர்கள். ஆனால் அந்த நாட்டின் முறைகளைப் பயன்படுத்தி மாற்றத்தை ஏற்படுத்த முடியாது போனாலும் அந்த நாட்டை நிராகரிக்க முடியாது. நாடே பிரச்சினை என்றால் ஒருநாளும் அந்த நாட்டின் இறைமையை ஏற்றுக்கொள்ள முடியாது.

*தமிழ்தேசிய இனத்தை பொறுத்தவரை, நாம் ஏற்கனவே 20வருடங்களுக்கு முன்னர் ஒரு தெளிவான முடிவை எடுத்து பயணித்திருக்கின்றோம். திடீரென மாற்றத்தை ஏற்படுத்த என்ன காரணம்?*

வெளியிலிருந்த பார்ப்பவர் இவர்களின் கொள்கையில் மாற்றம் அல்லது அதில் திருத்தத்தை ஏற்படுத்த பார்க்கிறார்கள் என்றே கருதுவார்கள. ஆனால் எம்மை பொறுத்தவரை அவ்வாறான முடிவுக்கு வருவது எமது தமிழ்தேசிய அரசியலை ஒற்றையாட்சி முறைக்குள் முடக்குவதாகவே அமையும்.

*தமிழ்தேசிய அரசியலை ஒற்றையாட்சி முறைக்குள் முடக்குவதாக கூறும் வேளை நீங்களும் பாராளுமன்ற அரசியலை ஏற்று போட்டியிட்டுள்ளீர்களே?*

இலங்கையின் அரசியலமைப்பை நாங்கள் ஏற்றுக்கொள்வதாக இல்லை. தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலை வேலைத்திட்டத்தை முன்னெடுக்க இன்றுள்ள அரசியலமைப்பே முக்கிய காரணம். நடைமுறைச்சாத்தியமான வேலைத்திட்டமாக பார்க்கின்றபோது, அந்த நிலையிலும் ஒரு சில விடயங்களில் களமிறங்கவே வேண்டும், குறிப்பாக பராளுமன்ற தேர்தலை புறக்கணிக்க கேட்க மாட்டோம். மக்களுடைய ஆணையை காண்பிப்பதற்கு தேர்தலில் போட்டியிட வேண்டும்.

பாராளுமன்றத்திற்கும், மாகாணசபைக்கும் நிறையவே வித்தியாசங்கள் உள்ளன. விசேடமாக இது தமிழரின் இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ற அடிப்படையில் கொண்டுவரப்பட்டுள்ளது. மற்றைய தேர்தல்கள் போன்றதொரு விடயமல்ல மாகாணசபை தேர்தல்.இது தமிழரின் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக கொண்டுவரப்பட்ட முறைமை. அதனாலேயே ஏற்றுக்கொள்ள முடியாது.

*தமிழ் அரசியல் கைதிகள் மற்றும் போர்க்கைதிகள் விடுதலைக்காக முன்னணி களமிறங்கியுள்ளதே?*

தடுத்து வைக்கப்பட்டவர்கள் அரசியல் கைதிகளாகவோ போர் கைதிகளாகவோ இருக்கலாம். ஆனால் இவர்கள் அனைவரும் தமிழர்கள். இந்த விடயம் தொடர்பாக பேசும்போது அரசியல் தவிர்த்து சட்டம் என பேசமுடியாது. இந்தப் பிரச்சினை அரசியல் ரீதியாக அணுகப்படவேண்டும். சட்டரீதியாக அணுகுவதில் அர்த்தமில்லை, நூற்றுக்கணக்கான தரப்புக்கள் பாதிக்கப்பட்டுள்ளபோது சட்டரீதியாக அணுகினால் 30 வருடங்கள் நாங்கள் நீதிமன்றங்களில் தான் கழிக்கவேண்டிவரும். அரசியல் ரீதியாக அணுகினால் இதை எங்களின் தேசிய அரசியலின் அங்கமாகவே எடுக்க வேண்டும், தமிழர் தேசம் தனித்தேசம். எமக்கு இறைமையுள்ளது. அந்த அடிப்படையில் தான் இந்தப்பிரச்சினைக்குத்தீர்வு காணப்படவேண்டும். எங்கள் கைதிகள் அவர்களின் பாதிப்பு அனைத்தும் அரசியல் ரீதியான பெறுமதியைப் பெறுகின்றது. இந்த அங்கீகாரத்தை எடுக்கும் போது அவர்கள் குற்றவாளிகளாக இல்லாமல் போகும் நிலையும் உருவாகும். அதற்காகவே அரசியல் ரீதியாக இந்தப் பிரச்சினை அணுகப்படவேண்டும், 13வது திருத்தம் ஊடாக வடிவமைக்கப்பட்ட மாகாணசபை முறைக்குள் நுழைவதன் மூலம், இந்த அரசியல் கைதிகளின் எதிர்காலம் கேள்விக்குறியாகின்றது.

அவர்கள் செய்த தியாகங்கள் அனைத்தும் பொய் என நாமே ஏற்றுக்கொள்வதாக போகும். அது மிகமோசமான பாதிப்பை தரும். மறுபுறம் அவர்களின் எதிர்ப்பு போராட்டங்கள் அரசாங்கத்தினால் குற்றம் சாட்டப்பட்டு, அதற்குள்ளேயே கேள்விக்குள்ளாகியுள்ளது. அப்பட்டமாக அவர்களை தாக்கி கொலை செய்யுமளவிற்குள் நிலைவரம் போயுள்ளது. எனினும் இது முதற்தடவையல்ல.

இவற்றுக்கெதிராக போராட்டங்களை நடத்தவேண்டும், போராட்டங்களை 10பேர் 100பேர் நடத்தி பயனில்லை, மக்களுடைய

(15ஆம் பக்கம் பார்க்க)

# போர்க்கைதிகள்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் கைதிகள் பற்றி அரசின் பாதுகாப்பு அமைச்சு கூறிவரும் புள்ளி விபரங்கள் தலைசுற்ற வைப்பவையே. கடைசியாக வெளியிடப்பட்டிருக்கும் புள்ளி விபரங்களின் பிரகாரம் 650 பேர் மட்டும் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும், அவர்கள் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆயினும் சரண் அடைந்த அல்லது காணமல் போயுள்ளவர்கள் தொடர்பில் குடும்பத்தவர்கள் செய்துள்ள முறைப்பாடுகள் மற்றும் பிற தகவல்களின் பிரகாரம் பாதுகாப்பு அமைச்சு கூறும் புள்ளிவிபரம் மிகச் சிறியதே.

மறுபுறத்தே குற்றச்சாட்டுக்கள் ஏதுமின்றி சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் பற்றியும் பூரணமான தகவல்கள் வெளியாகவில்லை. விடுதலைப் புலிகளுடன் தொடர்புபட்டவர்கள், உதவியவர்கள் உறுப்பினர்களென சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட பலர் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படாது வெறுமனே சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். விடுதலைப்புலிகளது பிரமுகர்களாகவிருந்த கருணா, பிள்ளையான் மற்றும் குமரன் பத்மநாதன் போன்றோர் அரசின் விருந்தாளிகளாகவும் பிரமுகர்களாகவும் பொலிஸ் பாதுகாப்புடன் திரிகையில், குற்ற முகாந்திரங்கள் எதுவுமே பகிரங்கமாக சுமத்தப்படாத அப்பாவிகள் வருடக் கணக்கில் தடுப்பிலுள்ளனர். அண்மையில் வவுனியா சிறைச்சாலை யில் வைத்து தாக்கி படுகொலை செய்யப்பட்ட நிமலரூபன், வீட்டில் வைத்து சந்தேகத்தில் பிடித்துச்செல்லப்பட்ட ஒருவரே. அதே போன்று "கோமா" நிலையில் வைத்தியசாலையில் தடுத்து சிகிச்சை பெற்றுவரும் தில்ருக்ஷன் கூட கடலினில் பயணிக்கையில் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட ஒருவரே. வன்னியில் அப்போதிருந்த பாஸ் நடைமுறையிலிருந்து தப்பிக்க, கடல்வழி மீன்பிடி படகில் பயணித்துக் கொண்டிருக்கையில் அவர் கைது செய்யப்பட்டதை அவர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

வவுனியா போன்ற சிறைச்சாலைக்கப்பால் அடையாளந்தெரியாத, பல ரகசிய தடுப்பு முகாம்களை அரசு பேணுவதாகவும், அங்கு ஆயிரக்கணக்கான இளைஞர்கள், யுவதிகள் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக வும் சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்கள் பலவும் கூறியே வருகின்றன. ஆனால் அவை பற்றி அரசோ வாய்திறக்க மறுக்கின்றது. அங்கீகரிக்கப்பட்ட அரச சிறைச்சாலைகளிலும், இரகசிய தடுப்பு முகாம்களிலும், தமது அன்றாட வாழ்வுரிமைக்காக தமிழ் இளைஞர்கள் போராடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மீது அரச பயங்கரவாதம் வன்முறைகளை ஏவியே வருகின்றது. அவற்றினுள் பல வெளிவருவதில்லை.

தம்மீது குற்றச்சாட்டுக்கள் இருப்பின் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்துமாறும், இல்லாவிடின் தம்மை விடுவித்து விடுமாறும் கைதிகள் வலியுறுத்தி வருகின்றனர். ஜே.வி.பி. உறுப்பினர்களுக்கு இரு தடவைகளாக நிபந்தனைகளின்றி பொது மன்னிப்பை வழங்கமுடிந்த அரசுகளால் தமிழ் போர்க் கைதிகள் மற்றும் அரசியல் கைதிகள் தொடர்பில் அவ்வாறு முன்வந்து செயற்பட முடியாதுள்ளது. அது காலம் காலமாக நிலவி வரும் தமிழ் மக்கள் மீதான விரோத மனப்பாங்கேயன்றி வேறல்ல.

தமக்கான விடுதலை கோரி அகிம்சை வழிப்போராட்டங்களில் ஈடுபடுகின்ற போதெல்லாம் தரகர்களாக பாய்ந்து விழுந்து முன்சென்று அதனை குழப்பியடிக்க முன்வரும் கூட்டமைப் பினர் பின்னர் அவர்கள் பற்றி கண்டு கொள்வதேயில்லை. இறுதியாக நாடளா விய ரீதியினில் முன்னெடுக்கப்பட்ட கைதிகளது உண்ணாவிரதப் போட் டத்தையும் உட்கட்சி அரசியல் சுயநலன்களுக்காக போட்டுடைத்த கூட்டமைப்பினர் பின்னர் கண்டுகொள்ளவில்லை. அவர்களது சுயநல அரசியலால் நிமல ரூபன் உயிரிழக்க வேண்டியிருந்தது. மேலும் பலரது உயிர் ஊசலாடும் நிலையிலுள்ளது.

யுத்தம் முடிந்துவிட்டதாக அரச கூறுவது உண்மையானால், தமிழ் மக்களிடையே தமது நல்லிணக்கத்தை வெளிப்படுத்தும் விடயங்களுள் முதன்மையானதாக தமிழ் கைதிகளது விடுதலைக்கு அரசு முன்னுரிமை அளிக்கட்டும்.

## பிரகடனம்...

(04ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதற்கோர் சான்றாக உள்ளது. இறுதி யுத்தத்தில் மட்டுமல்ல கடந்த 60 வருடங்களாக இடம்பெற்ற இனப்படுகொலைகள் தொடர்பாக ஓர் சர்வதேச பக்கச் சார்பற்ற விசாரணை மேற்கொள்ளப்படல் வேண் டும். இலங்கை அரசினையே விசாரணை செய்ய கோருவது குற்றம் செய்தவனையே நீதி வழங்க கோருவது போன்றதாகும். எனவே இனப்படுகொலைக்கு சர்வதேச விசாரணை தேவை என உரக்கக் குரல் எழுப்புவோம்.

**தீர்மானம் - 06**

***நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை யினை நிராகரிப்போம்.***

ஐ.நா. நிபுணர் குழுவைப் பலவீனப்படுத் துவதற்கும், சர்வதேச பக்கச் சார்பற்ற விசாரணையை தடுப்பதற்குமாக சிறீலங்கா அரசினால் உருவாக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழு இனப்படு கொலை பற்றி தனது அறிக்கையில் எதுவும் கூறவில்லை. சிறீலங்கா அரச படைகளின் செயற்பாடுகளையே அது நியாயப்படுத்தியுள்ளது. அரசியல் தீர்வு தொடர்பாகவும் தெளிவாக எதனையும் கூறவில்லை. இந்த அறிக்கையை அமுல்படுத்தும்படியே ஜெனிவாத் தீர்மான மும் கோரியுள்ளது. கண்துடைப்பிற்காக வெளியிடப்பட்டுள்ள இந்த அறிக்கையை நாம் முழுமையாக நிராகரிப்போம்.

**தீர்மானம் - 07**

***இனப்பிரச்சினைக்கு தீர்வாக 13வது அரசியலமைப்புத் திருத்தத்தில் முன்வைக்கப்பட்டுள்ள மாகாண சபை களை நிராகரிப்போம்.***

இலங்கை - இந்திய ஒப்பந்தமும், அதன் அடிப்படையிலமைந்த 13வது யாப்புத் திருத்தமும் தமிழ் மக்களின் சம்மதத்துடன் உருவாக்கப்பட்டவையல்ல. இது எந்த வகையிலும் தமிழ் மக்களின் அபிலாசைகளைத் தீர்க்க போதுமானதாக இல்லை. மக்களால் தேர்தெடுக்கப்படும் மாகாண சபைகளுக்கு சுயாதீன இருப்பு எதுவும் கிடையாது. மாறாக சனாதிபதி யினால் நியமிக்கப்படும் ஆளுனரிடமே முழுமையான அதிகாரங்களும் குவிந்து கிடக்கின்றன. தற்போதுள்ள கிழக்கு மாகாண சபையும் இதற்கு முன்னர் செயற்பட்ட வட-கிழக்கு மாகாண சபையும் இதற்கு மிகப்பெரும் சாட்சி. எதற்கும் உதவாத 13வது யாப்புத் திருத்தத்தினை எமது தலையில் கட்டி விட பல்வேறு சக்திகளும் முயற்சிக்கின்றன. இந்த முயற்சிகளை முழுமையாக நாம் நிராகரிப்போம்.

**தீர்மானம் - 08**

***தமிழ் தேசத்திற்கான சுயாதீன பொருளாதாரத்தை நாமே கட்டி எழுப்புவோம்.***

அபிவிருத்தி என்ற போர்வையில் தமிழ் தேசத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகள் கடந்த காலத்தில் நடை பெற்றதைப் போன்று எதிர்கால சிங்கள மயமாக்கல் நடவடிக்கைகளை மையப்படுத்தியதாகவே அமைந்துள்ளது.

சிங்கள தேசம் எமது பொருளாதார வளங்களைச் சூறையாடி வருகின்றது. சுண்ணாம்புக்கல் அகழ்வு, மணல் அகழ்வு, கடல்வளச் சுரண்டல், வனவள அழிப்பு என்பன இதற்கு சில உதார ணங்கள் இதற்கு மேலாக தமிழ் வர்த்தக ளிடமுள்ள வர்த்தக ஆதிக்கம் படிப்படியாக பறிபோதல், தொழில் பறிப்பு என்பவையும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளன.

எமது பொருளாதாரத்தை கட்டியெழுப்ப சிங்கள தேசம் உதவப் போவதில்லை. நாம் புலம் பெயர் மக்களின் உதவியுடன் எமது பொருளாதாரத்தை நாமே கட்டி யெழுப்புவோம். எமது மக்களை அவர்க ளது சொந்தக் காலில் நிற்கச் செய்வோம்.

**தீர்மானம் - 09**

***சிங்கள தேசத்தின் அதிகாரத்தை எம்மீது திணிக்க முயலும் படையினரை அகற்றக் கோருவோம்.***

தமிழ்த் தேசத்தினை சிதைத்து கொழும் பின் அதிகாரத்தை நிலை நிறுத்துவதற் காக எமது தாயகம் முழுவதும் சிங்கள தேசத்தின் படையினர் குவிக்கப்பட்டுள்ள னர். அவர்கள் எமது மக்களின் உள உறுதியைச் சிதைக்கின்றனர். எமது நிலங்களை ஆக்கிரமித்துள்ளனர். எமது வளங்களை சூறையாடுவதற்கும், எமது அடையாளத்தை அழிக்கவும் துணை நிற்கின்றனர். சிங்கள தேசத்தின் இந்தப் படைகள் எமது மண்ணிலிருந்து உடனடியாக அகற்றப்பட வேண்டுமென வலியுறுத்துவோம்.

**தீர்மானம் - 10**

***இடம்பெயர்ந்து வாழும் எமது மக்கள் சொந்த ஊருக்குத் திரும்ப குரல்கொடுப்போம்.***

வலிகாமம் வடக்கு, முல்லைத்தீவின் கேப்பாபுலவு, திருமலையில் சம்பூர் உட்பட மக்கள் மீளக் குடியமர அனுமதி மறுக்கப்பட்ட இடங்களில் மீளக் குடியமர உடனடியாக அனுமதிக்க வேண்டுமென வலியுறுத்துவோம்.

**தீர்மானம் - 11**

***சாதி, மத, பிரதேச, பால் பேதமற்ற தேசத்தை கட்டி எழுப்புவோம்.***

எம்மிடையே சாதி, மத, பிரதேச பால் வேறுபாடுகளை சில சக்திகள் திட்டமிட்டு வளர்க்க முயல்கின்றன. நாம் வலிமை யான தேசமாக இருப்பதை உள்ளிருந்து அழிக்கும் சூழ்ச்சியே இது. இந்த சூழ்ச் சிகளை முறியடித்து சாதி, மத, பிரதேச, பால் பேதமற்ற தேசத்தை கட்டி எழுப் புவோம். அத்தேசத்தில் சகல தொழிலாளர்களதும் சகல உரிமைகளும் உறுதிப்படுத்தப்பட உறுதிபூணுவோம். எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## தமிழ் தேசிய...

*(14ஆம் பக்கத் தொடர்ச்சி)*

ஒத்துழைப்பு மிக முக்கியம். ஆபத்துக்கள் உள்ளது. ஆனால் சரியான உதாரணம் கிறிஸ் பூதத்தை அரசு அறிமுகப்படுத்தியது மக்களை அச்சுறுத்துவதற்காகவே. அனால் மக்கள் அதற்கெதிராக போராட முனைந்தபோது அந்தப் பிரச்சினை முடிவுக்கு வந்தது. வெறுமேன ஒரு அரசியல் கட்சியும், சமுகம் சார்ந்தவர்களும் போராடுவது ஆபத்தானது. தமிழ் அரசியல் கைதிகள் எங்கள் சமுகத்தின் ஒரு அங்கம் அங்கத்திற்குள்ள ஒரு பிரச்சினை அதுமட்டுமல்ல எங்கள் சமுகத்திலுள்ள அனைத்துப்பிரச் சினைகளிற்கும் ஒன்றிணைத்து போராட்டம் நடத்த வேண்டும்.

*கடந்த கால ஜே.வி.பி போராட்டகாலங்க ளினில் வழங்கப்பட்து போன்று தமிழ் அரசியல் கைதிகள் மற்றும் போர்க்கைதிக ளிற்கும் பொதுமன்னிப்பளிப்பதென்பது சாத்தியமா?*

நியாயமான கோரிக்கை, ஆனால் எமது கைதிகளுக்கு அவ்வாறு பொது மன்னிப் பளிப்பதென்பது நடக்கும் விடயமல்ல, ஏனெனில் அவர்கள் தமிழர்கள். இனப் பிரச்சினைக்கு காரணம் இனவாதப்போக் கும், தமிழ் தேசத்தை அழிக்க வேண்டும் என்ற கோணத்தில் செயற்படும் ஒரு தரப்பு உள்ளமையும்தான். இங்கு தமிழர்க ளுக்கு ஒரு பங்கில்லை. தமிழர்களை மனிதர்களாகப் பார்க்கவில்லை. அரசிய லிலும் தமிழர்கள் வேறு. ஜே.வி.பி ஒரு சிங்கள தரப்பாக இருந்தாலும் அவர்க ளுக்கு வழங்கப்படும் பொதுமன்னிப்பு தமிழர்களுக்கு கிடையாது. அது சிங்கள தேசத்தின் சுபாவம். அந்த சுபாவம் இருப்ப தால்தான் இது இனப்பிரச்சினையாக உள்ளது. அல்லாது போனால் இது வேறு கோணங்களில் கணக்கிடப்பட்டிருக்கும். இது இனவாதப் பிரச்சினை.

*நில ஆக்கிரமிப்பிற்கு எதிரான போராட்டத்தின் போதும் தமிழ்தேசிய மக்கள் முன்னணியே பூனைக்கு மணி கட்டவேண்டியிருந்ததே?*

தமிழ்தேசிய மக்கள் முன்னணி நடந்து முடிந்த தேர்தலில் பெரியளவில் வெற்றி பெற முடியாது போனாலும் சில விடயங் களை பார்த்துக் கொண்டிருக்க முடியாது. எங்களால் முடிந்தவற்றை செய்வோம். கூட்டமைப்பும் பல போராட்டங்களை நடத்தியிருக்கின்றது அதற்கு எமது ஆதரவை தெரிவித்து அதில் நாமும் பங்குகொண்டும் இருக்கின்றோம். அதில் ஒரு குற்றச்சாட்டுமுள்ளது எங்களுக்கு அந்த பெயர் வந்து விடக்கூடாது என்பதற்காகவே அவர்கள் தொடர்ந்து பல போராட்டங்களை செய்தார்கள். பின்னர் அவற்றை கைவிடலாம் என நினைக்கலாம். ஆனால் எம்மை பொறுத்தவரை எமது பக்கம் விட்டுக்கொடுப்புக்கு இடமில்லை. இது எங்கள் இருப்பு தொடர்பான விடயம். அவ்வாறு கூட்டமைப்பு நினைத்தால் அவர்கள் அம்பலப்படுத்தப்படுவார்கள். நாம் கூட்டமைப்பிடம் கோரிக்கை விடுக்கின்றோம். பொது விடயங்களில் ஒருங்கிணைந்து செயற்படவேண்டும்.நாம் அதற்கு தயாராகவிருக்கின்றோம். ஆனால் நாம் போராட்டங்களை செய்ய முக்கிய காரணம் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவே. போராட்டங்கள் பிரச்சினைகளை வெளிக்கொணர்கின்றது. அதற்குத்தீர்வு காணவேண்டியது அரசியல் தரப்புக்கள். போராடி இவ்வாறு பிரச்சினை யுள்ளது என்பதை காண்பித்துக்கொண்டு, மீண்டும் மீண்டும் உண்டாக்கும் வகையில் பிழையான தீர்வை காண்பிப்பது பிரயோசனமற்றது. நிலப்பறிப்புக்கு காரணம் அடிப்படையில் தமிழ்தேசத்தை இல்லாமல் செய்வதற்கே. இன அழிப்பின் ஒரு அங்கமே நிலப்பறிப்பு. நிலப்பறிப்பிற்கு எதிராக போராடிக் கொண்டு 13வது திருத்தம் தீர்வு என்றால் அந்தப் பிரச் சினை தீர்க்கப்படாது. மாறாக சிங்களவர் செய்வது சரியானது என்பதை சட்டரீதியாக ஏற்றுக்கொள்வதாக அமையும். இந்த இரண்டாவது பிரச்சினையில் கூட்டமைப் புடன் பிரச்சினையில் உள்ளோம். போராட் டங்களில் இணைந்திருந்தாலும், தீர்வு விடயத்தில் மோசமான முடிவைவே காண்பிக்கின்றன. இதன் மூலம் எல்லாமே பூச்சியமாகவே முடிகின்றன.

*கிழக்கில் ஒப்பீட்டளவில் நில ஆக்கிரமிப்பு விவகாரம் அதிகமாகவுள்ள போதும் அவை பற்றி எவரும் வாய் திறக்க மறுக்கின்றனரே?*

சரியானதொரு கேள்வி, வடக்கை விடவும் கிழக்கில் நிலைமை மோசம். 60வருடப்பிரச்சினை. நீண்டகால பிரச் சினை என்பதால் உடனடி தேவையொன்று இல்லாமல் இருப்பது போன்ற தோற்றப்பா டுள்ளது. அது நிச்சயமாக பிழை. அது குறித்து கிழக்கிலும் எமது கவனத்தை செலுத்தவேண்டும். இது வெறுமனே அரசியல் கட்சிகளிடம் பாரம் கொடுத்து விட்டு மக்கள் ஒதுங்கி நிற்பதாக இருக்ககூடாது. மக்களுடைய பங்களிப்பும், மக்களுடைய முளுமையான ஈடுபாடும் இல்லாமல் ஒருபோதும் இந்த போராட்டங்கள் ஆக்கபூர் வமான அழுத்தங்களை ஏற்படுத்தாது.

*அரசு - கூட்டமைப்பு பேச்சுக்கள் அவ்வளவு தானா?*

கூட்டமைப்புடன் அரசு இனிமேல் பேசுவதற்கு ஒன்றுமில்லை. காரணம் கூட்டமைப்பு 13வது திருத்தத்தின் கீழ் போட்டியிட தயாரகவுள்ள ஒரு தரப்பு, அரசும் 13வது திருத்தத்தை தீர்வென்று கூறிக்கொண்டிருக்கின்றது. இனி பேச்சு வார்த்தைக்கு இடமில்லை. இதுதான் தீர்வென்று கூறுவதை எமது மக்கள் வாக்களித்த தரப்புக்களே ஏற்றுக்கொண் டிருக் கின்றன. ஆகவே தமிழ்தேசியம் என்ற கோணத்திலிருந்து மே 2009 பிற்பாடு படிப்படியாக மக்களுக்கு தெரியாத நோகாத வகையினில் 13வது திருத்தத்தை ஏற்கிற நிலைக்கு கூட்டமைப்பினர் வந்துள் ளனர். எனவே இனியும் பேச்சுவார்த்தை யில் பயனில்லை.

*ஜெனீவாவில் பிரேரிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் பரிந்துரைக்கு என்னவாயிற்று?*

ஜெனீவா தீர்மானம் பெரிய வெற்றி என்று கூறினார்கள். ஆனால் நாம் மட்டும்தான் அதில் ஒன்றுமில்லை என்பதைக்கூறி னோம். இன்று அந்த தீர்மானத்தின் பின்னரும் நிலப்பறிப்பு நடக்கின்றது. போர் கைதிகளும், அரசியல் கைதிகளும் சிறையிலிருக்கும்போதே கொலை செய்யப்படுகின்றார்கள் என்றால் அதன் பிரயோசனம் என்ன என்பதை எமது மக்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இது ஒரு பெரிய விடயம் என ஒரு தரப்பு கூறுவதால் அதனையொரு பெரிய விடயம் என மக்கள் ஏற்றுக்கொள்ள முடியாது. ஏற்றுக் கொள்ளக்கூடாது. அது ஆபத்தான தும் கூட. இந்த தீர்மானம் என்ன அடிப் படையில் கொண்டுவரப்பட்டது என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும். எங்கள் மக்கள் தொடர்ந்தும் ஏமாற்றப்படாமலிருப்ப தற்கு நாங்கள் தெளிவாக இருக்கின்றோம்.

மேலும் அந்த தீர்மானத்தின் போது கூட்டமைப்பு ஒரு ஆக்கபூர்வமான முடிவை எடுத்திருந்தால் எங்கள் பெயரை பயன்ப டுத்தி கொண்டு வர முனைந்த தரப்புக் கள் எமக்கு ஆதரவாக சில விடயங்க ளில் மாற்றத்தை ஏற்படுத்திக் கொண்டுவந் திருக்கும்.

*தமிழ் தேசிய மக்கள் முன்னணியினது எதிர்காலம்?*

படிப்படியாக மக்கள் மயப்படுத்தப்பட்ட ஓர் அரசியல் பயணமாகவே நாம் நடக்க விரும்புகின்றோம். ஒரு கொள்கையையும், போராட்டத்தையும் நம்பியிருந்த நிலையில் நாமாவே சில விடயங்களை அணுகும் நிலை ஏற்பட்டுள்ளதால், அடிமட்டத்திலி ருந்தே மெதுவாக கட்டியெழுப்ப வேண்டி யுள்ளது. ஆனால் அதை நாம் செய்கின் றோம், செய்வோம், எம்மை பொறுத்தவரை தேர்தலும், பதவியும் இலக்கல்ல, எமது மக்களை சரியான அரசியல் இலக்கில் கொண்டு செல்ல வேண்டும். கடந்த 3வருடங்களில் சரியான மாற்றம் ஏற்பட்டுள் ளது. ஆனால் இது போதாது ஒரு சில ஊடகங்கள் தவிர ஏனைய ஊடகங்கள் பங்களிக்கவில்லை. எம்மை பொறுத்தவரை மிகமோசமாக தேசத்தை காட்டிக்கொடுக்கும் தரப்புக்களுக்கு கொடுக்கும் முக்கியத்துவம் எமக்கு கொடுக்கப்படவில்லை அது எமக்கு ஒருபுறம் கவலையாக இருக்கின்றது. ஆனாலும் உண்மை வெல்லும் அது ஒருபோதும் தோற்காது. என அவர் தெரி வித்தார்.

# வரலாற்றுத்தவறிற்கு துணை போகாதீர்கள்!

## தமிழ்த் தேசியக்கூட்டமைப்பிற்கு தமிழ் சிவில் சமூகத்தின் வேண்டுகோள்!

தமிழர்கள் ஒற்றையாட்சி அரசியலமைப்பையும் அதன் கீழான மாகாண சபை முறைமையையும் தமது அரசியல் அபிலாசைகளைப்பூர்த்தி செய்யும் தன்மையற்றது என தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வந்துள்ளனர். எமது தாயகத்தில் கடந்த காலத்தில் இரண்டு முறையாக 1989 இலும் 2008 இலும் நடந்த மாகாண சபைத்தேர்தல்களை தமிழ்த் தேசிய நிலைப்பாட்டில் உள்ள கட்சிகள் புறக்கணித்திருந்தன. அரச சார்புத் தமிழ்க்கட்சியொன்றினால் சுயாதீனமாக நடத்த முடியாத மாகாண சபையை தமிழ்த் தேசிய நிலைப்பாட்டில் உள்ள கட்சியொன்று சுயாதீனமாக நடாத்த முடியாது என்பதில் சந்தேகமிருக்க முடியாது. ஆளுநரதும் மத்திய அரசாங்கத்தினதும் பிடியில் உள்ள மாகாண சபை முறைமையைக் கொண்டு ஒன்றும் செய்ய முடியாது என்பதை 1989 மற்றும் 2008இல் இடம்பெற்ற மாகாண சபைத் தேர்தல்களில் போட்டியிட்டுத் தம் வசம் வைத்திருந்த அப்போதைய முதலமைச்சர்கள் தெளிவாக அவ்வப்போது சொல்லியுள்ளனர்.

தேர்தல்களில் பங்குபற்றுவது என்பது ஓர் அரசியல் இலக்கை எய்துவதற்கான கருவியாக இருக்குமிடத்து அவற்றில் பங்குபற்றுவது சரியாக இருக்கும். மாறாக அவ்வாறாகப் பங்கெடுப்பதானது எடுத்துக் கொண்ட அரசியல் இலக்குகளுக்கு பாதகமாக இருக்குமிடத்து மாற்றுபாயங்களைப் பற்றிச் சிந்திப்பதும் எம்மீது திணிக்கப்படும் ஓர் தேர்தலை எவ்வாறு கையாள வேண்டும் என்பது தொடர்பில் முன்யோசனையுடனும் தூர நோக்குடனும் செயற்படுவதும் இற்றைக்காலத்தில் தமிழ்த்தேசிய அரசியலின் முன்னகர்வுக்கு அத்தியாவசியமானது.

தமக்கெதிராக இழைக்கப்படும் அட்டூழியங்களிற்கெதிராகத்தமது எதிர்ப்பைக்காட்டுவதற்கு மக்கள் தேர்தல்களைப்பயன்படுத்த வேண்டும் என்று அங்கலாய்க்கின்றமை விளங்கிக் கொள்ளக் கூடியதே. அத்தகைய எதிர்ப்பை, கோபத்தை வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பத்தைப்பயன்படுத்தல் என்பது ஒரு பக்கமிருக்க தேர்தலில் பங்குபற்றுவதனால் ஏற்படக் கூடிய அரசியல் பாதகங்களையும் கவனிக்காமல் விட முடியாது. இவ்விரண்டையும் சமாளித்துப்போகக்கூடிய வகையில் - தேர்தலில் பங்குபற்றுவதற்கான மாற்றுபாயங்களைப் பற்றி நிதானமாகச்சிந்தித்து, ஓர் விடயத்தின் பல்பரிமாணங்களை விளங்கிக் கொண்டு முடிவெடுப்பது தமிழ்த் தேசிய அரசியலில் ஆத்மார்த்தமான அக்கறையுள்ள அனைவரினதும் தலையாய கடப்பாடாகும். வெறுமனே அரச சார்புத்தமிழ்க்கட்சியொன்றை கிழக்கு மாகாண வெளிக்குள் விடக்கூடாது என்ற உடனடி அரசியல் தந்திரோபயத்திற்காக தமிழ் மக்களின் விட்டுக் கொடுக்கப்படவோ விலை பேசவோ முடியாத அடிப்படையான அரசியல் நிலைப்பாடுகளில் தொய்வு ஏற்படுவதை தமிழ் மக்கள் அனுமதிக்க ஒரு போதும் முன்வரமாட்டார்கள். எது எவ்வாறாக இருப்பினும் தேர்தல்களில் நேரடியாகப் பங்குபற்றுவது என்ற முடிவை தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு எடுத்துள்ளது என்ற கடினமான யதார்த்தத்தை கருத்தில் கொண்டு த.தே.கூ தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் முதன்மைப்படுத்த வேண்டிய விடயங்கள் தொடர்பில் சில பரிந்துரைகளைச் செய்ய விழைகின்றோம்.

1. தற்போதைய ஒற்றையாட்சி அரசியலமைப்பும் அதன் கீழான மாகாண சபை முறைமையும் நிராகரிக்கப்பட வேண்டும். 13ஆவது திருத்தமானது அரசியல் தீர்வுக்கான ஆரம்பப் புள்ளியாகக் கூட ஏற்கப்பட முடியாதது.

2. வடக்கு- கிழக்கு தமிழ் பேசும் மக்களின் தாயகமாகும். எந்தவொரு அரசியல் தீர்வும் இணைந்த வடக்குக்கிழக்கை ஓர் அலகாக அங்கீகரிப்பதாக அமைய வேண்டும். இவ்விடயம் தொடர்பில் குறிப்பாக முஸ்லிம் மக்களது நம்பிக்கையைப் பெற்றுக்கொள்வது முக்கியமானதாகும். தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் இணைந்து வேலை செய்தல் இவ்விரு சமூகத்தினதும் இருப்பைத்தக்க வைத்துக் கொள்வதற்கு இன்றியமையாததாகும்.

3. நீடித்து நிற்கக்கூடிய அரசியல் தீர்வொன்று தமிழர்களது தேசம், சுயநிர்ணய உரிமை ஆகியவற்றை அங்கீகரிப்பதனூடாகவே வரும். இவற்றை அங்கீகரிக்காத எந்தவொரு அரசியல் செயன்முறையும் பிரயோசனமற்றது.

4. ஜெனிவாத்தீர்மானம் நிறைவேற்றப் பட்டு நான்கு மாதங்கள் கடந்துள்ள நிலையில் தமிழருக்கெதிரான அநியாயங்களும் அடக்குமுறைகளும் பெருகியுள்ளனவே அன்றி குறையவில்லை. தமிழரது நிலங்கள் தொடர்ந்தும் ஆக்கிரமிக்கப்படுதல், தமிழ் அரசியல் கைதிகள் தொடர்ச்சியாகத் தடுப்பில் வைக்கப்பட்டிருத்தல், காணாமற் போனோர் தொடர்பில் தொடர்ச்சியாக எவ்வித முன்னேற்றமும் இல்லாதிருத்தல், தமிழ்த் தேசியத்தின் பொருளாதார, கலாசார அடிப்படைகள் சீரழிக்கப்படுதல், அன்றாட வாழ்க்கையில் இராணுவத்தினரின் தலையீடுகள் அதிகரித்தல், கல்வி, உயர் கல்வி, சுகாதாரம், விவசாயம், மீன்பிடி ஆகிய அனைத்துத்துறைகளினது தனித்துவங்களை சீரழிக்கும் வகையில் அரசியல்வாதிகளின் தலையீடு அதிகரித்தல், உயர் பாதுகாப்பு வலயங்கள் நிரந்தரமாக்கப்படல் (சம்பூர் உயர் பாதுகாப்பு வலயம் உட்பட), இடம்பெயர்ந்த மக்களின் குறிப்பிடத்தக்க தொகையினர் தொடர்ச்சியாக முகாம் வாழ்வில் இன்றும் அல்லற்படல், மீள்குடியேற்றப்பட்ட மக்களின் வாழ்வாதாரங்கள் புறக்கணிக்கப்படல் போன்றன தமிழ் மக்கள் தொடர்ச்சியாக அனுபவிக்கும் இன்னல்களுக்கு உதாரணங்கள். மேலும் தமிழருக்கெதிராக இழைக்கப்பட்ட இனப்படுகொலை மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பில் பொறுப்புக்கூறும் நடவடிக்கைகளிலும் எவ்வித முன்னேற்றமும் இல்லை. நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் அடிப்படையில் தமிழரது பிரச்சனைகளிற்குத் தீர்வு காண முடியாது என்பதை சர்வதேச சமூகம் உணர வேண்டும். அவ்வறிக்கையும் அதனை அமுல்படுத்துவதற்கான திட்டமும் சர்வதேசத்தை ஏமாற்றும், நேரத்தை வாங்கும் முயற்சியே. மேலும் அவ்வாறாகக் கிடைக்கும் நேர இடைவெளிக்குள் தமிழர்களது இருப்பை முற்றாக இல்லாதொழிப்பதற்கு அரசாங்கம் திட்டமிடுகின்றது என்பதனைச்சர்வதேச சமூகம் புரிந்து கொள்ள வேண்டும்.

மேற்படி விடயங்களை வலியுறுத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இத்தேர்தலில் பங்குபற்றுவதனூடாகத் தமிழர்கள் பிரிந்த வடக்குக் கிழக்கை அங்கீகரித்து விட்டனர், மாகாண சபை முறைமையை ஏற்றுக் கொண்டு விட்டனர் என்ற வாதத்தின் செறிவை ஓரளவேனும் குறைக்கலாம் என எண்ணுகின்றோம். மாகாண சபை முறைமையையும் பிரிந்த வடக்குக் கிழக்கையும் நாம் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை சர்வதேச சமூகத்திற்கு உணர்த்தல் இன்றியமையாததாகும்.

அதி வணக்கத்துக்குரிய கலாநிதி. இராயப்பு ஜோசப்,
மன்னார் கத்தோலிக்கப் பேராயர்.

செல்வி சாந்தா அபிமன்னசிங்கம்
ஜனாதிபதி சட்டத்தரணி, யாழ்ப்பாணம்.

பேராசிரியர். க. கந்தசாமி
விஞ்ஞான பீடாதிபதி யாழ் பல்கலைக்கழகம்.

பேராசிரியர். இ. விக்கினேஸ்வரன்,
கணித, புள்ளிவிபரவியற்றுறைப் பேராசிரியர், உப தலைவர், அனைத்துப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்.

திரு. வி. கமலதாஸ்
மட்டு.மாவட்ட சிவில் சமூக ஆர்வலர்கள் கூட்டமைப்பு

திரு. எஸ். அரசரட்ணம்
முன்னாள் வங்கியாளர் அம்பாறைத் தமிழர் மகா சபை

பேராசிரியர். சி.க. சிற்றம்பலம் - ஓய்வுநிலைத் தகைசால் வரலாற்றுப் பேராசிரியர், தலைவர்.இந்து சமயப் பேரவை

பேராசிரியர். இ. குமாரவடிவேல்
சிரேஷ்ட பௌதிகவியல் பேராசிரியர், முன்னாள் பதில் துணைவேந்தர், யாழ் பல்கலைக்கழகம்.

பேராசிரியர். வி.பி. சிவநாதன்,
பீடாதிபதி, கலைப்பீடம், யாழ் பல்கலைக்கழகம்.

பேராசிரியர். ஆ. ச. சூசை.
புவியியற்றுறை, யாழ் பல்கலைக்கழகம

திரு. து. இராமகிருஷ்ணன்
செயலாளர், அம்பாறை மாவட்ட தழிழர் சங்கம்.

திரு. பொன். செல்வநாயகம்
ஓய்வு பெற்ற கோட்டக் கல்விப் பணிப்பாளர், பாண்டிருப்பு

திரு. க. சூரியகுமரன்
யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளனப் பிரதிநிதி.

திரு. தி. இராஜன்
மட்டு.மாவட்ட சிவில் சமூக ஆர்வலர்கள் கூட்டமைப்பு

திரு. த. கலையரசன்
தவிசாளர், பிரதேச சபை, நாவிதன்வெளி

திரு. அ. கணேசமூர்த்தி.
ஓய்வு நிலை சுகாதாரக் கல்வி உத்தியோகஸ்தர், நற்பிட்டிமுனை

வணபிதா. கி. ஜெயக்குமார்,
பங்குத் தந்தை, ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணம்

திரு. த. குருகுலராஜா
ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர், கிளிநொச்சி

திரு. சி. கந்தசாமி
சிரேஷ்ட சட்டத்தரணி, பருத்தித்துறை

வைத்திய கலாநிதி. (திருமதி). சி. உதயகுமார்.
பொதுவைத்திய நிபுணர், யா.போதனா வைத்தியசாலை.

வைத்திய கலாநிதி. சி. சிவன்சுதன்.
பொதுவைத்திய நிபுணர், யா.போதனா வைத்தியசாலை.

திரு. அ. பஞ்சலிங்கம்
ஓய்வு பெற்ற அதிபர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி.

திரு. சிவசுப்பிரமணியம் - நிர்வாகப் பிரதிநிதி, வட மாகாண கடற்றொழிலாளர் கூட்டமைப்பு

வைத்திய கலாநிதி. ப. சத்தியலிங்கம்
வைத்திய அதிகாரி, வவுனியா

வைத்திய கலாநிதி. சி. குமாரவேள்
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

வணபிதா. எஸ். ஜெயபாலன் குரூஸ்
பங்குத் தந்தை, வங்காலை, மன்னார்.

திரு. தி. இராசரத்தினம்,
ஓய்வு பெற்ற பிரதம லிகிதர், நற்பிட்டிமுனை

திரு. அ. இராசகுமாரன்,
விரிவுரையாளர், ஆங்கில மொழிப் போதனை நிலையம், தலைவர், யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்.

திரு. நா. இன்பநாயகம்
தலைவர், கிராமிய உழைப்பாளர் சங்கம்
யாழ் இணைப்பாளர், தேசிய மீனவர் இயக்கம்

திரு. கா. சந்திரலிங்கம்
ஓய்வு பெற்ற அதிபர், அம்பாறைத் தமிழர் மகா சபை

திரு. வே. அரசரட்ணம்
முன்னாள் கூட்டுறவு உதவி ஆணையாளர்
அம்பாறைத் தமிழர் மகா சபை

திரு. க. ரூபன்
மட்டு. மாவட்ட இளைஞர் தன்னார்வலர்கள் அமைப்பு

திரு. பா. சரவணபவன்
மட்டு. மாவட்ட இளைஞர் தன்னார்வலர்கள் அமைப்பு

வைத்திய கலாநிதி சு. ரவிராஜ்
சத்திரசிகிச்சை நிபுணர், சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ் பல்கலைக்கழகம்

வைத்திய கலாநிதி. செ. கண்ணதாசன்
சிரேஷ்ட விரிவுரையாளர், மருத்துவ பீடம், யாழ் பல்கலைக்கழகம்

திரு. வி. புவிதரன் - சிரேஷ்ட சட்டத்தரணி, கொழும்பு.

திரு. கோ. ரஜீவன்
மட்டு. மாவட்ட சிவில் சமூக ஆர்வலர்கள் கூட்டமைப்பு

திரு. ப. நிஷாந்தன்
மட்டு. மாவட்ட சிவில் சமூக ஆர்வலர்கள் கூட்டமைப்பு

கலாநிதி. து. குணராஜசிங்கம்
சிரேஷ்ட விரிவுரையாளர், உடற்றொழியல் துறை, மருத்துவ பீடம், யாழ் பல்கலைக்கழகம்

வைத்திய கலாநிதி. சு. பிரேமகிருஷ்ணா.
உணர்வழியியல் வைத்திய நிபுணர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

திரு. எஸ். ஜீவநாயகம்
தலைவர், கரைச்சி கிராமிய அபிவிருத்தி சங்கங்களின் சமாசம், கிளிநொச்சி

வைத்திய கலாநிதி. பூ. லக்ஷ்மன்
இருதய நோய் சிகிச்சை நிபுணர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

திரு. சி. சுந்தரேஸ்வரன்
சிரேஷ்ட வங்கியாளர், யாழ்ப்பாணம்.

வணபிதா. இ. இரவிச்சந்திரன்
இயக்குநர், யாழ் மறைமாவட்ட இளைஞர் ஆணைக்குழு, யாழ்ப்பாணம்

திரு. வி. சிறிதரன்,
சிரேஷ்ட விரிவுரையாளர், கணக்கியற்றுறை, யாழ் பல்கலைக்கழகம்

கலாநிதி. பா. நிமலதாசன்,
சிரேஷ்ட விரிவுரையாளர், கணக்கியற்றுறை, யாழ் பல்கலைக்கழகம்

திரு. ஆ. சரவணபவன்,
விரிவுரையாளர், மனித வளத் துறை, யாழ் பல்கலைக்கழகம்

வைத்திய கலாநிதி. ச. சுதாகரன்,
உளவள மருத்துவப் பிரிவு, வவு.பொது வைத்தியசாலை.

திரு. எஸ். ஜனார்த்தனன்
யாழ் பொருளியலாளர்கள் சங்கம்

திரு. தி. விக்கினேஸ்வரன்
விரிவுரையாளர், அரசறிவியற்றுறை, யாழ் பல்கலைக்கழகம்.

திரு. சு. திருச்செந்தூரன்
விரிவுரையாளர், அரசறிவியற்றுறை, யாழ் பல்கலைக்கழகம்.

திரு. செ. ரவீந்திரன்
விரிவுரையாளர், புவியியற்றுறை, யாழ் பல்கலைக்கழகம்.

திரு. எஸ். பீஷ்மன்
யாழ் பொருளியலாளர்கள் சங்கம்

வைத்திய கலாநிதி. இ. சிவசங்கர்
யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம்.

திரு.சி.பி. சத்தியசீலன்
சமூக செயற்பாட்டாளர், வவுனியா

திரு. எஸ். ஜெயச்சந்திரன்
முகாமையாளர், ஆசிரிய வாண்மை விருத்தி நிலையம், வவுனியா

திரு. ம. கபில்நாத்,
மனித உரிமைச் செயற்பாட்டாளர், வவுனியா.

திரு. சி. அ. ஜோதிலிங்கம்
சட்டத்தரணி, அரசியல் ஆய்வாளர், பாடசாலை ஆசிரியர்

திரு. பி. நி. தம்பு
சிரேஷ்ட சட்டத்தரணி, கொழும்பு.

திரு. கு. குருபரன்
விரிவுரையாளர், சட்டத்துறை யாழ் பல்கலைக்கழகம், சட்டத்தரணி

வைத்திய கலாநிதி. கே. இளங்கோஞானியர்
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

வைத்திய கலாநிதி. க. சுரேஷ்குமார்
பெண்ணியல் மற்றும் மகப்பேற்று சிகிச்சை நிபுணர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

வைத்திய கலாநிதி. ப. நந்தகுமார்
சுகாதார வைத்திய அதிகாரி, தெல்லிப்பளை

வைத்திய கலாநிதி. சு. மோகனகுமார்
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

திரு. ஜே. தோ. சிம்சன்
ஆசிரியர், மன்னார்.

வைத்திய கலாநிதி. ஏ. கமலநாதன்
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

திரு. மயில்வாகனம் கிரேஷியன்
சட்டத்தரணி, கிளிநொச்சி.

திரு. பொ. கிருஷாந்தன்
சட்டத்தரணி, திருகோணமலை.

திரு. எஸ். இருதநாயகம்
சூசையப்பர் கடற்றொழிலாளர் சங்கம், மாதகல்

அருட்திரு ஜெரால்ட் றொசய்ரோ - (OMI) கொழும்பு

வைத்திய கலாநிதி. ச. பகீரதன்
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

வைத்திய கலாநிதி. ஞா. ஹைறின் ஆர்க்
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

திரு. சு. அரிகரன்,
முன்னாள் தலைவர், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், யாழ் பல்கலைக்கழகம்.

திரு. வே. பவாநந்தன்,
தலைவர், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் யாழ் பல்கலைக்கழகம்.

திரு. ப. தர்சானந்த்,
செயலாளர், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், யாழ் பல்கலைக்கழகம்.

திரு. க. ஜெனமஜெயமேனன் - தலைவர், கலைப்பீட மாணவர் ஒன்றியம், யாழ் பல்கலைக்கழகம்.

திரு. ப. சபேஸ்குமார், - தலைவர், வணிக பீட மாணவர் ஒன்றியம், யாழ் பல்கலைக்கழகம்.

திரு. ஏ. பிரசன்னா - தலைவர், விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியம், யாழ் பல்கலைக்கழகம்.

திரு. சஞ்சீவன் - தலைவர், விவசாய பீட மாணவர் ஒன்றியம், யாழ் பல்கலைக்கழகம்.

திரு. செ. ஜனகன் - தலைவர், மருத்துவ பீட மாணவர் ஒன்றியம், யாழ் பல்கலைக்கழகம்.

திரு. சேவியர் வில்பிரட் ஜெயரூபன்
நில அளவையாளா, யாழ்ப்பாணம்

வைத்திய கலாநிதி. கு. பிரதீபன்
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்

திரு. திருவேணி சங்கமம்
ஓய்வு பெற்ற மாகாண சபை உத்தியோகஸ்தர், காரைதீவு, அம்பாறை

திரு. அ. றொ. மதியழகு
தலைவர், மாதகல் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்

திருமதி. ஜொஸ்மின் ஜெயராணி
செயலாளர், மாதகல்மேற்கு மகளிர் அபிவிருத்திச் சங்கம்

வைத்திய கலாநிதி. எஸ். சிவதாசன்
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

வைத்திய கலாநிதி. அ. யோ. தனேந்திரன்
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

வணபிதா. எஸ். எம். பி. ஆனந்தகுமார்
செயலாளர்.யாழ்.மறைமாவட்ட குருக்கள்மார் ஒன்றியம்.

வைத்திய கலாநிதி. ம. வாசுதேவன்
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

வைத்திய கலாநிதி. செ. குணதீசன்
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்

திரு. அ. சிற்றம்பலம்
தலைவர், மாதகல் விவசாய சம்மேளனம்

திரு. செ. கிறிஸ்துராசா
தலைவர், தூய லூர்துமேரி கடற்றொழிலாளர் சங்கம்

திரு. ஆர். ஜோன்பிள்ளை - (நானாட்டான்)

வணபிதா. அகஸ்ரின் புஸ்பராஜ்
பங்குத் தந்தை, நானாட்டான், மன்னார்

வணபிதா. எல். ஞானாதிக்கம்
பங்குத் தந்தை, வஞ்சியன்குளம்

திரு. க. சுகாஷ் - (சட்டத்தரணி, யாழ்ப்பாணம்)

திரு. தி. அர்ச்சுனா - (சட்டத்தரணி, யாழ்ப்பாணம்)

திரு. அ. சந்தியாப்பிள்ளை
யாழ் மறைமாவட்ட கத்தோலிக்கப் பொதுநிலையினர் கழகம்

**(மேலே கையெழுத்திட்டோர் தமது தனிப்பட்ட நிலைப்பாட்டிலிருந்து கையெழுத்திட்டனரன்றி அவர்களது உத்தியோகபூர்வ நிலையிலிருந்து அன்று)**

இவ்விதழ் இல.43, 3ஆம் குறுக்கு தெரு, யாழ்ப்பாணம் எனும் முகவரியைச் சேர்ந்த திரு.செல்வராசா கஜேந்திரன் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்படுகின்றது.